ஓம்

# ஸ்ரீ ஞானனந்த சேவா சமாஜம்

## SRI GNANANANDA SEVA SAMAJAM



270·6
ஞானன
SLIPR.

சிறப்பு மலர் — 1980

With best compliments from

# Sri Lanka
# Asbestos Products Ltd.

(Manufacturers of Asbestos, Cement, Roofing & Ceiling Sheets)

**52, Baseline Road,**
**COLOMBO-9.**

Phone: 93694

Grams: SLAPONITE

# ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம்

## சிறப்பு மலர்

27.0.6
SL/PR

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
இல: 7-57
கொழும்பு 6

4416

கொழும்பு
(ஸ்ரீ லங்கா)

**1980**

# சமர்ப்பணம்

அன்பே சிவம்; சிவமே அன்பு. அதேபோல குருவே தெய்வம்; தெய்வமே குரு. தெய்வமாக மதிக்கப்படும் குருநாதர்கள் அவதார புருஷர்களே. அவதாரம் என்பது கீழிறங்கி வருதல் எனப் பொருள் படும். இறைவனது திருவருள் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு அவதாரபுருஷர்கள் மூலமாகக் கீழிறங்கிவருகிறது.

மலயமாருதம் என்ற காற்று வீசும்போது சந்தன மரக்காட்டிற்குப் பக்கத்திலுள்ள காட்டு மரங்களும் சந்தன மரங்களாக மாறுகின்றன. அவற்றுள் எல்லாமரங்களும் மாறுவதில்லை. புளியமரம் போன்ற வைரம் பாய்ந்த மரங்கள் சந்தன மரங்களாக மாறுவதில்லை. இதே போன்று அவதாரபுருஷர்களுடைய வருகையை உணர்ந்த ஒரு சிலர் தான் அவ தார புருஷர்களுடைய திருவருளுக்காளாகின்றார்கள். மற்றையோ ரெல்லாம் வைரம் பாய்ந்த புளியமரங்களேதான்.

இப் பூவுலகில் வாழ்ந்த காலம் இவ்வளவு என்று கணக்கிட்டறிய முடியாத காலம் ஆன்மாக்களை ஈடேற்றுதற் கென்றே வாழ்ந்தவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள். சுவாமிகளுடைய திருப்பாதம் ஈழத்திலும் படிந்தபடியினால் போலும் ஈழத்திலும் சுவாமிகளுடைய பக்தர்கள் கணிசமான அளவு இருக்கின்றார்கள். இதற்குக் காரணராக அமைந்தவர்கள் சுவாமிஜீயினுடைய பிரதம சீடர் ஸ்ரீ ஹரிதாஸ் சுவா மிகள்.

சுவாமிகளுடைய அரிய முயற்சியால் ஈழத்தில் ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜம் உருவாகி அரிய பணிகளைப் புரிந்து வருகிறது. அப்பணி களுள் தலையாய பணியாக ஆண்டுதோறும் மலர் ஒன்றினை வெளி யிட்டு வருகிறது. இவ்வாண்டும் அம்மலர் மலர்கின்றது. அதனை ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளுடைய திருப்பாதங்களுக்குச் சமர்ப்பிப்பதில் ஞானானந்த சேவா சமாஜம் மகிழ்கின்றது.

# பொருள் அடக்கம்


| | |
|---|---|
| ஓம் ஸ்ரீ ஞானானந்தாய நம: சற்குரு ஞானானந்தர் துணை | 1 |
| ஞானச்சுடர் விளக்கே போற்றி | 2 |
| சரணம் சரணம் குருதேவா | 5 |
| **He could make Rainbow out of Granite** | 8 |
| அருள் பொங்கும் ஞானச்சுடர் | 11 |
| எங்கள் குருநாதன் | 12 |
| அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே | 13 |
| ஞானகுரு | 15 |
| திருக்கோவலூர்த் தபோவனம் | 16 |
| இந்துநேசியாவில் இந்துக்கள் | 17 |
| அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத்தள் | 21 |
| பொய்கையாழ்வார் காட்டும் சமரசம் | 23 |
| முருகனும் சம்பந்தரும் | 27 |
| பண்டைத்தவம் | 31 |
| சேக்கிழார் கண்ட செம்பொருள் | 35 |
| ஞானப்பிரபு – ஞானானந்தகிரி | 40 |
| கற்பூரச் சுடர் | 42 |
| அன்னை பராசக்தியே அருட் குருவாய் அமர்ந்துள்ளார் | 48 |
| சத்குரு பாத மகிமை | 50 |
| ஸ்ரீ ஞானகுரு | 54 |
| ஸ்ரீ சத்குரு ஞானானந்த நவரத்னமாலை | 57 |
| தீப ஜோதியாய் வருவாய் | 58 |
| ஸ்ரீ ஸத்குரு ஞானானந்தகிரி ஸ்வாமி அஷ்டோத்ரம் | 59 |
| மங்களம் | 61 |
| **Swami Gnanananda as seen by a western disciple** | |

# அருளாசி

**சுவாமி ஹரிதாஸ் கிரி (குருஜி)**

பன்னரும் வேதங்கள் படித்து உணர்ந்தாலும் குருவருள் இல்லேயேல் திருவருள் இல்லே என்பதே சித்தாந்தம். வேதாந்தமும்கூட. இறைவனுடைய திருவடிகளிலே அசையாத பற்றுக்கொண்டு அவன் திருவடி நிழலி லேயே வாழவேண்டும் என்று எண்ணம்கொண்ட மக்கள் ஞானிகளே தேடியலேந்து அவர்கள் காட் டும் சன்மார்க்கமே குருவழியாகக் கொண்டு அவ்வழி பின் பற்றி ஆண்டவன் அருள் பெறும் அடியார்கள் அன்றும் இன்றும் என்றும் இருந்து சிறப்பெய்துவது ஈழநாடு.

ஈழத்து அடியார்கள் ஆன்மீக பெருமக்கள் துணேகொண்டு சத்குரு ஸ்ரீ ஞானனந்தரின் அருள்வழி நின்று தொடர்ந்து ஆன்மீக தொண்டினே ஆற்றிவரும், ஸ்ரீ ஞானனந்த சேவா சமாஜம் இவ்வாண்டும் எல்லாம் வல்ல சத் குருவினுடைய ஜயந்தி விழாவினே சிறப்புற நடத்தி அதன் காரணமாக சமயத்திற்கும் சமூகத்திற்கும் பெரும் தொண்டாற்ற இசைந்திருப்பது அவன் அருளே.

ஸ்ரீ ஞானனந்த சேவா சமாஜத்தின் நிர்வாகஸ்தர்களும் அவர்கள் பணியும் மற்றும் ஈழத்து வாழ் மக்களின் ஆதரவும் தொண்டும் ஓங்குக!
ஓங்கி வளர்க! வளர்ந்து வாழ்க!
ஓம் சாந்தி.

## ஓம் ஸ்ரீ ஞானானந்தாய நம:
## சற்குரு ஞானானந்தர் துணை

சேஷாத்திரி சுவாமிகள் - தபோவனம்

மந்தஸ் மித முகாம் போஜம் மஹனீய குணார்ணவம்,
மதுரா பாஷிணம் சாந்தம் ஸர்வபூத தயாபரம்,
பக்த வாத் ஸல்ய ஜலதிம் பரமானந்த விக்ரஹம்
ஞானானந்தம் ப்ரபன்னோஸ்மி நிர்மல ஞானஸித்தயே.

பிரும்மா, விஷ்ணு, சிவன், சக்தி இவர்களெல்லா சக்தியும் ஒன்றாய் இணைந்த சக்தியாய் பூலோகத்தில் அவதரித்து உலகில் உள்ள மக்களுக்கெல்லாம் இறைவனது அருட்கடாட்சத்தை வழங்கி வேண்டுவோர்க்கு வேண்டும் வரங்கள் ஈந்து தன்னை நாடி வருவோர்க்கு பசிப்பிணி, நோய், வினைகள் எல்லாம் தீர்த்து, தபோவனத்தில் அவர்களைத் தங்கச் செய்து, மனச்சந்தோஷத்தையும், சாந்தியையும் பெற்றுச்செல்ல அருள் புரிவார்கள் சுவாமிகள். ஞானப்பிரபுவான சுவாமிகளைப் பல தபோதனர்களும் ஞானிகளும் பல இடங்களில் இருந்து வந்து தரிசித்து முக்திநிலையடைந்துள்ளனர்.

> ''அடிமுடிகாண மண்ணை அகழ்ந்து மேல்பறந்தார் காணுக்
> கடவுளைக் கண்முன் இங்கே காணுமின்! சித்தலிங்க
> மடமதில் தபோவனத்தில் மா ஞானானந்தனென்ன
> உடலெடுத்து லவுகின்றான் உலகவர் காண வந்தே!''

எமது அண்ணல் ஞானானந்த சுவாமிகள் இமயம் முதல் குமரி வரை பல காடுகளிலும் குகைகளிலும் தங்கி உலக க்ஷேமத்திற்காகத் தவம் இயற்றியவர். கோயம்புத்தூருக்குப் பக்கத்தில் உள்ள சூலூரில் இருந்து தபஸ் பண்ணினார். சேலத்தில் ஏற்காடுமலைகளிலும் தவம் புரிந்துள்ளார். ஆட்டையாம்பட்டியில் வேலாநத்தத்தில் ஆச்சிரமம் அமைத்துத் தங்கியிருந்தார். சுவாமிகள் அட்சய பாத்திரமாக சித்தலிங்க மடத்தில் இருந்துவந்தவர்களின் பசியாற்றி வந்துள்ளார்.

அன்னம்பாலிக்கும் அன்ன பூர்ணேஸ்வரியாகத் திகழ்ந்தார். பகவான், தபோவனத்தில் எவரெவர்க்கு எந்த எந்தத் தெய்வமாகக் காட்சியளிக்க வேண்டுமோ அவ்வாறு காட்சியளித்துள்ளார். சிவனாக, சக்தியாக, நாராயணனாக, காளியாக, தீபஜோதியாக விளங்கினார்.

சுவாமிகள் கேரளாவில் புனலூரில் தங்கி அருட்கடாட்சம் வழங்கியுள்ளார். சபரிமலையிலும் பல காலம் தங்கி தவமியற்றியுள்ளார். அனாதைகளுக்கும், ஆதரவற்றவர்களுக்கும் இருக்க இடமளித்துத் தபோவனத்தில் காப்பாற்றியுள்ளார். அல்லல்பட்டு அவல நிலையில் வந்தவர்களுக்கெல்லாம் அடைக்கலமளித்து அருள் பொழிந்துள்ளார். தபோவனஜோதியைப் பல ஆங்கிலேயர்களும் வந்து தரிசித்து, சிலர் அங்கேயே தங்கி அருள் பெற்றுள்ளனர். பல தபஸ்விகளுக்கு உபதேசம் கொடுத்து சிலருக்கு சன்னியாசமும் அளித்துள்ளார். சுவாமிகள் சில நேரங்களில் கிருஷ்ண அவதாரமாக, பால கிருஷ்ண ஸ்வரூபமாகக் காட்சி கொடுத்துள்ளார். யாரிடமும் காருண்யம் காட்டிப் பல அருளுரைகள், பொன் மொழிகள் கூறுவார். அநேக சன்னியாசிகளுக்கும் ஞானமார்க்கத்தை விளக்கியுள்ளார். தபோவனம் என்ற புனித பூமியை வந்து தரிசித்தவர்களுக்கு எத்தனையோ ஜென்மங்களில் செய்த பாபம் நீங்கி புண்ணிய ஆத்துமாக்களாக மாறியுள்ளனர்.

தென்பெண்ணையாற்றில் ஸ்நானம் செய்து, குருநாதரைத் தரிசித்து நல்லஅருட்கடாட்சம் பெறுவோம். சுவாமிகள் கேரளக் காடுகளில் தவமியற்றியபொழுது யானைகளும் புலிகளும் அநேக சர்ப்பங்களும் சுவாமியின் பக்கத்திலமர்ந்து மலர் தூவி பூஜை செய்து அச்சிவ ஜெந்துக்களும் அருள் பெற்றுள்ளன. பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் உள்ளோரும் மனதார நினைத்து வணங்கும்போது, அவரவர்களுக்குக் காட்சி தந்து அவர்களது துன்பங்களை நீக்கி இரட்சித்தருள் புரிகின்றார். குருநாதரின் அருட்கருணையே கருணை.

> ''அண்ணாமலையின் அருளொளியாம்
> விண்ணும் மண்ணும் அளந்தவராம்
> எண்ணும் ஏகாக்ஷர போதகராம்,
> எங்களைக் காத்திட வந்தவராம்''

# ஞானச்சுடர் விளக்கே போற்றி

ஸ்ரீமதி மீனாக்ஷி பொன்னுத்துரை

உலகத்தை உய்ய வைக்க வந்துதித்த மகான்கள்தான், ஞானிகள் என்று போற்றப்படுபவர். இந்த மஹான்கள் கீதாவாக்கியத்திற்கேற்ப எப்போதெல்லாம் அறம் அழியப் பார்க்கின்றதோ அப்போதெல்லாம், தர்மத்தை உலகில் நிலைநாட்ட வருபவர்கள்-தமக்கென வாழாது பிறர்க் குரியாளராய் வாழ வந்த பெரியோர்கள். உலகம் பலவிதம்-உலகம் எப்பொழுதும் மாறிக்கொண்டே இருக்கும் தன்மை கொண்டது. இது ஆன்றோர் வாக்கு-இதனைக் கருத்தில் கொண்ட தொல்காப்பியர் என்னும் பெருந்தகை-'உலகம் என்பது' உயர்ந்தோர் மாட்டே' என்று பகர்ந்தார். இந்த உலகம் உயர்ந்தவர்களைச் சார்ந்துதான் இயங்குகின்றது-இந்த உயர்ந்தவர்கள் யார்? கோடானுகோடி மக்கள் பிறந்தும் இறந்தும் விடுகிறார்கள். ஆனால் கார்த்திகைப் பிறையைக் காண்பது போல எங்கோ ஓர் மஹான் அவதரிக்கின்றார்—பிறக்கிறார்—உலக மக்களின் துயரத்தைப் போக்கி, வாழ்வெனும் மையலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் மானிட வர்க்கத்திற்கு நல்வழிகாட்டி, அஞ்ஞானம் என்ற இருளில் அவர்கள் தள்ளாடும் நேரத்தில், அவர்களைக் கைதூக்கி அணைத்து அவர்கள் அகக்கண்களைத் திறந்து-ஞான ஒளியை அவர்களுக்கு காட்டக்கூடிய வல்லமை இம்மகான்களுக்குத்தான் உண்டு என்பது யாவரும் அறிந்த உண்மை.

சம்சாரம் என்னும் சாகரத்தில், உலக வாழ்க்கை யெனும் தோணியை நடாத்திக் கொண்டுபோய், கரைதெரியாது; தள்ளாடும் நேரத்திலே இம்மகான்கள் - மக்களைக்கரையேற்றும் 'கலங்கரை விளக்கமாக'த் திகழ்கிறார்கள்.

இறைவன் திருவடியில் ஸர்வகாலமும் நிலவும் இந்த ஞானமூர்த்திகள் இல்லாவிட்டால் - மனித வர்க்கம் - விலங்குகளாகவே மாறிவிடுமென்பது நிச்சயம் - மனம் போன போக்கில் வாழ்ந்து, பாஹ்ய ப்ரபஞ்சத்தில் ஸதா இன்பங்களை நுகரத்துடிக்கும், மனிதனை - ஐம்புலன்களுக்கு அடிமையாக்காது, மனிதனுள் மறைந்து கிடக்கும் காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்னும் ஆறு பகைவர்களையும் அடக்கி, மனிதனை தெய்வீகத் தன்மையை அடையச் செய்பவர்கள் இம்மகான்கள்.

மனிதனுள் மாத்திரமே, விலங்குத் தன்மை, மனிதத்தன்மை, தெய்வத்தன்மை யென்னும் மூன்று குணங்களும் ஒருங்கே உலவுவதைக் காணலாம். இதனைத்தான் தமோகுணம், ரஜோகுணம், ஸத்வகுணம் என்று உபனிஷதங்கள் கூறுகின்றன. சங்ககாலத் தமிழன் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றான். வேதகாலத்திலோ 'லோகாஸமஸ்தா ஸுகினோ பவந்து' என்று உலகமெல்லாம் இன்பமே சூழ்கவென்ற ஒருமைப்பாட்டை நினைவுறுத்தினான். வேதங்களின் ஸாரத்தை-அதாவது மெய்ப்பொருளின் தத்துவங்களை — கதைகள்மூலமாக இயம்பிய உபநிடதங்களில் ஓர் அரியபெரிய வேண்டுகோளைக் காணலாம்.

ஓம் அஸதோ மா ஸத்கமய
தமஸோர் மா ஜோதிர்கமய
ம்ருத்யோர் மா அம்ருதம்கமய

முதலாவது வாக்கியத்திலே அஸத்தற நீங்கி ஸத்தே வருக வென்பதுதான்—அநித்யமான உலகிலே நித்யமான பொருளைக்காண வேண்டும் இறைவா-.

இரண்டாவது வாக்கியத்திலே இருளற நீங்கி ஒளியே வருக. இங்கு மாயையின் கையில் அஞ்ஞானம் என்ற இருளில் தவிக்கும் மனிதன் தனக்கு உண்மையான ஒளியைக் காட்டவேண்டுமென வேண்டுகிறான்.

மூன்றாவதாக வீழ்வது நீங்கி வாழ்வே வருகவென வேண்டுகிறான். வீழ்வது என்பது இறப்பது. பிறப்பிருந்தால் இறப்பும் பின் தொடரும். அதனால் மரணமில்லாப் பெருவாழ்வை அருள்வாய் என வேண்டுகிறான். இத்தகைய உன்னதக் கொள்கையில் திளைத்தவர்கள் நம் ஆன்றோர்கள். நம்மிலும் பார்க்க அன்பிலும், அறிவிலும் அறத்திலும் சாலச் சிறந்து விளங்கியவர்கள்.

இம் மகான்களின் வாழ்க்கைச் சரித்திரம் நமக்கு வழிகாட்டியாக மாத்திரம் இல்லாது, சலனப்படும் நம் மனத்தை அடக்கி — வாழ் வெனும் போர்க்களத்தில் நாம் புறம் காட்டி ஒடி விடாது, இறைஉணர்வை நம்மில் புகுத்தி வாழ்க்கையை ஓர் அறத்தின் விளக்கமாக மாற்றும் சக்தி வாய்ந்ததாகி விடுகிறது. ''நாமார்க்கும்குடியல்லோம் நமனையஞ்சோம் நரகத்திலிடர்ப் படோம் நலிவோமல்லோம்'' என்று மனோதைர்யத்தை ஊட்டிவிடுகின்றது.

ஓர் கவிஞனின் அற்புதக் கற்பனையில் இம் மகான்களுடைய வாழ்க்கையை கீழ்வரும் அழகிய உபமானங்களால் வர்ணிக்க காணலாம்.

எம்மரமும் தன் கனியைத் தான் உண்பதில்லை
கங்கைபோ தன் நீரை, தான் பருகுவதில்லை,
கார்முகிலோ கணமேனும் தனக்காக வாழ்வதில்லை
ஞானிகளும் அதுபோல தமக்கென வாழ்வதில்லை

ஆஹா! எத்தகைய பொருத்தம் இந்த உபமானங்கள்- ''தாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்'' என்றல்லவோ இந்த மகான்கள் வாழ்ந்தனர். ஒரு விளக்கிருந்தால் அதனைக் கொண்டு பல்லாயிரம் விளக்குகளை யேற்றி விடலாம். அதுபோலவே ஞானஒளிச்சுடராய் திகழும் ஒரு மகான் இருந்தால், பல்லாயிரம் மாந்தரின் அகத்தில் ஞான ஒளியை யேற்றி விடலாம்.

இத்தகைய மகான்களை நாம் காண்பதற்கும்-இறைவன் அருள் வேண்டும்-நாம் செய்த பூர்வ புண்ணியத்தினுல் தான் ஓர் ஸத்குரு நாதனின் தர்சனத்தை காண்கிறோம் — மானிட உருவத்தில் நடமாடும் கோவில்கள் தான்—ஜீவன் முக்தர்களாகத் துலங்கும் இம் மகான்கள் - வாழ்வின் இன்பத்தையே குறிக் கோளாகக் கொண்ட மனிதனுக்கு இத்தகைய மகான்களின் அருட்பார்வை கிடைப்பது மிக வும் அரிது - இந்தக் கருத்தை யஜுர் வேதம் மிகவும் தெளிவாக விளக்குகின்றது.

விரதங்கள், சமயவழிபாடுகள் உபவாஸங்கள் எல்லாம் ஸத்குருவினிடத்தில் அழைத்துச் செல்கின்றன. நன்னெறியில் செல்லும் ஒருவனுக்குத்தான் குரு அருள் கிடைக்கும். குருவின் அருளினுல்தான் நம் முள் ஆழ்ந்த தெய்வ நம்பிக்கை அரும்புகிறது. அந்த அசைக்க முடியாத நம்பிக்கை தான் நமக்கு மெய்ப்பொருளின் தத்துவத்தை உணர வாய்ப்பளிக்கின்றது. இன்னும் சொல்லப் போனுல் ஸத்குருநாதனுக்கும், ஸாக்ஷாத் பரப்ரம்மத்திற்கும் காரணம் எதுவித பேதமும் இல்லையெனலாம். காரணம், குருநாதனின் அருளால் ஞானம் நமக்குக் கிடைக்கிறது. அந்த ஞான தீபம்தான் குருவின் திருவுருவத்தை நாம் காணும் நேரம்தான் இறைவன் அருள் நம் மீது வீழ்ந்த நேரம் எனப் பகரலாம். குருஅருள் தானுகவே நம்மைத்தேடி வரும்போதுதான் நமக்கு ஆத்மதர்சனம் உண்டாகும். அதுதான் மனிதப் பிறவியின் குறிக்கோளாகத் திகழும் கைவல்ய நிலையாகும். உபநிடதங்கள் குருவைப்பற்றி இப்படியாகக் கூறுகின்றன. அறிவின் திருவுருவான குருநாதன், நம்மை மூடிமறைக்கும் அஞ்ஞான இருளைப் போக்குபவன் - அவனை வணங்குகிறேன் என் பதேயாகும் - திருமூலரும் இதனைத்தான்

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ்செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே

இறைவனருள் பெற்ற நாதர்களே குருமாராவர். நந்தியருளாலே நாதனும் பேர் பெற்ருேம். 'நாதர்' என்ருல் தன்னையடக்கி வென்று இறைவனுக்கே ஆளாகியிருப்பவராம். குருநாதன் என்பவர்கள்-இயற்கையின் தளைகளை உதறி, மாயா சக்திகளைத் தம் வசப்படுத்தி, ஆத்மஜயம் பெற்ற சித்தரே நாதர்களாவர்.

உபநிஷதங்கள் கூறுவதென்ன? குருவின் திருவுருவம்தான் தியானிக்க வேண்டிய பொருள். குருவின் திருமலரடிகள்தான் பக்தி செய்யவேண்டிய இடம். குருவின் திருவாக்கொன்றுதான் மந்திரங்களெல்லாவற்றிற்கும் அடிப்படையான அஸ்திவாரம். குருவின் திருவருள்தான் நமக்கு வீடு என்னும் பேரின்பநிலைக்கு அழைத்துச் செல்லும் பாதையென்று பகர்கின்றன.

குருநாதனின் உறவால் நாம் மோக்ஷம் அடைகிருேம்.

குருநாதனின் அருட்பார்வையை, பெண் மதியின் தண்ணிலவெனலாம் - வேண்டுவார் வேண்டுவதை யளிக்க வல்லவனுதலால் அவனை கற்பக விருக்ஷம் எனப்பகரலாம் கங்கையில் நீராடினுல்நம் பாபங்கள் போகும்.

குருநாதனின் தர்சனத்தினால் நாம் தீயில் போட்டெடுத்த ஸ்புடத் தங்கமாக மாறி விடலாம் என இயம்புகிறார் ஓர் கவிஞன்.

ஒவ்வொரு குருநாதனும் நமக்கு உபதேசித்த பொன்மொழிகள் ஒன்றைத்தான் குறிக்கிறது - உலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும், எதற்காக இவ்வளவு இன்னல்களை அனுபவிக்கிறான்? அவன் தன்னுள் மறைந்து துலங்கும் மெய்ப்பொருளை மறந்தான் - தன் அகந்தையால் உந்தப்பட்டவனாய், திசைதெரியாது தள்ளாடுகிறான்-சிலந்தியைப் போல் நம்மால் உருவாக்கப்பட்ட வலையில் நாமே அகப்பட்டுக் கொண்டு அதனை அறுத்துக்கொண்டு வெளியேவர முடியாமல் தத்தளிக்கின்றோம். அகங்காரமும் ஆணவமும் நம்மை ஆட்டி வைக்கின்றன. அறியாமையால் என்பும், தோலுமான இவ்வுடலைத்தான் உண்மைப் பொருள் என்று நினைக்கிறோம். பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் இவ்வுடம்பின் - நிலையாமையை உணர்வோமானால் - எல்லையில்லாத ஆனந்தமான, பேரின்ப நிலையை அடைய முடியும். ஆன்ம தரிசனம் கிடைத்த ஒருவனுக்குத்தான்— பிறப்பு இறப்பெனும் பிணிகளை கடக்க முடியும்.

இத்தகைய பேரானந்த நிலையை நமக்கு வழங்க வந்தவர்கள்தான் இந்த ஞான ஒளியாகி ப்ரகாசிக்கும் குருநாதர்கள் - நந்தியின் திருவருளால், சிவஞான சித்திபெற்ற திருமூலர் 'தான் பெற்ற இன்பம்உலகமும் பெறுக' என்று, வேதப் பொருளான பரமனை இரண்டறக் கலக்கும் சாதனங்களை மந்திரத் தமிழால் விளக்கினார் இவ்வாறு:

நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான் பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே.

காலத்தை வென்ற ஞான அருட்செல்வரான ஸ்ரீமத் ஞானாநந்தரும் எல்லா குருநாதர்களைப் போலவே வையகம் வாழும் வழியதனைக் காட்டினார்-ஞானச்சுடர் விளக்காய், மக்களை நன்னெறியில் அழைத்துச் சென்றார். வேண்டுவார் வேண்டுவதை வாரி வழங்கிய வள்ளலார். மோனநிலையதனில் வாழ்ந்து சாந்தமே உருவான தன் தவக்கோலத்தால் மக்கள் மனதை காந்தம் போல் கவர்ந்து ஸத்குருநாதன்-மண்ணில் மறைந்தாலும் நம் கண்ணின் மணிகளில் கலந்து நடமிடுவதை இன்றைக்கும் நாம் காணலாம்.

ஞானஒளியே வாழ்க!
மோனக்கடலே வாழ்க!
சற்குருமணியே வாழ்க!

## ஸ்ரீ ஞானானந்த சுவாமிகளின் அருள் மொழிகள்

நீ கடவுளை உணர வேண்டுமா?
அன்பாயிரு, உண்மையே சொல்.
அறிவாளியாயிரு ஆண்மையோடிரு.

| | | |
|---|---|---|
| சுறுசுறுப்பாயிரு | ஆனால் | படபடப்பாயிராதே |
| பொறுமையாயிரு | ஆனால் | சோம்பலாயிராதே |
| சிக்கனமாயிரு | ஆனால் | கருமியாயிராதே |
| அன்பாயிரு | ஆனால் | அடிமையாயிராதே |
| இரக்கங்காட்டு | ஆனால் | ஏமாந்துபோகாதே |
| கொடையாளியாயிரு | ஆனால் | ஓட்டாண்டியாய்விடாதே |
| வீரனாயிரு | ஆனால் | போக்கிரியாயிராதே |
| இல்லறத்தைநடத்து | ஆனால் | காமவெறியனாயிராதே |
| பற்றற்றிரு | ஆனால் | காட்டுக்குப் போய்விடாதே |
| நல்லோரைநாடு | ஆனால் | அல்லோரை வெறுக்காதே |

# சரணம் சரணம் குருதேவா

சோம. அருண்மொழித்தேவர்

தினமும் அதிகாலையில் எழுந்து இளம் காற்றில் உடல் சிலிர்த்துப்போய் நிற்கையில் பெருமாள் கோயிலிலிருந்து கேட்கும் 'சுப்ரபாதம்' என் செவிகளில் பட்டு உடம்பு உள்ளம் எல்லாம் ஒருவித தெய்வீக உணர்வை பாய்ச்சும். சிலசமயங்களில் பத்துமாதமும் நிறைவேறாத என் குழந்தை, கோயிலில் இருந்து வரும் மணிநாதத்தைக் கேட்டதும் தன் இரு கரங்களையும் கூப்பிச் சிரசில் வைத்து 'அப்புசாமி' என்று மழலைமொழிவாள்.

சூரசங்காரம், யமசங்கார நாட்களில் இரவு பத்துப்பதினொரு மணிக்கும் எனது வீட்டிற்கு முன்னால் சுவாமி திருவுலா வருவார். வழிநெடுக ஒவ்வொரு வீட்டுவாசல்கள் தோறும் பூரண கும்பம், தீபாலங்காரம் சகிதம் மக்கள் கூட்டம், கூட்டமாக நின்று அர்ச்சனை செய்வார்கள். அவர்களின் பஜனை ஒலி வானைப் பிளக்கும். மார்கழி மாதங்களில் திருவெம்பாவை யென்றதும், அதிகாலையிலேயே எழுந்து நீராடிவிட்டு ஆண்களும் பெண்களுமாக ஆலயம் சென்று மிகவும் பக்தியோடும், அன்போடும் தெய்வ வழிபாடு செய்வார்கள். இந்தக் காட்சிகளெல்லாம் சிலசமயங்களில் என்மனதில் ஒன்றுகக்கிளர்ந்தெழுந்து சுவாமி விவேகானந்தர் ஆசைப்பட்டதுபோல் மீண்டும் ஒரு வேதகாலம் தோன்றிவிடாதா என்று எண்ணத் தோன்றும். இந்தத் தெய்வ அனுஷ்டானங்களுக்கெல்லாம் முதற்காரணமாக யார் இருந்திருப்பார்? என்றுகூட எனக்குள் நான் கேட்பதுண்டு. இன்று பிரிவு மனப்பான்மை, நான் எனது என்ற குறுகிய நோக்கம் அதன்வழி தோன்றும் சுயநலவெறி நம்மக்களின் எழிலார்ந்த உள்ளங்களையெல்லாம் கொடுமையால் நிரப்பி, இரத்தத்தால் நனைத்துவிட்டன. இந்த உலகமே துர்தசையில் ஆழ்ந்துவிட்டது. மூன்றாவது உலகமகாயுத்தம் இன்றோ, நாளையோ என்று அகில உலகமுமே பயப்பிராந்தியத்தில் மூழ்கிக்கிடக்கிறது.

இந்த நிலையில் இந்தியாவிலிருந்து எங்களுக்கு ஓர் ஆத்மிக வழிகாட்டியை அனுப்ப வேண்டுமென்று ஆண்டவன் திருவுள்ளம் கொண்டதினலோ, என்னவோ—சத்குரு ஸ்ரீ ஞானனந்தகிரி ஸ்வாமி அவர்களின் நல்லமைச்சீடரான ஸ்ரீ ஹரிநாஸ்கிரி சுவாமி அவர்கள் நம்நாட்டுக்கு விஜயம் செய்ய நினைத்தது, நம் ஈழம் வாழ் இந்துப் பெருமக்கள் செய்த பூர்வ ஜன்மத்துப்புண்ணியம் என்றே சொல்லவேண்டும். அவரது உன்னதமான ஆத்மீக சித்தாந்தம் நம் மக்கள் மத்தியில் மெதுவாக, ஆனல் நிச்சயமாக நீரின் அடிமட்ட ஓட்டம் போலப் பதிந்துள்ளதை நாம் அறிவோம். அவர் சொல்லிக் கொடுக்கும் ''கோவிந்த நாம சங்கீர்த்தனம்'' பிறவிப் பெருங்கடலில் விழுந்துகிடக்கும் நம்மை முக்தி என்னும் கரை சேர்க்க வைக்கும் ஆத்மீகத் தெப்பம் என்றே எண்ணவேண்டும்.

யதா, யதா ஹி தர்மஸ்ய க்ஷயோ விருத்திச்ச பாப்மன!
ததாது பகவானிச ஆத்மானம் ஸ்ருஜதே ஹரி!

தர்மம் நிலைகுலைந்து அதர்மம் மேலோங்கும் பொழுது பகவான் ஸ்ரீ ஹரி தோன்றுகிறார் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறியது நிஜமாகிவிட்டதோ என்று எண்ணுமளவிற்கு ''கோவிந்த நாம சங்கீர்த்தனம்'' நம் நாட்டில் மட்டுமல்லாமல் உலகெங்கும் முழங்கத் தொடங்கிவிட்டது. அணுக்குண்டுகளின் வெடிச்சத்தத்திலேயே தன்னைப்பாதுகாத்துக் கொண்டிருக்கும் மேல்நாட்டு இளைஞர்கள் பலர், ஹரிநாம சங்கீர்த்தனத்தை முழங்கத் தொடங்கிவிட்டார்கள். கீழ் நாட்டு மக்கள் அநாகரீகமானவர்கள். அவர்களுடைய மதங்கள் வெறும் சடங்குகளும் மூடநம்பிக்கைகளும் மட்டுமே நிறைந்தவை என்று எண்ணிக் கொண்டிருந்த மேல் நாட்டவர்கள் இன்று கீழ் நாடுதான் நம்பிக்கைக்கும், உலக சமாதானத்திற்கும் வழிகோலும் தன்மையுடையது என எண்ணத் தொடங்கிவிட்டார்கள். இத்தகைய ஒரு மனமாற்றம்-ஆத்மீக விழிப்பு — நிகழ்வதற்குக்காரணம் யுக யுகாந்தரங்களாக விளங்கிவந்துள்ள நம் இந்து மத ஆசாரங்களும், வேதாந்தத் தத்துவங்களும் என்றே சொல்லவேண்டும்.

கல்ப, கல்பாந்திரங்களாக விளங்கும் நம் இந்து மதத்தின் காவலர்களாக இருந்து வருபவர்கள் ஆத்மீக சத்தியத்தை நேராகக் கண்ட ரிஷிகளும், முனிவர்களும், மடாதிபதிகளுமேயாவர். அவர்களின் வரிசையில் குரு பரம்பரையில் வந்தவர்தான், ஸ்ரீ மஹாபக்த விஜயத்திலுள்ள மகான்களின் திவ்ய சரிதங்களை நம் உள்ளங்களில் ஆழப்பதித்து வரும் தபோவனம் தந்த தவப்புதல்வரான ஸ்ரீ ஹரிதாஸ்கிரி ஸ்வாமி அவர்கள்.

ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமி அவர்களை நாம் குருவாக அடையக் கொடுத்துவைத்தது உண்மையிலேயே நமது சங்கல்ப பலமா? அல்லது ஏதோ ஒரு மகா சக்தியின் திட்டங்களா என்று எண்ணத்தோன்றுகிறது. அவருடைய தரிசனம் திவ்ய தரிசனம். ''குருவருள் இன்றேல் திருவருள் இல்லை'' என்பதை நாம் பல முறை கேட்டும் படித்தும் இருக்கிறோம்.

பரித்திராணாய சாதுனாம் விநாசாய துஷ்க்ருதாம்
தர்ம சம்ஸ்தாப னார்தாய சம்பவாமி யுகே யுகே.

''பக்தர்களைப் பாதுகாக்கவும், துஷ்டர்களை நிஷ்சரிக்கவும் தர்மநெறியை நிலைநாட்டவும் யுகந்தோறும் நான் அவதரிப்பேன்'' என்று கீதையில் கண்ணன் சொன்னான். அந்தக் கண்ணனே நம்மிடையே தோன்றியது போல் வருகை தந்திருக்கும் ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமி அவர்களின் திருவடித்தாமரையை, எவ்வளவிற்கெவ்வளவு முறைப்படி சரணடைகிறோமோ, அவ்வளவிற்கவ்வளவு நமக்குத் தெய்வ தரிசனம் உண்டு என்பதை நாம் சத்திய பூர்வமாக நம்பவேண்டும் குருதரிசனம் என்பது எல்லோருக்கும் எளிதில் கிடைப்பதில்லை. குருவை அடைவதற்கும், அணுகுவதற்கு கூட எத்தனையோ வழிவகைகள் சொல்லப்பட்டுள்ளன. ஆம்! இந்து சமயத்தின் எல்லாப் பிரிவினருமே குருவுக்கு முக்கியத்துவம் அளிக்கிறார்கள்.

ஸ்வதேசிகஸ் யைவசநாம-கீர்த்தனம்!
பவேதனந்தஸ்ய சிவஸ்ய கீர்த்தனம்!
ஸ்வதேசி கஸ்யைவ நாம — சிந்தனம்!
பவேதனந்தஸ்ய சிவஸ்ய சிந்தனம்!

தன்குருவின் நாமகீர்த்தனமே அனந்தராகிய சிவனுடைய கீர்த்தனமாகும்.

தன்குருவின் நாமசிந்தனையே அனந்தராகிய சிவனுடைய நாம சிந்தனையாகும் என்று குருகீதையில் சொல்லப்படுகிறது.

சிரத்தையுடன் குருவை அணுகவேண்டுமென விதிக்கும் வேதம் குருவைத் தெய்வமாகவே கொள்ளவேண்டுமென்கிறது. குரு தனது அனுபவங்களையெல்லாம் தம் உண்மையான சிஷ்யனிடம் அளிக்கிறார். ''பருவ மறிந்து நின் அருளான குளிகை கொடுபரிசித்து வேதி செய்து'' என்கிறார் தாயுமானவர்.

ஒருசமயம் ஆதிசங்கரர் தம் குருவைத் தேடி காடுகள், மலைகள், ஆறுகள், நகரங்களெல்லாம் கடந்து நருமதை நதிக்கரையை அடைந்தார். நதியின் கரையிலே ஒரு மாபெரும் மலை. அதன் குகையைக் கூர்ந்து கவனித்தார் சங்கரர். அந்தக் குகையினுள்ளே 'கோவிந்த யோகிந்திரர்'' தவம் புரிவதை உணர்ந்தார். அப்பொழுது 'இவ்விடத்தே ஆசாரியரை அடைக' என்று அசரீரி எழுந்தது. சங்கரர் குகையை மும்முறை வலம் வந்து இருகைகளையும் கூப்பிக் கொண்டுகுகைவாயிலை வணங்கினர். யோகத்திலிருந்து வெளிவந்த கோவிந்த பகவத்பாதர் ''நீ யார்?'' என்று கேட்டார். அவரின் கம்பீரமான வெண்கலக் குரல் குகைச் சுவர்களில் மோதி, சங்கரர் செவிகளில் பாய்ந்தது. சங்கரரோ ''சுத்த சிவமே'' நான் என்று பத்துச் சுலோகங்களால் தம்மை அறிமுகம் செய்துகொண்டார். குகைவாசிக்கு வந்திருப்பது யாரென்று தெரிந்துவிட்டது. சங்கரரின் நிர்வாண சதகத்தைக் கேட்ட கோவிந்த பகவத்பாதர் ''அறவியல் செல்வமே!'' எனச் சங்கரரை அழைத்தார். யோக நிஷ்டையில் இருந்த நான் இந்நிகழ்ச்சி நிகழும் என்பதை உணர்ந்தே வெளியே வந்தேன். நாராயணர் மரபில் வந்த குரு பரம்பரை இனி உன்னால் விளக்கம்பெறும் சுகப்பிரமம் அருளிய பிரமானுபவத்தைக் கௌடபாதர் எனக்கு அருளியவாறு நானும் உனக்குச் சொல்லிக் காட்டுவேன். அதனை உணரும் பக்குவம் உனக்கு இருப்பதை உணர்ந்தேன் என்று கூறினர். அவரது வடிவமும் பேச்சும் சங்கரரைப் பெரிதும் கவர்ந்தன. சங்கரர் அவரை வணங்கினர். பகவத்பாதர் சங்கரருக்கு முறைப்படி ஞானதீட்சை அளித்து துறவு தந்து மகாமந்திர உபதேசமும் செய்தார். பின் குருவும் சீடரும் யோகநிஷ்டையில் சிலகாலம் இருந்தனர். இத்தகைய குரு பரம்பரையில் தோன்றியவரான சத்குருஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகளின் தலைமைச்சீடர் தான் நமக்கெல்லாம் குருவாக வந்து இந்து தர்மத்தையும் இறைத் தத்துவத்தையும் விளக்கி ஞானநெறியைக் காட்டி நிற்கும்

ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமி அவர்கள். அவரே நம் இறைவன். ''ஆசார்ய வேத பவ''என்கிறது வேதம். நாம் எவ்வளவுதான் முயன்றாலும் இறைத் தத்துவத்தின் உண்மையை உணர்ந்துகொள்ள முடியவில்லை. அந்தளவிற்கு நாம் மாயையின் வசமாகிவிட்டோம். இதனை உணர்ந்துதான் மக்களுக்கு எப்பொழுதும் ஞானநெறியைக் காட்டவும், தான தருமங்கள் வழங்கவும் ஆதிசங்கரர் குரு பீடங்களை அமைத்தார். இளமையிலேயே வாழ்வைத் துறந்து காவியுடை அணிந்து உலக மக்களுக்கு அல்லும் பகலும் இறைவனை நினைவுறுத்துமாறு பணித்தார். இத்தகைய ஒரு பணியையே ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜத்தினரும் செய்து வருகின்றார்கள். ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜத்திற்கு இப்பொழுது நான்கு வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது. ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமி அவர்களே ஸ்ரீ ஞானானந்த சேவா சமாஜத்தையும் ஸ்தாபித்து வைத்தவராவார். அவரைக் குருவாகப் பெற்றது நாம் செய்த பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

ஞான நெறிக்கேற்ற குரு
நண்ணிய சித்தி முத்தி
தானம் தருமம்
தழைத்தகுரு—மான மொடு
தாயெனவும் வந்தென்னைத்
தந்தகுரு என் சிந்தை
கோயிலென வாழும் குரு.

முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னமேயே தாயுமானவரால் பாடப்பெற்ற இப்பாடல் இன்றைய நம் குருவைப் பார்த்து பாடியது போல் இல்லையா? ஆம்! தாயுமானவர் காலத்திலிருந்து இன்றுவரை குரு பரம்பரை மக்களுக்கு வழிகாட்டி வந்திருக்கிறது. நாமும் இவ்விழா நன்நாளில் நம் குருஜியை சரணாகதியடைந்து உளமார்ந்த வந்தனங்களைச் செலுத்தி இறைவனருள் பெறுவோமாக. ''ராதே கிருஷ்ணா''

தீப ஜோதியாய் வருவாய் நீ தீபஜோதியாய் வருவாய்
திருமகளே பொருள் தருமகளே நீ தீப ஜோதியாய் வருவாய்.

உனதருள் உளதேல் உலகாம் — இன்றேல்
உலக வாழ்வு கொடும் நரகாம்
தன தானிய சௌபாக்கியம் தருவாய் (தீபஜோதி)

பாற்கடல் உதித்த பொற்கொடியே — உந்தன்
பார்வை பெற்றவர்க்கெதும் எளிதாம்
சேர்த்தபின் பயனுறும் செல்வமும் தருவாய் (தீபஜோதி)

வீரத் திருமகளின் நோக்கம் — எல்லா
வெற்றி அளிக்கும் மன ஊக்கம்
சீரும் சிறப்பு மனத் திறமையும் தருவாய் — (தீபஜோதி)

செந்தாமரை வளர் ஒளியே — ஐயன்
திருமார்பினுள மணியே
எந்தாய் நினதருள் வாழ்க வாழ்க நீ — (தீபஜோதி)

கமல நயன மிகும் கருணை — எந்தன்
கவிகள் பாடுமிடம் பொழிவாய்
வமிச முழுதும் மெனக்கருள் வரம் தருவாய் (தீபஜோதி)

தோகை நினதருளின் துணையால் — நான்
தொட்டதனைத்தும் பயனளிக்கும்
யோக போக சுக வாழ்க்கையும் தருவாய் (தீபஜோதி)

# He could make a Rainbow out of Granite

*"Nithyathripta"*

. It was on 10th January 1974, that Sadguru Swami Gnanananda Giri of Tapovanam attained Mahasamadhi, after laying down his earthly ministrations, in obedience to the call of his Guru, Swami Sivaratnagiri.

yatha nadhyah syandamanah samudre
astham gachanti namarupe vihaya
tatha vidvannamarupad vimuktah
paratparam purusamupaiti divyam

The Upanishad declares that a gnani who attains mukti, merges with the Divine, leaving behind his name and form, just as a river forsakes its identity when it empties itself into the ocean.

The Swami was a Jivanmukta, a spiritual master of the most authentic tradition of the Vedic seers.

There are only sketchy biographical details about the Swami, with which one could not get up a vivid account of his life that readers might want to have. Nor has the Swami left behind any elaborate exegetical compositions from which one could distil his system of philosophy, or discover his teaching.

As Swami Abhishiktananda, a great devotee of the Swami, has pointed out in his book 'GURU AND DISCIPLE',* "There is nothing of particular note in the life of Swami Gnanananda, as was also true of Ramana Maharishi. No ecstasy, no siddhis, no esoteric teaching, no special mission. His teaching is fundamentally the way of total renunciation so that finally there is no ego left to manifest itself."

Herein probably lies the innermost secret of the Swami's life and teaching. Although for anyone who has the right attitude and perception, the spiritual majesty and attainments of the Swami, perfected to the point of invincibility, stand readily revealed, he Swami himself deliberately chose to hide them from popular view. As Swami Abhishiktananda has observed, "He refused all cheap spirituality. His communication with the disciple is never through the intermediary of things. It is direct, in depth, at the source of his being. It is true that nothing is felt except a peace which reveals and illumines-and which transforms the one that can receive it."

The life of Sadguru Gnanananda is truly a shining example of saint who gave his utmost to the world with a love that is divine.

The Swami's life before he came to Attiyampatti (Salem Dist.) in the thirties is shrouded in mystery. A few casual remarks of the Swami himself point to the advent of the Swami into the world on a Thai Krithikai day, in the village of Mangalapuri in Karnataka State. It is believed that he was born of an orthodox Brahmin couple, Sri Venkoba Ganapati and Srimathi Sakku Bai. He was named Subrahmanyan. His parents invested him with the sacred thread when he was seven years old. He appears to have taken him self to Pandharpur in Maharashtra when he was eleven or twelve years old, driven by an inner urge to discover the Self.

One night when he was asleep in a mandap on the banks of the sacred river Chandrabhaga, he was awakened by an old brahmin, who informed him that his guru was waiting for him righ in Pandharpur. The boy made enquiries and learnt that Sri Swami Sivaratna Giri of Jyotirmutt, one of the mutts established by Adi Sankara himself was camping in the town.

Propelled relentlessly by the urge to surrender himself to a guru who would help him on in his spiritual quest, he sought out Swami Sivaratnagiri and offered his salutations to him. It was as if the guru and the disciple were waiting for each other.

* *Published by SPCK (Society for Promoting Christian Knowledge) - Copies available at Gnanananda Tapovanam, Tirukoilur, South Arcot Dt., India.*

Grace brought them together. The Swami followed his guru, as his very shadow and soon, under his guidance, became proficient not only in Ashtanga Yoga but in all the Hindu spiritual practices and scriptures.

It is said that when he was about 39 years old, Swami Sivaratna Giri initiated the Swami into the Giri order and gave him the diksha nama Sri Gnanananda Giri.

After the Mahasamdhi of his guru, on a Chitra Pournami day (which is celebrated with great eclat even today in the Ashrams founded by the Swami), the Swami adorned the Peetam for some time. However by nature unwilling to be encumbered by the trap pings of authority or worldly powers, he renounced the Peetam and retired to the remote heights of the Himalayas for performing tapas. He seems to have spent many years performing intense tapas in solitude in the icy vastness of the Himalayan caves After a long period of seclusion, when he must have perfected his spiritual sadhana, the Swami travelled extensively on foot spanning the whole of India, Nepal, Tibet, Burma and Sri Lanka. During his peregrinations he visited samadhis of many saints and met Sri Sai Baba of Shirdi Sri Ramakrishna Parama hamsa, Swami Vivekananda, Ramalinga Swamigal of Vadalur, Sri Aurobindo and Sri Ramana Maharishi.

His love of Solitude always impelled him to retire to lonely spots and constantly kept him on the move. However the Swami appears to have stayed in Kallakudi and Salur for some years. He then went to Attiyampatti in Salem Dist., and stayed there for about 30 years, where he established the 'Sri Gnanananda Ashram' in 1930. Attiyampatti was a small village and the inhabitants were mainly poor weavers. The Swami taught them the basic tenets of the Hindu religion and conducted classes in Vedanta for those who were more proficient. Most of the details of the Swami's stay here, we owe to his devotee Sri Chinna Arumuga Pathar. The scriptural instruction imparted to him is included in 'Gnana Inba Veli', a sacred collection of Swami's teachings.

From Attiyampatti he moved over to Siddhalingamadam in South Arcot Dist., in 1944-45. As time went on the circle of devotees coming to Swami began to widen. In 1954, a lawyer devotee of the Swami offered some lands situated near Tirukoilur on the northern bank of Pennar. The Swami came and settled down there and founded a modest Ashram 'Sri Gnanananda Tapovanam'. Till his Mahasamadhi the Swami stayed in this hallowed spot and made this the pivotal place for his spiritual ministrations. He built temples for the deities, Gnana Ganesa, Gnana Skanda, Gnanapurisa, Gnanambika, Mahalakshmi and Venugopala. Unlike in other Ashrams, which the Swami had established, the Ashram at Tapovanam was developed by the Swami as a place of organised living, prayer and yoga. Common prayer, worship, singing of hymns, Guru Paduka Puja and guru bhakti have been the marked features of life at Topovanam. The Swami made the Ashram a centre of divine life.

As per His wishes, the Swami's samadhi is also situated within the precincts of the Ashram and has been rightly named as 'Arulalayam'.

"'I will be in Jiva Samadhi. I will raise you up, protect you and watch over you' he assured his devotees."*

"Did not Shirdi Sai Baba declare: My shrine will bless my devotees and fulfil their needs'."*

"There could be no doubt that the Swami's is a Jiva Samadhi, for was he not one of those rare few who could consciously and at will keep out the laws of mortality? We, the ignorant, belong to the world "where palsy shakes a few, sad, last grey hairs and where youth grows pale and spectre thin and dies".*

But with the Swami it was altogether different, for he had transcended time and space. His devotees continue to experience His grace, His vital presence and a certain serenity of repose, when they pray before His Samadhi. This experience was in no way different, from the one which was theirs, when he was physically present.

The Swami had ordered the installation of a sila vigraha or himself at this Ashram and in due course consecrated and invested it with all his grace and spiritual powers. The countless number of his devotees find a rare solace while offering worship to the vigraha. They experience a deep and profound peace radiating from its presence and feel that their prayers and calls for succour are answered when they offer worship at the shrine. The Sastras declare that the Archa form of the Lord

* *Excerpted from the book "SADGURU GNANANANDA" published by Bharatiya Vidya-Bhavan, Kulapati K. M. Munshi Marg. Bombay - 400007.*

properly consecrated becomes the tabernacle of God and the qualities of gnana, shakti, bala, aiswarya, veerya and tejas are particularly effulgent in it. It is only in this form that God's limitless accessibility stands revealed a God willingly becomes a prisioner of His devotees and submits Himself to their devotion and prayers. The Sila vigraha of the Swami underscores this essential truth.

The Swami was a liberated soul, an Ativarnashrami with bewildering facets to his personality often incompatible and mystifying but all blending into a harmonious whole.

He was content to live in a simple state of anonymity. He was resolutely against any exhibitionism.

Although he looked physically diminutive, his was a striking personality. His face shone like the sun at high noon. The ananda of a Brahmanishta suffused his being. His eyes were lit up with a tenderness that made one feel that one was in the presence of the Divine Itself. There was an understanding compassion in his look. In his presence one felt that the greatest cleverness was only stupidity and the highest intellectual no better than a child.

The Swami could neatly size up everyone who came to him. None would dare parade his knowledge or worldly authority, as the Swami had a way of deflating a puffed up ego, with his matchless wit and astounding range of knowledge of men and matters.

He could comprehend anything with the rare intuition of a true gnani. The extraordinary power of his words, the felicitous artistry of his talks and his incisive intellect that could unravel the most intricate problem captivated the audience. His utterances were replete with mystical aphorisms and poetic imagery. His homour was infectious, his irony scathing and his laughter divine.

Many of the Swami's devotees have vouchsafed to miracles having been performed by him; effecting a miraculous cure, forecstalling some catastrophe, materialising in different places at the some time, making a mute boy speak and securing an unbelievable change in the prospects of one who was in troublesome financial straits. One could go on cataloguing yet other miracles the Swami had wrought. While pointing out the utter irrelevance of occult powers as a sign of spiritual attainment the Swami says:

"A preceptor who confounds spiritualism with occultism indeed misses the incomparable sweetness of the former and is like a goat which devours the sugar-cane leaves and leaves the sugar-cane behind. A real spiritual preceptor who has delved deep into the esoteric message of the Mahavakyas and lovingly imparts it to his disciples is like an elephant which gobbles up the sugar-cane and ignores the sugar-cane leaves and bids its young to do likewise.*

Perhaps the greatest miracle that the Swami wrought was the transformation of the consiousness of the people who came to him. This was most unobtrusive. He drew them to his fold by his grace and awakened in them an intense desire for the life of the spirit. It was like "the sound of that celestial music that could charm a rose tree into flowering amid snow."

The Swami woult not ignore human sufferings as an inevitable part of the illusory universe but relieved it with a divine compassion which is the true attribute of life eternal. His Karuna, simplicity and his 'sarvatmabhava' were most touching and would melt even a heart of granite.

The Swami has described the characteristics of a jivanmukta thus:

"Equality, annihilation of the mind, freedom from anger, freedom from desire, triumph over senses, universal love, charity, freedom from miserliness, freedom from fear, from ego-it is thes qualities that mark Jivanmuktas." He was God and man in one, he was what the infinite being of God and His power manifester behind the veil of a human body and human feelings are.*

"No sketch can hope to resurrect the image of the Swami for us in all itsfascinating multiple facets. In this he was like an iceberg. What is seen of him on the surface is not half so mammoth as what is concealed. Indeed he is of a towering stature, like Trivkrama, shrunk not by words of praise or blame, verily a colossus."

'It is with profound gratitude, we realize that such a one was moving amongst us as though he were one of us", say the authors of the book SADGURU GNANANANDA** -- His Life, Personality and Teachings.**

* *Gnana Inba Veli - available at Tapovanam South Arcot Dt. PIN: 605756.*

* *GNANA INBA VELI-available at Tapovanam South Arcot Dt*

** *Published by the Bharatiya Vidya Bhavan, Munshi Sadan, Kulapati K. M. Munshi Marg, Bombay-400007.*

# அருள் பொங்கும் ஞானச்சுடர்

கவிஞர் மபன்

ஞானிகளுக்கே ஞானியாக விளங்கி எல்லோருக்கும் அருள்பாலித்து வரும் சத்குரு ஸ்ரீ ஞானனந்த கிரி சுவாமிகளின் பரிபூரண அருளைப்பெற்ற அவரது பிரதம சீடராகிய ஸ்ரீ ஹரிதாஸ் சுவாமிகளின் முன்பாடிய துதிப்பதிகம்

அருள் பொங்கும் ஞானச் சுடரே — இந்த
அகிலத்தில் அன்னையருள் நிலைபெற்ற கடலே
பொருள் போற்றி வாழ்கின்ற உலகில் — ஞான
அருளாற்றல் கொண்டெமை ஆள்கின்ற அரசே!-

மருள்கின்ற மனங் களிலெல்லாம் — ஞான
மதுவென்ற பக்தியை சதிராடச் செய்தாய்
அருள்நின்ற வாழ்வினைத் தந்தாய் — இந்த
அகிலந்தனிலெங்கும் புகழ் கொண்டு வென்றாய்-

திருக்கோவிலூர் தனில் வாழ்ந்து — ஞானத்
திருவாகி ஆனந்த கிரியாகி சூழ்ந்து
உருவான ஹரிதாச கிரியை — இந்த
உலகிலே இசையோடு உலாவிடச் செய்தாய் —

ஞானத்தின் ஆனந்த கிரியான அரசே!
ஞாலத்தில் அருளோசை தருகின்ற முரசே!
மோனத் தவத்தினில் முளைவிட்ட சுடரே
முழுதான சக்தியாய் விளைஞானப் பயிரே.

வானத்து தேவரும் வணங்கிடும் சித்தி
வடிவான அன்னையாய் வளர்ந்தருள் சித்தி
கானத்தில் பக்தியாய் கனிந்தருள் உத்தி
ஹரிதாச கிரியாகி அருள்தரும் சக்தி.

புகழ்ஞான ஆனந்த கிரியான வடிவே!
புவியோர்கள் மனக்கோவில் குடிகொண்ட [இறையே
திகழ்ஞான ஹரிதாச கிரியென்னும் சுடரை
திருக்கோவிலூர் தன்னில் தரவந்த குருவே!

## ஆலயம்

உதவி பெற்றதற்கு நன்றி செலுத்துவது ஒரு சிறந்த கடமை. ஒரு புல்லைக் கூட சிருஷ்டிக்கத் திறனற்ற மனிதனுக்கு இத்தனை உணவும், உடையும், மற்ற உபகரணங்களும் வழங்கும் ஆண்டவனுக்கு நன்றி காட்டுவது நமது கடமை. இவ்வாறு நன்றிகூறும் அடையாளமாகவே நாம் உண்பது அவனுக்கு முன் காட்டி நிவேதனம் செய்யவேண்டும், அவனுக்குக் காட்டிவிட்டுப் பிறகு நாம் தான் உண்ணப்போகிறோம். நாம் பலவிதமான ஆடை ஆபரணங்கள் அணிவ தற்கு அருள்செய்யும் ஆண்டவனுக்குத் திரு ஆபரணங்களையும் வஸ்திரங்களை யும் சமர்ப்பிக்கவேண்டும். எல்லாருமே இவ்விதம் வீட்டில் பூஜை செய்து திரவியங்களை ஈசுவரார்ப்பணம் செய்ய இயலாது. எனவே, சமுதாயம் முழுதும் சேர்ந்து இப்படி சமர்ப்பணம் பண்ணும்படியான பொது வழிபாட்டு நிலையங்க ளாக ஆலயங்கள் எழுந்துள்ளன.

— தெய்வத்தின் குரல்

# எங்கள் குருநாதன்

ஸ்ரீமதி லலிதா ராமானுஜாச்சாரி

ஆனந்தபைரவி — தாளம்—ஆதி

1. தவவனத்தை ஆளும்பதி எங்கள் குருநாதன்
தவயோக முனிவர் புகழ் ஞான குருநாதன்
தன்னைபுணர்ந்த உன்னதனும் எங்கள் குருநாதன்
தத்துவ உபதேசம் தரும் எங்கள் குருநாதன்

2. பவரோகமகற்றும் மெய்யன் எங்கள் குருநாதன்
பந்தமற்றப் பெரியோனும் எங்கள் குருநாதன்
பல்வினைப்பயன் தீர்த்திடுவான் எங்கள் குருநாதன்
பருவமழைபோல் அருள்வான் எங்கள் குருநாதன்

3. இன்பதுன்பம் விலக்கிடுவான் எங்கள் குருநாதன்
ஈன்றிடும் அன்னையின் மேலாம் எங்கள் குருநாதன்
இணையற்ற நல்லோனும் எங்கள் குருநாதன்
ஈசனுக எம்மையாளும் ஆனந்த குருநாதன்

4. ஞானமே உருவாகி நின்ற எங்கள் குருநாதன்
ஞாலமெல்லாம் போற்றி வணங்கும்
எங்கள் குருநாதன்
ஞானியர்க்கும் ஞானமதை ஊட்டும் குருநாதன்
ஞான ஆனந்தனுகத் திகழும் குருநாதன்

5. எங்குதித்தான் என்றுதித்தான் என்று
சொல்லவொண்ணு
எம் உள்ளுறை பரம்பொருளாம் எங்கள்குருநாதன்
எண்ணும் அடியார்கள் எம்மை மனமிரங்கி ஏற்று
என்றென்றும் காப்பவனும் எங்கள் குருநாதன்

6. அன்பர் தமது உள்ளமதில் ஒளிரும் குருநாதன்
ஆன்ம நெறியுரைக்க வந்த ஆதிகுருநாதன்
அங்கிங்கெனுதபடி எங்கும் நிறைவாகி
ஆத்ம பரிபூரணந்தனே எமக்கியும் நாதன்

## தாலாட்டு

ராகம் ஜமுனகல்யாணி — தாளம் ஜாபு

1. தன்னையறிந்த இன்பம் நீ கண்டாய்
மன்னவனே தாலோ
தன்னையறியும் வழி நீ சொல்வாய்
மன்னவனே தாலோ

2. எங்கும் நிறைந்தாய் ஏற்றம் அளித்தாய்
எம் சத்குருவே தாலோ
எண்ணியதெமக்கு எளிதில் தருவாய்
எம் சத்குருவே தாலோ

3. புண்ணிய பெண்ணையின் கரையில் அமர்ந்தாய்
கண்மணியே தாலோ
புனித தவத்தை என்றுமியற்றுவாய்
கண்மணியே தாலோ

4. சொல்லின் பொருளாய், பொருளின் உட்பொருளாய்
திகழ்பவனே தாலோ
சொல்லிலடங்கா பதந்தனை எய்தியே
திகழ்பவனே தாலோ

5. உன்னத நிலைவாழ் உத்தமனுவாய் - எம்
உயிர்த் துணையே தாலோ
உண்மை உணர்வினை ஊட்டுவாய் நீயே எம்
உயிர்த் துணையே தாலோ

6. அல்லலடங்க அறிவொளியாக
அருள் அரசே தாலோ
ஆனந்த வனமதில் அன்பு தழைத்திட
அருள் அரசே தாலோ

7. சாந்த உருவாய் சத்குரு வடிவாய்
வந்தவனே தாலோ
சஞ்சலம் நீங்க சன்மார்க்கம் ஓங்க
வந்தவனே தாலோ

8. பேதங்களோட்டி வாழ்வெளி காட்டும்
பாவனனே தாலோ
பந்தமகல பாசமறுக்கும்
பரிபாவனனே தாலோ

9. தத்துவ ஞான வித்தகனே
அத்வயனே தாலோ
தன்மயமாகி நின்றவனே
அதி அற்புதனே தாலோ

''விஷப்பல் நீக்கப்பட்ட நாகத்தைப் பிடாரன் மார்மேலும் தோள் மேலும் பயமில்லாமல் சுமந்து திரிவது போல் மாசற்ற மனமுடையவர்கள் எங்கும் எப்பொழுதும் பயமற்றுத்திரிவர்.'' —ஞான இன்பவெளி

# அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே

A. குணநாயகம்

உலகம் உள்ளது; உயிர் உள்ளது; கடவுள் உளர் என்பது சைவ சித்தாந்தக் கோட்பாடு. உடம்போடு கூட்டப்பெற்ற உயிர், வாழ்தற்காக அருளப்பட்ட இவ்வுலகின் கண்ணே வாழ்ந்து, நாளடைவில் அதன் பிடியினின்றும் விடுபட்டு, ஈற்றில் இறைவனடி சேருதல் வேண்டும் என்பதே வாழ்க்கையின் குறிக்கோள். இதனை இன்னும் விபரமாகச் சொன்னால், நாம் அறவாழ்க்கையை மேற்கொண்டு அதற்கு வேண்டும் பொருளைத் திதிலாவழியில் ஈட்டி, இல்லறம் என்னும் நல்லறம் நடாத்தி ஈற்றில் வீடுபேறு அடைதல் வேண்டும். எனவே, வாழ்க்கை ஒரு பிரயாணமாகின்றது.

நாம் கொழும்பிலிருந்து தாயகம் சென்று திரும்பினால், அதனை ஒரு பயணம் என்கின்றோம். ஆனால் ஆங்குச் சென்று சிதம்பர தரிசனம் செய்து திரும்பினால், அதனை யாத்திரை என்கின்றோம். வேடிக்கை பார்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முன்னைய பயணம் போலல்லாது, பின்னையது, பிறவியென்னும் முழை கொண்டொருவன் செல்லாமை நின்று அம்பலத்து ஆடும் முன்னோனைத் தரிசிக்கச் சென்றமையால், அது யாத்திரையாகின்றது.

இவ் யாத்திரையின் போது எம்மை எதிர்நோக்கும் இன்னலும் இடைஞ்சலும் அளப்பில. இப்பிறவி, ஒரு பெருங்கடலுக்கு ஒப்பாகவும் சொல்லப்படுகிறது. இக்கடலின் கண்ணே துன்பமாகிய அலைகள் மோதுகின்றன. ஆசா பாசங்களாகிய சுழல் காற்று வீசி அடிக்கின்றது. சிற்றின்பமாகிய திமிங்கிலம் எம்மைத் தனது வாயிற் பற்றிக்கொள்கின்றது. தப்பும் வகையறியாது தவிக்கின்றோம்.

இப்படியான தத்தளிப்பு நிலையை உளத்திற் கொண்டு, இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பை வேறொரு வகையால் விளக்குகின்றார் மாணிக்கவாசக சுவாமிகள். இறைவனை ஆன்மநாயகனாகவும், ஆன்மாவை நாயகியாகவும் பாவனை செய்வது சமய மரபு. இத்தகைய அகத்துறை நிகழ்ச்சியாக ஒருவரை ஒருவர் கண்ணுற்று, எத்தனையோ தடை தாமதங்களின் பின்னர், ஒருவரையொருவர் நிலைபேறுறச் சேர்ந்து கொள்கின்றனர். ஒருவரை மற்றவர் கண்ணுற்ற காட்சியின்போது ஆன்மாவின் உணர்வுக்கண்கள் திறக்கப்பெறுகின்றன. இதையடுத்து உவகையும் பெருமிதமும் பிறக்கின்றது எனினும், உலகியலிலே ஏற்படும் தடுமாற்றம், மன அலைவுகள், அமைதியின்மை ஆகிய தொல்லைகளும் பிடித்துக்கொள்கின்றன. ஆயினும், ஈற்றில் ஒருவரையொருவர் எய்தப்பெறுகின்றனர், பேரின்பப் பெருவாழ்வில் மூழ்கித் திளைக்கின்றனர். அப்படியாகப் புனையப்பட்ட ஞானப் பனுவலாகிய திருக்கோவையாரில் ஒரு பாடல்.

தலைவியை நாடித் தலைவன் தனது நினைவைப் பல்லாற்றானும் தலைவிக்குப் புலப்படுத்த முனைகின்றான். தலைவியோ ஒவ்வோர் சாட்டுப் போக்குச் சொல்லிக் கடத்திவிடுகின்றாள். திருவருளாகிய தோழியின் சொல்லையும் கேட்கின்றாளில்லை. தலைவியின் நடை உலக ஆசாபாசங்களிற் சிக்குண்டு கிடக்கும் ஆன்மாவுக்குச் சமனாகின்றது. இத்தகைய தலைவி ஒரு நாள், மலையின் கண்ணேயுள்ள நீர்ச்சுனைக்கு நீராடச் செல்கின்றாள். அன்று ஒரு நாள், தேவர்களையும் அசுரர்களையும் ஒருங்கே அழிப்பதாகக் கடலினின்றும் சினந்தெழுந்த நஞ்சினைத் தானே உண்டு, அவர்களைக் காப்பாற்றிய பெருமானது தில்லையம்பலத்தின் பெரிய மலையினின்றும் பேரிரைச்சலுடன் வீழ்கின்ற அருவியின் அடிவாரத்தில் உளதாய ஆழமான கொந்தளிப்புடன் கூடிய சுனையின் புனலிலே தவறி வீழ்ந்துவிடுகின்றாள். வீழ்ந்து, உயிர் நீங்கும் நிலையில் நின்று தத்தளிக்கின்றாள். அந்தக்கணமே, திடீரென ஒரு கரம் அவளைப்பற்றிப் பிடிக்கின்றது; எடுக்கின்றது, கரையிற் கொண்டு வந்து சேர்க்கின்றது. தான் இறந்துவிட்டேனே என்று ஏங்கிப் பரிதவித்து நிற்கும் அந்நேரத்தில், கிஞ்சித்தும் எதிர்பாராத வகையில் உற்றுழி உதவிய பேரருளாளன் யாராயிருக்குமோ என்று ஏறிட்டுப் பார்க்கின்றாள்.

அவர், வேறெவருமல்லர். நான் எத்தனையோ முறைகளில் மறுப்பு வார்த்தைகள் பேசி விலக்கிய தலைவனே அவ்விடத்தில் தனது உயிரைக் காப்பாற்றியது என்பதனை அறிகின்ருள். தனது வேண்டா வெறுப்பான வன்கண்மையும், அதற்கு நேர் எதிரான பேரருட் செல்வனுகிய தலைவனின் இன்னருளும், அப்போது தான் அவனது அறிவுக்குத் தெளிவாகின்றன. தனது முன்னைய மறுப்பை நினைந்து நாணமடைகின்ருள். உயிர் போகும் தறுவாயில் தானகவே வந்து தன்னைக் காப்பாற்றிய பெருமகனுருக்குத் தான் செயற்பால கைமாறு யாதாகும் என்று தன்னுள்ளேயே உசாவுகிருள். தானே வந்தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளிய பெருமானுக்கு ''அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே'' என்று கவலுகின்ருள். எனது மறுப்பு வார்த்தைகளுக்கு இனி இடம் ஏது? எல்லாம் அவர் திருவுளப்படியே நடைபெறட்டும் என்ற தீர்மானத்துக்கு வருகின்ருள்.

ஒங்கும் ஒரு விடம் உண்டு, அம்பலத்து உம்பார்கள் உய்ய அன்று
தாங்கும் ஒருவன் தடவரை வாய்த் தழங்கும் அருவி
வீங்கும் சுனைப் புனல் விழ்ந்தன்று அழுங்கப், பிடித்தெடுத்து
வாங்கும் அவர்க்கு, அறியேன் சிறியேன் சொல்லும் வாசகமே.

எமக்கென ஒரு சொல்லோ, செயலோ இல்லாத விடத்துப் பூரண சரணுகதி நிலை எய்தப் பெறும். அந்நிலையிலே தான், இறைவனது திருவடி நீழலில் இரண்டறக் கலத்தலாகிய பெருவாழ்வு கிட்டும். ''ஊன் கெட்டு, உயிர் கெட்டு, உணர்வு கெட்டு, என் உள்ளமும் போய், நான் கெட்டவாறும்'' இதுவேயாம்.

திருச்சிற்றம்பலம்

★

## அன்பு

இவ்வுலகத்தில் ஒருநாளும் பகையைப் பகையினுல் ஒடுக்க முடியாது. அதை அன்பினுல்தான் தணித்தல் இயலும். தொன்று தொட்டு வரும் அழிவற்ற நியதி இதுவே.

## உண்மையான பிக்கு

ஒருவன் வேத நூல்களில் ஒரு சிறிதே கற்றிருக்கலாம். எனினும் அந்நூல்கள் கூறும் நெறியை ஐயமற உணர்ந்து அதைப் பின்பற்றுவானுயின், சினத்தையும் பகைமையையும் அறிவின்மையையும் அறவே ஒளித்துத் தர்மம் இன்னதெனச் சரிவர உணர்வானுயின், மண்ணிலும் வானுலகத்திலும் எப்பொருள்மீதும் பற்றுவையாமல் கள்ளமற்ற உள்ளம் கொள்வானுயின், அவன் பிக்குகளின் திருக்கூட்டத்தில் இடம்பெறுவான்.

— ஸ்ரீ புத்தர்

## உண்மையே கடவுள்

உண்மை என்பது கடவுளின் மற்றுமொரு பெயர். முதலில் உண்மையைத் தேடிக்காணவேண்டும். அப்புறம் அழகும் நலனும் உங்களுக்குத்தாமே கிட்டும். கிறிஸ்துநாதர் தம் மலைப்பிரசங்கத்தில் இதைத்தான் போதித்தார். இந்த உண்மையையும் அழகையுந்தான் நான் விரும்புகிறேன். இவற்றிற்காகவே வாழ்கிறேன். இவற்றிற்காகவே சாவேன்.

— காந்தி

# ஞான குரு

துர்க்காதுரந்தரி
செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

"ஞானத்தாற் தொழுவார் சிலஞானிகள்
ஞானத்தால் தொழுவேனுனை நானலேன்
ஞானத்தாற் தொழுவார்கள தொழக்கண்டு
ஞானத்தாலுனை நானும் தொழுவனே"

என்பது அப்பர் பெருமான் வாக்கு. ஞான நெறியிற் தலைப்படுத்தலுக்கு உயர்ந்த பக்குவம் வேண்டும். அதாவது சரியை, கிரியை, யோகம் முற்றியோர்க்கே ஞானம் வாய்க்கப்பெறும் என்று கூறுவர். முன்னைய மூன்றும் தவமாகவும் பின்னைய ஞானம் தவத்தின் பயனாகவும் அமைகிறது. இத்தகைய உயர்ந்த நிலையை அடையவே குருவின் தயவை நாடவேண்டியுள்ளது. ஞானகுரு வாய்க்கப்பெறுதலே தவத்தின் பயனாக வந்து கைகூடுவதாகும்.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல்தானே"

என்பது திருமந்திரம். குருவருளால் தெளிவு பெற்றஞானிகள் பலரை ஈன்றெடுத்த நாடு நம்நாடு. இதுவொன்றே எந்நாட்டிற்கும் இல்லாப் பெருஞ் சிறப்பை நம்நாட்டுக்குக் கொடுத்துள்ளது. தபோவனத்துச் சோதியெனப் போற்றப்படும் ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் இந்த நூற்றாண்டில் நாம் கண்ணாரக்கண்டு தரிசிக்க கிடைத்த ஞானப் பழம் நாடிவந்தோருக்கு நல்லாதரவு நல்கி ஆசிகூறி அணைத்த அரிய ஞானி. இத்தகைய மாண்புமிக்க புனிதரை ஆண்டுக்கொருமுறையாவது விழாவெடுத்து நினைவு கொள்ளும் வாய்ப்பு ஸ்ரீ ஞானானந்த சமாஜத்தின் மூலம் ஈழத்துவாழ் அனைவருக்கும் கிடைத்துள்ளது. ஞானசோதியின் அருள்வலைவுக்குள் அகப்பட்டு இன்று நடமாடும் குருதேவராக விளங்குபவர் ஸ்ரீ ஹரிதாஸ்கிரி சுவாமிகள் அவர்கள். கடந்த ஐந்து ஆண்டுகளாக எமது குருஜீ அவர்களின் ஆசியைப் பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

எமது ஈழத்துத் தலங்களில் தமது அபிமான தலமாகத் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தை அவர்கள் நினைத்துக் கொள்வது நாம் செய்த பெரும் பாக்கியமாகும். அவர்களின் அருளாணையின் படி இங்கு அத்தனை திருப்பணிகளும் இன்று நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. அம்பிகை தாசராக விளங்கிய எங்கள் குருஜீ அவர்கள் எமக்கு இவ்வகையில் வழிகாட்டுவதும் திருவருட்செயலே.

சென்ற ஆண்டு சென்னை மாநகரில் திருமயிலாப்பூரில் திருவிழாக் கோலம் பூண்ட இராச இராசேஸ்வரி மண்டபத்தின் அழகொழுகும் காட்சியை என்றும் பசுமையாக உள்ளத்தில் அமைத்துள்ளேன். பக்தர்கள் கூட்டமும் பாவலர் பாடலும் நர்த்துனர் நடனமும் மண்டலிச் சிறுமிகளின் நாட்டிய நாடகமும் நாதஸ்வர அஞ்சலியும், அந்தணர் கிரியைகளும், வேத ஒலியும் அம் மண்டபத்தையே பூலோக கயிலாயமாக்கிவிட்டது. ஸ்ரீ ஞானானந்த தபோதனரின் குரு பூசை விழாவோடு ஆதிரையும் பூரணையும் சேர்ந்து வரும் மார்கழித்திங்கள் ஞானானந்த மண்டலியினருக்குக் கிடைத்த தவப் பொழுதாகும்.

"தானமும் தவமும் தாம் செய்வராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

என்பதற் கிணங்க அத்தனை பக்தர்களும் தமது கடமைகளைத் தானம் செய்வதிலும் தவமாற்றுவதிலும் கழிப்பதற்கு வாய்ப்பைத் தந்து எங்கள் வணக்கத்துக்குரிய குருஜீ அவர்களின் மலரடியைப் போற்றுகின்றேன். அன்னம் பாலிக்கும் பணியை அற்புதமாகச் செய்து காட்டுபவர் எங்கள் குருஜீ. இதுவே எமது தூயவாழ்வில் அமைய வேண்டியவை. எனவே இப்புனித நாளில் எம்முள்ளத்தை ஞானானந்த சோதியில் கலக்கவைத்து சமுதாயத்தின் துயரைத் துடைத்து எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி வாழ்வதே உண்மைச் சமய வாழ்வு எனக் கொண்டு ஒழுகுவதுடன் எமக்கு உய்வு காட்ட ஞானகுருவை நாம் தேடிக் கொண்டு அவர் மூலமாகவே ஆண்டவன் திருவடியை அடைய முயற்சிப்போமாக.

# திருக்கோவலூர்த் தபோவனம்

ஸ்ரீஞானனந்தகிரிசுவாமிகள் துதிப்பதிகம்

ஆசிரியர்: அருட்கவி - தவத்திரு ஸாதுராம் ஸ்வாமிகள்,
(ஸ்ரீ வள்ளிமலைத் திருப்புகழ் ஸச்சிதானந்த சுவாமிகளின் சீடர், சென்னை - இந்தியா.)

## அறுசீரடி ஆசிரிய விருத்தம்

1. ஞாந கணேசன் திருவுருவும்
   ஞாந ஸ்கந்த குருவுருவும்
   ஞாந லிங்கத் தருவுருவும்
   ஞாநாம் பிகைத்தாய் பெருவுருவும்
   ஞாநக் கண்ணன் ஜகத்குருமெய்ஞ்
   ஞாந லக்ஷ்மி இருவுருவும்
   ஞாநத் தபோவ நத்தில் அமை
   ஞாநா நந்த கிரிமுநியே!

2. பொய்கை ஆழ்வார் பேயாழ்வார்
   பூதத் தாழ்வார் ஒன்றுய்ச் சேர்
   செய்கை செய்த திருமாயன்
   திரிவிக் கிரமன் உலகளந்தான்
   உய்கை செய்கோ பாலநகர்
   கோவல ஊருக் கொருங்கணித்தார்
   நைகை இல்லாத் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே!

3. ஹடயோ கத்திற் கரைகண்ட
   ஹாநி இல் ஆ சாரியனே!
   திடயோ கத்தும் ஞாநத்தும்
   செய்யும் கிரியை சரியையிலும்
   உடல்யோ கத்தும் கர்மபக்தி
   யோகங் களிலும் உயர்ந்தவனே!
   நடயோ கத்தார் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே!

4. ஆதி சங்க ராசார்யர்
   அமைத்தே வழங்கும் தசநாம
   ஜாதி ஸாது ஸந்யாஸி
   ஜநத்துள் 'கிரி' யின் பரம்பரைகள்
   மாதி யாகி! ஸித்திலிங்க
   மடத்தும் வாழ்ந்த ஆச்சிரம!
   நாதி! அநாதி! தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே!

5. ஆட்டை யன்பட் டிக்கண்ணும்
   அன்றி ஏர்க்காட் டின்கண்ணும்
   வீட்டை அமைத்து மெய்ஞ்ஞாந
   வீட்டைக் காண வழிவகுத்தாய்!
   பாட்டைப் பாடி ஆடிமஹா
   பக்தர் குழாங்கள் பரவ அளி
   நாட்டை பாடும் தபோவநத்தில்
   ஞாநா நந்த கிரிமுநியே!

6. அந்த நாஸு ரனை அரனுர்
   அன்று சூலத் தாற்குத்தி
   நந்தக் கொன்ற திருத்தலமா
   நாட்டும் கோவல் வீரட்டம்
   அந்தப் புறமாத் தென்பெண்ணைக்
   கிந்தப் புறமா அமைந்தொளிரும்
   நந்தும் தெய்வத் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே!

7. ஹிந்து ஸமயக் கடவுளர்கள்
   எவர்க்கும் இடம்உண் டிங்கென்று
   வந்து தெய்வ மூர்த்தங்கள்
   பலவும் வைத்து வழிபாடு
   தந்து காலை பகல் மாலை
   இரவும் தாதர் தாம் தொழுங்கால்
   நைந்துள் ளுருகும் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே!

8. நூறு மதங்கள் ஆயிரமா
   நுவன்றும் பிரமம் ஒன்றென்றும்
   ஆறு ஸமயம் ஹிந்துமதத்
   தகத்தும் புறத்தும் ஆயும்அமை
   வேறு வேறு முறைமை அல
   மெய்யாய்ஒன்றென்றும்தெரித்தாய்!
   நாறும் பொழில்சூழ் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே

9. குருவாம் சிவரத் திநகிரியைக்
   கொண்டா டும்சீ டர்க்கரசே!
   திருவார் தைக்குத் திகைத் திநத்தில்
   ஜெனித்த ஞாநத் துறவரசே!
   கருவார் உடலம் மறைந்தும்அருட்
   கடலாக் கரவா தொளிர் ஞாநக்
   கெருவா! கேடில் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுநியே

10 அடியார் வருவோர் தரிசநத்துக்
   காச்சி ரமத்துக் கவரைஎலாம்
   நொடியார் கடியில் கரிசநமா
   நுண்ணி துசாவிப் பரிஜநமாம்
   படியா சிகளைப் பகர்ந்தன்னம்
   பாலித் தாங்கே ஸமாதிகண்டாய்
   நடியார் சோலைத் தபோவநத்து
   ஞாநா நந்த கிரிமுனியே!

With best compliments from

**Vijaya Corporation**

243, MAIN STREET,

COLOMBO-11.

Tele. 27359

With best compliments from



# CEYLON STEEL CO.

HARDWARE MERCHANTS

332, Old Moor Street,
COLOMBO-12.

Phone: 3 4 8 7 5

Cables: CEYSTCO

With best compliments from

**Ceylon Chemical Suppliers**

136, Wolfendhal Street,
Colombo-13.

Telephone: 35810
32117

With best compliments from

# New Muthumeenachi Jewellery

No. 152 B, Sea Street,
COLOMBO-11.

Telephone: 33164

**With best compliments from**

*A Well Wisher*

With best compliments from

# RAJAH STORES

**TEXTILE MERCHANTS**

**28, Galle Road, Wellawatte,**
**COLOMBO - 6.**

**Telephone: 82657**

With best compliments from

**K. M. KALIAPPA PILLAI & CO., LTD.**

263, SEA STREET,
COLOMBO-11.

Telephone: 31913

With best compliments from

# PL. SV. SEVUGAN CHETTIAR

TIMBER MERCHANTS

**140, Armour Street,**
**Colombo-12.**

**Telephone: 24629**

# இந்துநேசியாவில் இந்துக்கள்

நா. முத்தையா - ஆசிரியர் ஆத்மஜோதி

இந்துனேசியா என்ற சொல்லுக்கு இந்துக்கள் வாழும் தேசம் என்பது பொருள். மற்றைய சமயங்கள் தோன்றுவதற்கு முன்பு உலகம் முழுவதிலும் பரவியிருந்த ஒரே ஒரு சமயம் இந்து சமயம் ஆகும். கிழக்கிந்தியத் தீவுகள் என்று நாம் முன்பு படித்த தீவுகளே இன்று இந்துநேசியா என்று அழைக்கப்படுகின்றன. சுமாத்திரா, யாவா, போர்னியோ, பாலித்தீவு ஆகிய நான்கும் சேர்ந்ததே இன்றைய இந்துனேசிய இராச்சியமாகும். இந்தியா, நேபாளம் நீங்கலாக இந்துக்கள் பெரும்பான்மையாக உள்ள இடம் பாலித்தீவாகும். பாலித்தீவு ஜாவாவிற்குக் கிழக்கில் உள்ளது. இத்தீவு சுமார் இரண்டாயிரம் சதுர மைல் பரப்புடையது. இங்கு வாழ்பவர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றெட்டுவீதமானோர் இந்துக்களே.

பாலி மக்கள் இயற்கைப் பொருள்களைக் கடவுளாக எண்ணி வழிபடுகின்றனர். சூரியன் அவர்களுடைய முக்கிய தெய்வம். பாலித்தீவு இயற்கை வளம் நிறைந்தது. இங்குள்ள இயற்கைக் காட்சிகளைக் கண்டுகளிக்க உலகின் எல்லாப் பாகங்களிலிருந்தும் யாத்திரிகர் வருகின்றனர். இங்கு பல மலைகள் உள்ளன. இவற்றுள் ஏழுமலைகள் எரிமலைகள். இவை ஐயாயிரம் அடி தொடக்கம் பத்தாயிரம் அடிவரை உயரமானவை. பார்க்குமிடமெங்கும் இயற்கை அன்னை களிநடம் புரியும் காட்சிகளையே காணலாம். தமிழர்கள் குறிஞ்சி நிலத்தை முருகனது இருப்பிடமாகக் கொண்டாடுவது போல பாலி இந்துக்கள் குறிஞ்சி நிலத்தை சிவனது. இருப்பிடமாகக் கொண்டாடுகின்றனர்.

இச்சந்தர்ப்பத்திலே இமயமலை அரசனுடைய புத்திரி உமாதேவியார் என்பதும், சிவபெருமான் திருக்கைலாயத்திலே வசிக்கிறார் என்பதும், மகாமேருமலையைச் சுற்றியே சூரிய சந்திரர்கள் வலம் வருகின்றனர் என்பதும் போன்ற புராணச் செய்திகள் நினைவுகூர வேண்டியனவாகும். பாலியில் உள்ள பெரியமலை ''குனுங் அகுங்'' (Gunung Agung) இதுதான் உலகின் உச்சி என்று நம்புகின்றனர்.

இறைவழிபாட்டின் மைய இடமும் இதுவே. திருக்கைலாயமலை இந்தியர்களுக்கு எப்படியோ பாலித்தீவிலுள்ளவர்களுக்கு இம்மலை அப்படி விளங்குகின்றது. விண்ணையும் மண்ணையும் இணைக்கும் பாலம் இதுவென நம்புகின்றனர். இந்தமலையையே இங்குள்ளார் கடவுளாகவும் எண்ணுகின்றனர். கோயில்களிலெல்லாம் இம்மலைக்கென ஒரு தனியிடம் ஒதுக்கி அதனைத் தெய்வமாகப் போற்றுகின்றனர். விண்ணிலிருக்கும் தம் முதாதையர் இம்மலை வழியாகப் பூமிக்கு வந்து, அவர்கள் நடத்தும் விழாக்களிலும், பண்டிகைகளிலும் கலந்து கொள்வதாகப் பாலி மக்கள் கருதுகின்றனர்.

கிழமை என்ற சொல்லுக்குத் தலைமை, உரிமையுடையது என்பது பொருள் ஆகும். ஞாயிற்றுக்கிழமை என்றால் சூரியனுக்குரிய நாள் என்றாகும். கிழமை ஏழினுள்ளும் முதற் கிழமை சூரியனுடையது. ஆதலால் சூரியனே உலக முதல்வன் என்பது அவர்களுடைய துணிபு. மேலும் எந்தநாட்டிலும் சூரியனில்லாமல் நாள்கள் நிகழ்வதில்லை. எல்லாக் கிழமையும் சூரியனுடையவை என்றாலும் பிழை இல்லையே.

சிவபெருமானுடைய வலக்கண்ணாகச் சூரியன் விளங்குகின்ற படியினால் சூரியனை வணங்கினாலே மற்றைய கடவுளரையும் வணங்கிய பலனைப் பெறலாம் என்பது அவர்களுடைய நம்பிக்கை. சூரியனை வணங்குவதற்கு எந்தக் கோயிலுக்கும் செல்ல வேண்டியதில்லை. அவரவர் இருக்குமிடத்தில் சூரியன் இருக்கின்றான். மேல் நோக்கிக்காணவேண்டியதே தவிர வேறில்லை. சூரியனே மற்றைய எல்லாவற்றுக்கும் ஒளியைக் கொடுக்கிறான் என்பதும் அவர்களுடைய நம்பிக்கை.

குந்திதேவி சூரியனைவழிபட்டபயனால் கர்ணனைப் பெற்றாள். அவன் கொடையிற் சிறந்தவனாக, வீரனாக விளங்கினான். ஆஞ்சநேயர் என்ற அநுமார், நவவியாகரணம் என்ற இலக்கண நூலை சூரியனைக் குருவாகக் கொண்டு அவன் செல்கின்ற ஓராழிச் சக்கரத் தேரின் முன்பாக அதன் ஓட்டவேகத்திற்

4416

கேற்பச் சலிக்காமல் பின்னோக்கிச் சென்று சூரியன்முன் நின்று பாடங்கேட்டதும் கேட்பதுமான வரலாறு உண்டு. நாக பாம்பின் குட்டிகள் முதலில் சூரியனிடமிருந்தே விடத்தைப் பெறுகின்றன. அருணன் என்ற அரையுடற்பாகன் தேர்ச் சாரதியாக இருக்கப் பெற்றவன். காலை, உச்சி, மாலை என்றவேளைகளில் பிரமன், திருமால், உருத்திரன் என்ற மும்மூர்த்திகளாகிச் செயல்புரிபவன் சூரியன்.

புளியமரத்தின் இலை, நெருஞ்சியிலை, வாகை மரத்தினிலை ஆதியன சூரிய ஒளிமூலம் விரிவதையும், ஒளி குறைந்தபோது குவிவதையும் காண்கிறோம். நாம் காணும் உலகப் பொருள்கள் பலவற்றையும் காணும்படி கண்ணுக்கு ஒளி தருபவன் சூரியன். கண் பார்வையற்ற பிறவிக் குருடனும் வெப்ப மூலம் சூரியனை அறிகிறான். வேதம் உணர்ந்த அந்தணர்களும் சிவதீக்கை பெற்றவர்களும் மூன்று வேளையிலும் திரிகால சந்நிதியாக நீர்பெய்து வழிபடுவார்கள். இராமபிரான் இராவணனிடம் போர்புரிந்து தளர்ச்சியுற்ற போது அகத்திய முனிவர் தோன்றி ''ஆதித்த இருதயம்'' என்ற துதியை உபதேசிக்கப்பெற்றபின் இராமன் இராவணனை வென்றான் என்பது வரலாறு.

பாலித்தீவில் உள்ள இந்துக்கள் காயத்திரி மந்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். மொழி எதுவானாலும் காயத்திரி மந்திரத்தின் உச்சரிப்பில் எவ்வித மாற்றமும் இல்லை. ''நமஸ்காரப் ரியோபானு'' என்பது வடமொழி. அதாவது அன்பரது வணக்கத்தில் மகிழ்பவன் சூரியன் என்பதாகும். ''ஞாயிறு போற்றுதும், ஞாயிறுபோற்றுதும்'' என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது.

பாலி மக்களிடம் சாதிப்பாகுபாடு உள்ளது. அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்னும் அடிப்படையில் சமூகம் பிரிந்துள்ளது. எனினும் இச்சமூகத்தில் தீண்டாதார் என்னும் பிரிவு ஒன்று இல்லை. அந்தணர்களை பாலி மொழியில் பிதாண்தா (Pedanda) என அழைக்கின்றனர். பிரம்மத்தை அறிந்தவன் பிராமணன் என்று கூறுவது போல இவர்களை உயர்ந்த சாதியினராகவும், சமஸ்கிருத மொழியில்வல்லவர்களாகவுங்கருதுகின்றனர். இவர்கள் ஒரு காலத்தில் அரசவையில் முக்கிய இடம் பெற்றிருந்தனர். வணிகர், சூத்திரர் போன்றவர்களின் மதச் சடங்குகளை நடத்தி வைத்தவர்களும் அவர்களே. இப்பொழுதும் அந்த அந்தணர்களுடைய பரம்பரையில் வந்தவர்களே கோயில்களில் புரோகிதர்களாக இருக்கின்றனர்.

இந்துனேசியாவில் உள்ள எல்லா இந்துக்களுமே பிதிர் வழிபாட்டிற்கு முக்கியத்துவங் கொடுக்கின்றனர். அந்தணர்கள் வேத சாஸ்திரங்களில் வல்லவர்களானபடியினால், இறந்தவரின் ஆவியினை நேராகத் தேவ உலகத்திற்கு அனுப்பும் வழிமுறைகளை அறிந்தவர்கள் என நினைக்கின்றனர். இதனால் அந்தணர்களை ஈமக்கடன் செய்விக்க எல்லாச் சாதியினரும் பெரும் பொருள் கொடுத்து அழைக்கின்றனர். அவர்களை அழைத்து ஈமக்கடன் செய்வதை மிகப் பெருமையாகக் கருதுகின்றனர். அதோடு பஞ்சாங்கம் பார்த்து நாள், திதி போன்றவைகளை கணக்கிட்டுக் கூறும்சோதிடர்களாகவும் விளங்குகின்றனர்.

பாலியில் சிறியதும் பெரியதுமாக 4660 கோயில்கள் இருப்பதாக ஜே. எஸ். ஸ்வெல்லன்கிரிபல் (J. S. Swellengrebel) என்னும் அறிஞர் கணக்கிட்டுள்ளார். இக்கோயில்கள் தென்னிந்தியாவில் உள்ள கோயில்களைப் போலவோ அன்றி இலங்கையில் உள்ள கோயில்களைப் போலவோ அமைப்பில் இல்லை. இக்கோயில்களில் இறைவனின் சிலையோ, இறைவியின் சிலையோ இல்லை. இங்கு எத்தகையஉருவவழிபாட்டினையும் காணஇயலாது. கோபுரங்களோ, கற்கூரைவேய்ந்த மண்டபங்களோ இக்கோயில்களில் கிடையாது.

இந்தியாவில் முஸ்லீம் மன்னர்கள் இந்துக் கோயில்களை இடித்துவிட்டு, அவையிருந்த இடங்களில் தங்கள் மசூதிகளையும் மாளிகைகளையும் எழுப்பினார்கள். ஆனால் இந்துனேசியாவைக் கைப்பற்றிய முஸ்லீம் மன்னர்கள் அங்கே தங்கள் மதத்தை நிலை நிறுத்தியபோதிலும் அங்குள்ள மதங்களையும் கோயில்களையும் அழிக்காதிருந்தார்கள். இதற்குக் காரணம் பாலித்தீவில் உள்ள கோயில்களில் விக்கிரக வழிபாடு இல்லாதிருந்தமை என்றும் யூகிக்கக் கூடியதாய் உள்ளது.

இந்துனேசியாவில் உள்ள இந்துக்களை தமிழ் தெரிந்த இந்துக்கள் என்றும் தமிழ் தெரியாத இந்துக்கள் என்றும் இரு பிரிவினராகப் பிரிக்கலாம். தமிழ் தெரிந்த இந்துக்களிற் பெரும்பான்மையினர் தென்னிந்தி

யாவில்இருந்து வந்தவர்களே. ஒருசிலர் யாழ்ப்பாணத்திலிருந்தும் வந்து குடியேறியுள்ளனர். ஆனால் எல்லாத் தமிழர்களும் எவ்வித வேறுபாடுமின்றி இரண்டறக் கலந்துவிட்டனர். சுமாத்திராவின் தலைநகராகிய மீடான் நகரில் மாத்திரம் 25,000க்கும் அதிகமான தமிழர்கள் வாழுகின்றார்கள். இங்கு சிறியதும் பெரியதுமான பதினேழுகோயில்கள் உண்டு. எல்லாக் கோயில்களும் தென்னிந்திய பாணியில் அமைந்த கோயில்களாகும். இங்கு விக்கிரக வழிபாடே நடைபெற்றுவருகின்றது.

மீடானில் மாரியம்மன் கோயிலே தலைமைக் கோயிலாக விளங்குகின்றது. இங்கு சிவனுக்கும் கண்ணனுக்கும் தனித் தனியான கோயில்கள் உண்டு. மற்றும் பரிவார மூர்த்திகள் எல்லாம் உண்டு. சிவனுக்கு பக்கத்திலேயே சண்டேசுரர் சந்நிதியும் உண்டு. இங்கே பிராமணர்கள் இல்லை. பண்டாரங்களாக உள்ளவர்களும் சாதாரண குடிமக்களாக உள்ளவர்களுமே பூஜகர்களாக உள்ளனர். மீடான் மாரியம்மன் கோயில் நல்ல சமூக சேவை செய்து வருகின்றது. ஒரு பிரேதவண்டி வைத்திருந்து இலவச சேவை செய்கிறது. இரண்டு இந்துனேசியப் பள்ளிகளும் ஆறுமதப் பள்ளிகளும் நடத்தி வருகின்றது. இந்துனேசியப் பள்ளியில் படிக்கும் மாணவர்களிடம் சம்பளம் பெற்றே பாடசாலையை நடத்துகின்றது. ஆறுமதப் பள்ளிகளிலும் கற்கும் மாணவர்களிடம் சம்பளம் பெற்றுக் கொள்ளாமல் அங்கு கற்பிக்கும் பன்னிரண்டு ஆசிரியர்களுக்கும் கோயில் நிர்வாகமே சம்பளம் கொடுத்து வருகின்றது. மீடான் மாரியம்மன் கோயிலில் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் கூட்டுவழிபாடும் நற்சிந்தனைப் பேச்சுகளும் நடைபெறுவதோடு ஞாயிறு தோறும் கோயிலில் தியான வகுப்புகளும் நடைபெறுகின்றன.

இங்குள்ள இந்துக்கள் வீடுகளில் என்ன கொண்டாட்டங்கள் நடைபெற்றாலும் கூட்டுவழிபாட்டுக்கு முக்கிய இடம் கொடுக்கின்றனர். தமிழ் தெரிந்த இந்துக்களில் மூவகையினரைக் காணலாம். 50, 60 வயது வரையுள்ள தமிழர்களுக்கு தமிழ் பேச, வாசிக்க, எழுதத் தெரியும். வாலிப வயதினருக்குப் பேசினால் விளங்கும். எழுத, வாசிக்கத் தெரியாது. பத்து வயதிற்குள் உள்ளோருக்கு எழுதவோ, பேசவோ, வாசிக்கவோ தெரியாது. தமிழ் தெரியாவிட்டால் சமய வாழ்வும் தங்களுக்கு இல்லை என்பதை உணர்ந்து தற்போது மூன்று வயதுக்கும் ஏழு வயதுக்கும் உட்பட்ட பிள்ளைகளுக்கு தமிழ்மொழிமூலம் இந்துமதத்தைப் போதிக்கிறார்கள்.

தமிழ் தெரியாத இந்துக்கள் இக்கோயில்களில் வந்து வழிபாடுசெய்கிறார்கள். இந்துனேசியா 1945—ம் ஆண்டே சுதந்திரம் அடைந்துவிட்டது. முதலாவது ஜனாதிபதியாக சுகர்ணோ என்பவர் இருந்தார். அவருடைய தாயார் ஒரு அந்தணப் பெண் ஆவார். அவர் இறந்தபோது அவருடைய ஈமக்கிரியைகள் எல்லாம் இந்துமத சம்பிரதாயப்படியே நடந்தன. இந்துனேசியாவில் ஸ்லாம், இந்து, பௌத்தம், கிறிஸ்துவம் ஆகிய நான்கு மதங்களும் தேசிய மதங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எல்லா மதங்களுக்கும் சுதந்திரமும் சமத்துவமும் அளித்த பெருமை சுகர்ணோ அவர்களுக்குரியதாகும். ஆதலினால்தான் அங்குள்ள மக்கள் எல்லாரும் அவர் மறைந்த பின்பும் அவரைப் போற்றுகின்றனர்.

சுகர்ணோ அவர்கள் இந்துக்களுக்குச் செய்த சேவையை என்றும் மறக்கமுடியாது. பாலித்தீவிலுள்ள கல்வியிற் சிறந்த பதின்மரைத் தேர்ந்தெடுத்து பனாறிஸ் சர்வகலாசாலைக்கு அரசாங்கச் செலவிலேயே அனுப்பி இந்து சமயத்தை நன்கு அவர்கள் கற்றுக் கொள்வதற்கு வாய்ப்பு அளித்தார். அவர்கள் அங்குச் சென்று சர்வகலாசாலையில் இந்துமத நூல்களைக் கற்றுக்கொண்டதன் பயனாக பகவத்கீதை, பிரம்மசூத்திரம் போன்ற நூல்கள் இந்துனேசியன் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன.

இந்துனேசிய அரசாங்கம் இந்துக்களுக்கு என்று ‘பிரச்சாடா’ என்ற பெயரோடு ஒரு இந்து சமய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி ஊர்கள் தோறும் கிளைகளை அமைத்ததோடு இந்துக்களின் விஷயங்களைக் கவனிக்கத் தனி ஒரு மந்திரியையும் நியமித்துள்ளது. இதனால் இந்துக்களின் ஒற்றுமை வலுவடைந்துள்ளது என்றே கூறவேண்டும். இந்தப் பிரச்சாடா சபையின் முயற்சியினால் எந்தச் சமயத்தையும் சேராதிருந்த ‘காரோ’ என்ற பூர்வ குடிமக்களில் 3½ இலட்சம் பேர் இந்துக்களாகி உள்ளனர். சுமத்திரா தீவில் மாத்திரம் சேர்ந்த இந்துக்களின் தொகையே இது. மற்றைய தீவுகளிலும் இந்த இயக்கம் அரசாங்

கத்தின் உதவியுடன் பல பணிகளைச் செய்து வருகின்றது. இந்துனேசியச் சுதேசிகளை ''பூமிபுத்திரா'' என்ற பெயரால் அவர்கள் மொழியில் அழைப்பர்.

மைதானம் என்ற தமிழ்ச்சொல் திரிந்து மீடான் ஆகியது. இங்கு இன்றும் பல தமிழ்ச் சொற்கள் உருத்திரியாமலே வழக்கில் இருந்து வருகின்றன. தண்ணீர் சேர்த்துவைக்கும் பெரியடாங்கிகள் 'தீர்த்த நாடி' என்று அழைக்கப்படுகின்றன. இச் சொற்பிரயோகத்தைத் தமிழ் நாட்டிலோ ஈழத்திலோ இன்று வழக்கில் காணமுடியாது. விமானம் 'கருடா' என்று அழைக்கப்படுகிறது. கருடன் என்ற சொல்லே அப்படி வழங்குகிறது. தர்மதூதுவா, குரு இயக்கம், சூரியா, சந்திரா, சோழா, பாண்டவா, பல்லவா, போன்ற பெயர்கள் இன்றும் வழக்கில் உள்ளன. சிலோன், இலங்கை, கொழும்பு, கல்கத்தா, மதருஸ், டில்லி போன்ற பெயர்கள் இன்றும் வீதிகளுக்கு இட்டிருக்கிறார்கள். சில தமிழ்ச் சொற்கள் பலவிதத்தில் உருவமாற்றம் அடைந்தது, முந்திய உருவத்தை எவ்விதத்திலும் அறிந்து கொள்ள முடியாதவாறு சிதைந்து விட்டன. அச்சொற்களின் கருத்தைப் புரிந்து கொள்ளும் போதுதான் அவை தமிழ்ச் சொற்களின் திரிபு என்பதை அறியமுடிகின்றது. மொழிவல்லுனர் இந்துனேசிய மொழிக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பைப் பற்றி இப்பொழுதே ஆராய்ந்து ஒரு புத்தகம் எழுதினல் எதிர் காலத்திலுள்ளஇந்துக்களுக்கும் தமிழர்களுக்கும் அது ஒரு வரப்பிரசாதமாகும்.

இந்துனேசியாவில் வசிக்கும் தமிழ் மக்கள் தமது தாய் மொழியையும் தமது மதத்தையும் மறந்துவிடாமல் இருப்பதற்கு வீட்டிலேயே அதனைக் கண்ணுங் கருத்துமாக வளர்க்கவேண்டும். இந்துமதத்தையும் தமிழ மொழியையும் பிரிக்கமுடியாது. தமிழ்நாடு, ஈழம், சிங்கப்பூர், மலேசியா போன்ற இடங்களில் உள்ளதமிழர்கள் இந்துநேசியத் தமிழர்களுக்கு இந்தவகையில் பல உதவிகள் செய்யக் கடமைப்பட்டுள்ளார்கள். அங்கு தமிழ் அச்சகமோ, தமிழ்ப்பத்திரிகைகளோ, தமிழ்நூல்களோ இல்லை. எங்கள் குழந்தைகள் படித்த புத்தகங்களையும், பத்திரிகைகளையும், சமய நூல்களையும் அங்கு அனுப்பிவைத்தால் அவர்களுக்கு அது பேருதவியாக இருக்கும். வெளிநாடுகளில் உள்ள இந்துக்களுடைய உதவியையும் தமிழர்களுடைய உதவியையும் அங்குள்ள மக்கள் எதிர்பார்க்கிறார்கள். பயன் கருதாது சமயப்பணி புரியும் பிரச்சாரகர்கள் அங்கு தேவைப்படுகின்றனர். இதற்கு ஆதீனங்களும் தமிழ் வளர்க்கும் சங்கங்களும் சமயஸ்தாபனங்களும் ஏற்ற உதவி புரியுமாறு வேண்டுகின்றேன்.

## இறைவன்

பரம தத்துவத்தின் திருவாக்கு 'ஓம்' எனும் பிரணவ மந்திரம். அது ஒன்றே. அது சத்தியம், நித்தியம், அது இறைவனின் சொரூபம். அதுபடைப்பின் சிற்பி. படைப்பிலே பரந்துள்ளது. அது பயமற்றது. எவரிடமும் பகைமை அற்றது. அதன் நிலை காலத்தின் செல்வாக்கிலிருந்து விடுபட்டது. அதற்குப் பிறவி கிடையாது. அது சுயம் பிரகாசம். அதுவே இறைவன். இறைவனைக் குருவின் அருளால் பெறமுடியும்.

—குருநானக்

## முற்கால மக்கள்

இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இந்தியாவுக்கு வந்த மெகஸ்தனிஸ் அப்போது நம் ஜனங்கள் எவ்வளவு சத்துக்களாக வாழ்ந்தார்கள் என்பதைக் கூறியிருக்கின்றான். இந்திய மக்களுக்குப் பொய்யே சொல்லத் தெரியாது. தெருவில் போட்டுக்கிடக்கிற பணத்தைக்கூட எடுத்துச் செல்லமாட்டார்கள் என்றெல்லாம் மெகஸ்தனிஸ் சொல்லியிருக்கின்றான். அந்தக் காலத்து ஜனங்களின் மனசு மாதிரியே இப்போதும் இருக்கக் கூடாதா என்று ஆசையாக இருக்கிறது.

—தெய்வத்தின் குரல்

# "அருமறைகள் பழகிச் சிவந்த பதாம்புயத்தள்"

வைத்திய கலாநிதி இந்திரா சிவயோகம்

பர்வத ராஜனின் புத்திரியாகி, பூரணியாகி, புரந்தரியாகி, ஆயிரந்திருநாமங்களுக்கு உரியவளாகி, கன்னியாகி, அந்நிலையிலும் அகிலாண்ட கோடியை ஈன்ற அன்னையாகி, எக்கணத்திலும் அருள்பாலித்துக் கொண்டே இருக்கின்றாள் சக்தி.

''சிவப்''பொருளின் ''அருளே'' சக்தி வடிவமாகியது. அரனை என்ன தோற்றத்தில் கற்பனை செய்தாலும் அதற்கு அமைந்த முறையில் சக்தியும் மாறுகின்றாள். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற பெண் அம்சத்தின் மென்குணங்களுடன் வீரம் துலங்கவும் காட்சியளிக்கின்றாள். ஒவ்வொரு தோற்றத்திற்கேற்ப சக்தியின் திருவுருவங்கள் கரங்களின் எண்ணிக்கையிலும் தாங்கிய ஆயுதங்களிலும் வேறுபடுகின்றன.

லாவண்யமிக்கதும், ஒளிப்பிழம்பாகிய தோற்றம் திரிபுரசுந்தரியாகிய எழில் தோற்றம்

''அதிசயமான வடிவுடையாள் அரவிந்த மெல்லாம்
துதிசய வானன சுந்தரவல்லி'' என்றும்

''வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து
என் விழியும் நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரை கண்டதில்லை''என்றும்

சக்தி உபாசகரான அபிராமிப்பட்டர், ஆதிசங்கரத் தத்துவங்களைத் தழுவி எழுதியுள்ளார்.

அம்பிகையே எழுதாமறையாகி, ஆதி அந்தமற்ற வேதங்களின் உருவத்தோற்றமாகி நிற்கின்றாள் என்பது ஆதிசங்கரரின் கொள்கை. ''அகில அண்டமும் நின் ஒளியாக நின்ற ஒளிர்த் திருமேனியை, யுள்ளு தோறுங், களியாகி அந்தக்கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு.''

அப்பேற்பட்ட ஒளித்திருமேனியை தியானிக்குந்தோறும், அதைப்பார்த்த கண்கள் ஆனந்த வெள்ளக்களிகூர்வனவாகி பெருகும் என்ற அனுபவத்தை எடுத்து அபிராமிப்பட்டர் சொல்கின்றார்.

தேவியின் திருவுருவம் சாத்திரப்பிரகாரம் இயந்திரங்கள் மீதோ சக்கரங்கள் மீதோ அமைக்கப்படுகின்றன. இயந்திரங்கள் ஆகியவை பல தத்துவங்களை உள்ளடக்கி வரையப்பட்ட கேத்திர கணக்கியல் ரகத்தில் அமைந்த ஒரு சக்தி (Cosmic force)

அதற்கேற்ப அம்பிகையின் பாதாரவிந்தங்களிலேயே அருள் அதிகம் உண்டு, என பதாம்புயங்களிற்கே வணக்கம் செலுத்தப் படுகின்றது.

அதற்கேற்ப அண்ணலின் பாதாரவிந்தங்களைத் தெள்ளு தமிழில் கல்மனமும் நெக்கி நெக்கி உருகுமாறு மணிவாசகப் பெருந்தகை மீண்டும் மீண்டும் ''தாள்களையே'' குறிப்பிடுகின்றார்.

''நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் எம் நெஞ்சில் நீங்காதான்
தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகங்கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க
புறத்தார்க்கு சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள் மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநந் தேவன் அடி போற்றி''

என்று அடுத்தடுத்த வார்த்தைகளில் மாதேவனுடைய திருவடிக் கமலங்களையே சிந்தையிலடக்கி வாதவூரர் வருணிக்கின்றார் சிவபுராணத்தில். திருவெம்பாவையில்,

''அண்ணாமலையான் அடிக்கமலம்'' என்றும்
''போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்,
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்''
—என்றும்

சிவப்பரம்பொருளின் அருமை பெருமையை எடுத்துக்காட்டினார். திருவண்ணாமலையில் ஒளிப்பிழம்பாகியகால பிரம விஷ்ணுக்களே அடிமுடி தேடிக் காணாது தவித்தார்கள்.

அத்தகைய எம்பிரானின் கருணைகடாட்சத்தைப் பெற்றவர்களும் அந்த ஆனந்தத்தில் திளைத்திருப்பவர்களுக்கும் அந்த அநுபவம் தனிப்பட்டது. வேதசாஸ்திரப்புராணங்களை வருடுவதால் சிவந்த, அழகிய, பாதாரவிந்தங்களைத் தொழுது நம் காணிக்கையைச் செலுத்துவோமாக.

மேலும் இப்பேர்ப்பட்ட செங்கமல மன்ன பாதங்களையுடைய உண்ணாமுலையாள் சந்நிதியிலே திருவவதாரம் செய்த குருஜி அவர்களின் — ஹரிதாஸ்கிரி ஸ்வாமிகளின் கருணை என்னே! பிறவிக்கடலை நீக்குவதற்கு வழிகாட்டுமாறு குருபெருமானே எழுந்தருளி நமக்கு இம்மை மறுமைக்கு அருள்பாலிக்கின்றார். நம் பேறு பெரிது.

ராதேக்கிருஷ்ணா!

## அருளாலயம்

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

அருளாலயம்—ஞான
அருளாலயம்

ஆறு கோண வடிவு கொண்ட
அருளாலயம்
அழகு மிளிர அமைந்திருக்கும்
அருளாலயம்
ஆறுமுகனே இந்த மண்ணில்
ஞானானந்தர்
ஆகி நின்ற நிலைமை காட்டும்
அருளாலயம்

தெளிந்த ஞான ஜோதி வீசும்
அருளாலயம்
தேர்ந்த சிற்பி பலரும் கண்ட
அருளாலயம்
ஒளியைப் பாய்ச்சி உள்ளமெல்லாம்
பண்படுத்திடும்
உயர்ந்த ஞான நினைவை யூட்டும்
அருளாலயம்

பழுத்த ஞானப் பழத்தைக் காட்டும்
அருளாலயம்
பக்தி வெள்ளம் பரிண மிக்கும்
அருளாலயம்
குழந்தை போலக் குமிண் சிரிப்புக்
கொண்ட ஞானியின்
கோலமெல்லாம் காட்டும் இந்த
அருளாலயம்

அறிவை யூட்டி ஐய யோட்டும்
அருளாலயம்
அகந்தை யோட்டி அமைதி கூட்டும்
அருளாலயம்
வறுமை ஓட்டி வளமை கூட்டி
மக்களனைவரும்
மகிழ்ச்சி கொள்ளச் செய்யு மிந்த
அருளாலயம்

# பொய்கையாழ்வார் காட்டும் சமரசம்

அறிஞர் பி ஸ்ரீ

ஸ்ரீரங்கத்தில் வீதியிற் சில பிள்ளைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். போர் வெறிகொண்ட மக்கள் வசிக்கும் நகரங்களிலே சிறு பிள்ளைகளின் விளையாடல்களிலும் வீரச்சுவை கொழிக்கும். 'திருவரங்கம், பெரிய கோயில்' என்று சொல்லப்படும் ஸ்ரீ வைணவ ராஜதானியிலோ அந்தப் பழைய காலத்திலே, விளையாட்டிலும் பக்திச் சுவை தான். அப்பிள்ளைகள் அந்தப் பழைய காலத்துப் போர்க் கருவிகளான வில், அம்பு, கத்தி, வேல் முதலானவற்றை விளையாட்டுக் கருவிகளாக வைத்துக்கொள்ள வில்லை; அவர்களுடைய விளையாட்டிலுங்கூடக் கோவிலும் திருவிழாவுந்தான்; பெருமாளும் பிராட்டியுந்தான்!

அந்தச் சிறு பிள்ளைகளில் ஒருவன் தரையிலே சில கோடுகளைக் கீறினான். சில கீறல்களைத் தன்னுடைய தோழர்களுக்குக்காட்டி, 'இதுதான் கோயில்!' என்று சொன்னான். அது கேட்ட பையனொருவன் வேறொரு கோடு கீறி 'இதுதான் பெரிய திருமண்டபம்!' என்றான்.

அதே சமயத்தில் அங்கே வந்து சேர்ந்தார் ஸ்ரீ வைணவ ஆசாரிய சிரேஸ்டரான ராமானுஜர். அவரைக் கண்டதும் ஒரே உத்ஸாகம் பொங்கிவிட்டது பிள்ளைகளுக்கெல்லாம். உடனே அவர்களிற் சிலர் காலால் சில கோடுகளைக் கீறி, 'இதோ உம்முடைய எம்பெருமான் திருமேனி!' என்று அவருக்குக் காட்டினார்கள். பிள்ளைகளல்லவா? பக்தியிலும் விளையாட்டுப் புத்தி வந்துவிட்டது.

''என்ன துஷ்டத்தனம்!' என்று அவர் கோபித்துக் கொண்டாரா, வருத்தப்பட்டாரா, அலட்சியமாகத்தான் போய்விட்டாரா? பிள்ளைகள் காலால் கீறின அந்தக் கீறல்களிலும் பெருமானைக் கண்டு வணக்கம் செலுத்தினர். 'பெரியவரே! பிரசாதம் வாங்கிக் கொள்ளும்' என்று ஒரு பையன் மணலைக் கையில் எடுக்க, அதையும் பக்தியோடு பெற்றுக் கொண்டார்,

சிறு பிள்ளைகளின் தெரு விளையாட்டிலும் எம்பெருமானுடைய ஒரு திருவிளையாடலைக் கண்டார் ராமனுஜர். இறைவன் தனக்கு வேண்டியவர்களான பக்தர்கள் என்ன என்ன உருவத்தில் வழிபடுகிறார்களோ அந்த அந்த உருவத்தையே தன்னுடைய விக்கிரகமாக அக்கீகரிக்கிறான்.

தமர் உகந்த (து) எவ்வுருவம்
அவ்வுருவம் தானே!

[தமர் - தமக்கு வேண்டியவர்களான பக்தர்கள்]

என்பது பொய்கையாழ்வார் வாக்கு.

பொய்கையாழ்வாரின் இந்த வாக்காகிய ஞான தீபந்தான் அந்தச் சிறு பிள்ளைகளின் விளையாட்டிலும் ராமானுஜருக்கு ஒரு பேருண்மையைக் காட்டிக் கொடுத்ததாம்.

கடவுளுக்கு உருவம் உண்டா, இல்லையா? சில மதங்கள் கடவுளுக்கு உருவம் இல்லையென்று சொல்லுகின்றன. ஆனால் நம்மைச் சுற்றியிருக்கும், 'சிருஷ்டி' என்ற அழகான காட்சிகளைப் பாருங்கள். இந்த அழகுகளெல்லாம், இந்த உருவங்களெல்லாம் சுத்த சூனியத்திலிருந்து, வெறும் பாழிலிருந்து முளைத்து விட்டனவா? ஆலமரம் எப்படி வித்தில் அடங்கிக்கிடக்கிறதோ, அப்படியே இயற்கையழகுகளெல்லாம், உருவங்களெல்லாம் ஆதி மூலத்தில் உள்ளபடியே அடங்கியிருக்க வேண்டுமல்லவா?

எனவே, பொய்கையாழ்வார் உருவமுள்ள பகவானை உபாசிக்கிறார். ஆனால் பகவானுடைய உருவம் நாம் காணும் உருவங்களைப்போல் மாறக்கூடியதன்று, அழியக்கூடியதன்று. அழியா அழகு இறைவனாகிய அன்பனுடையவடிவம் என்பர். அழகு வடிவமாகிய அன்பன், அன்பர்கள் ஆசைப்பட்டு வழிபடும் உருவங்களில் எல்லாம் காட்சி தருகிறான்; அன்பர் உகக்கும் பெயர்களையும் தன்னுடைய திருநாமங்களாக அங்கீகரிக்கிறான்.

;

தமர்உகந்த(து) எவ்வுருவம் அவ்வுருவம் தானே
தமர்உகந்த(து) எப்பேர் மற்றப்பேர்!

இறைவனுடைய திருமேனி அதி சூட்சும மாகவும் இயற்கைக்கு அதீதமாகவும் இருந்த போதிலும், இயற்கைப்பொருள்களில் தாம் விரும்பும் ஒன்றைப், 'பகவானே! நீ இதை உனக்குத் திருமேனியாகக் கொள்ளவேணும்' என்று நல்லவர்கள் பிரார்த்தனை செய்து கொண்டால், அப்படியே நல்லான் அருள் செய்கிறானும்.

கடவுளுக்கு உருவம் இல்லை என்று சொல் லும் ஒரு மதம், 'கடவுள் தன்சாயலில் மனி தனைப் படைத்தான்!' என்று சொல்லுகிறது. 'இது எப்படிப்பொருந்தும்? கடவுளுக்குத் தான் சாயலே இல்லையே!' என்று வாதிக்கி றார்கள், நாஸ்திகர்கள். இவர்களோ, 'மனி தன்தான் தன்சாயலில் கடவுளைப் படைத் துக்கொள்கிறன்!' என்பர்.

பொய்கையாழ்வாரின் கொள்கையோ, கிறிஸ்தவர் கொள்கையையும் ஒப்புக்கொள் ளக்கூடும்; நாஸ்திகர் கொள்கையையும் ஒப் புக்கொள்ளமுடியும். பகவான் தன் சாயலில் பக்தனைப்படைக்கிறன்; பக்தனும் தன் சாய லில் பகவானைப் படைத்துக்கொள்கிறன், ஓர் அழகான விக்கிரகமாக. பக்தர்கள் பகவா னைச் சார்ந்திருப்பவர்கள்; பகவானது சொரூ பமோ பக்தர்களின் விருப்பத்தைச் சார்ந் திருக்கிறதாம்.

பகவானையே நம்பி அன்பு செய்யும் பக் தர்கள் உகப்பதுதான் பகவானுக்குத் திரு மேனி, திருப்பெயர்! எவ்வளவு ஆறுதலான, பொருத்தமான கொள்கை!

சிவ பக்தர்கள் விக்கிரக ரூபமாய்ப் பக வானைப் பிரதிஷ்டைசெய்து வழிபடுகிறார்கள். சுவர்களிலே சித்திரமாக எழுதி வழிபடும் பக் தர்களும் உண்டு. அவர்களுடைய அறிவுக்கும் குணங்களுக்கும் தகுந்தபடி இறைவனுடைய உருவங்களையும் அமைத்துக்கொள்கிறார்கள் என்பது பொய்கையாழ்வார் வாக்கு.

சிலர் அசுர சக்திகளை அழித்து உலகத் தைக் காப்பாற்றும் காளியாகக் கடவுளை வழிபடக்கூடும். வேறு சிலர் உலகங்களையெல் லாம் ஆனந்த நடனமாகக் கண்டு இறைவனை நடராஜாவாக வழிபடக்கூடும். இன்னும்சிலர் அறிதுயில் அமர்ந்த கருணைமாமுகிலாக வழி படுவார்கள்.

பெருமானையும் பல உருவங்களில் வழி படுவதுண்டு. பள்ளிகொண்ட பெருமாளாக மட்டுமா?—நின்ற திருக்கோலத்திலும், உலக ளந்த திருக்கோலத்திலும், வேறு திருக் கோலங்களிலும் வழிபடுகிறார்களல்லவா?

எப்படி வழிபாடு செய்த போதிலும், அந்தரங்க பக்தியைப் பார்த்து, இதயத்தைப் பார்த்து, அருள் செய்கிறானும் இஷ்டமூர்த்தி:

**அவர் அவர் தாம் தாம் அறிந்தவா(று) ஏத்தி,**
**இவர் இவர் எம்பெருமான் என்று - சுவர் மிசைச்**
**சாத்தியும், வைத்தும் தொழுவர் உலகளந்த**
**மூர்த்தி உருவே முதல்.**

## சைவ வைணவ சமரசம்

பொய்கையாழ்வார் தமது இஷ்டமூர்த்தி யாகிய திருமாலைப் பரம்பொருளாக வழி பட்ட போதிலும் சமரசஞானம் வாய்ந்த வரே. நமது சநாதன தருமத்தின் இரு கண் கள் என்று சொல்லத்தக்க சைவ வைணவ சமரசத்தை இவர் வற்புறுத்துவது போலவே தோன்றுகிறது. உதாரணமாக இந்தப் பாட்டைப் பாருங்கள்:

> அரன்நா ரணன் நாமம்; ஆன்விடை புள் ஊர்தி;
> உரைநூல் மறை; உறையும் கோயில் – வரை நீர்;
> கருமம், அழிப்(பு) அளிப்பு; கையதுவேல் நேமி;
> உருவ (ம்,எ) ரி கார்; மேனி ஒன்று.

[ஆன்விடை—எருது. புள்- (இங்கே) கருடப் பறவை. ஊர்தி—வாகனம். உரை-உரைக்கும் பிரமாணம். நூல் — (இங்கே) ஆகம நூல். மறை - வேதம். உறையும் கோயில் — உறை விடம். வரை-மலை; (இங்கே) கைலையங் கிரி. நீர் — (இங்கே) கடல். கருமம் — தொழில். அளிப்பு — காப்பாற்றும் தொழில். கையது- கையில் உள்ளது. வேல் — (இங்கே) சூலா யுதம். நேமி—சக்கராயுதம். எரி-நெருப்பு]

சிவபெருமானுக்கும் நாராயண மூர்த் திக்கும் மேனி ஒன்றுதான் என்பது இந்தப் பாட்டின் நேர்ந்த பொருள் என்று தோன்று கிறது. 'வண்ணம் வேறு உடம்பு ஒன்றாய் வானவில் அனையரே' என்று சிவ விஷ்ணு ஒருமையை வேறொரு புலவரும் வருணித் திருக்கிறர்.

'நிறந்தான் வேறு, இந்த இரண்டு மூர்த்திகளுக்கும்; மேனி ஒன்றுதான்!' என்று சொல்லும் இந்தப் புலவர், 'ஆம்; அப்படித்தான் இருக்கிறார்கள்.



**H. H. SADGURU GNANANANDA GIRI MAHARAJ**
OF THAPOVANAM, S. A. DISTRICT.

வானவில்லைப் போலே!' என்று ஓர் வசீகரமான உபமானமும் காட்டுகிறார். வானவில்லில் முக்கியமான இரண்டு நிறங்கள் சிவப்பும் நீலமும் அல்லவா? சிவப்பானது சிவபெருமானுடைய செம்மேனியையும், நீலம் திருமாலின் திருமேனியையும் நினைவூட்டுகின்றன அந்தப் புலவருக்கு. இந்தக் கருத்தைத்தான் பொய்கையாழ்வார் தமது வெண்பாவிலே,

**உருவ(ம்எ)ரிகார்; மேனி ஒன்று**

என்ற கடைசி அடியில் வெளியிடுகிறார்.

அரியும் அரனும் இரண்டு உருவங்களுடன் காணப்பட்ட போதிலும் ஒருவன், ஒருவன் அங்கத்தில் என்றும் இருப்பதாகப் பொய்கையார் கூறியுள்ளார்.

பொன்திகழும் மேனிப் புரிசடைஅம் புண்ணியனும்
நின்றுலகம் தாய நெடுமாலும்-என்றும்
இருவர்(ர்அ)ங்கத்தால் திரிவ ரேலும்-ஒருவன்
ஒருவன் (ன்அ) ங்கத் (து) என்றும் உளன்.

[புரிசடை அம் புண்ணியனும்—பின்னின சடைமுடியோடு கூடிய அழகிய புண்ணிய மூர்த்தியான சிவனும், உலகம் தாய நெடுமாலும்—உலகங்களையெல்லாம் தாவிஅளந்து கொண்ட திருநெடுமாலும், இருவர் அங்கத்தால் திரிவரேலும் — இருவேறு வடிவம் கொண்டு திரிவார்களேயானாலும்.]

திருமாலுக்கும் சிவபெருமானுக்கும் உள்ள நிறவேற்றுமை இந்த மூர்த்திகளின் தொழில் வேற்றுமைக்கும் அறிகுறி என்று கருதலாம். சிவபெருமானின் தொழில் அழிப்பு; திருமாலின் தொழில் அளிப்பு. நெருப்பு மயமான சிவபெருமானுடைய சிவப்பை அழிப்பின் அறிகுறியாகவும், மேகத்தை ஞாபகப்படுத்தும் மகா விஷ்ணுவின் நீலக் கருநிறத்தை அளிப்பின் குறியாகவும் கருதலாம்.

சிவபெருமானுடைய திரிசூலமும் அழிப்புத் தொழிலுக்கு ஏற்றதுதான். ஆனால் திருமாலின் சக்கராயுதத்தைத் துஷ்ட நிக்கிரகத்திற்கு ஏற்றதாகக் கொள்வதைக் காட்டிலும் சிஷ்ட பரிபாலனத்திற்கு ஏற்றதாகவும், அழிக்கப்படும் துஷ்ட ராக்ஷஸர்களுக்கும் அருள் புரிவதாகவும் கருதுவது சம்பிரதாயம்.

எனவே, சக்கராயுதத்தை, 'அருளார் திருச்சக்கரம்' (அருள் நிறைந்த சக்கராயுதம்) என்று வைணவர்கள் சொல்வதுண்டு. இக்கருத்தையே நவீன கவியாகிய பாரதியும்,

**சக்கரத்தை எடுப்ப தொரு கணம்**
**தருமம் பாரில் தழைத்தல் மறுகணம்**

என்று வெளியிட்டிருக்கிறார். இவ்வளவு கருத்தையும் பொதிந்திருப்பது பொய்கையாழ்வார் வாக்கு:

**கருமம்** அழிப்(பு) அளிப்பு; கையதுவேல் நேமி;
உருவ்(ம்எ)ரி கார்; மேனி ஒன்று.

ஒரே கடவுள் திருமாலாக இருந்து அளிக்கிறாரென்றும், சிவபெருமானாக இருந்து அழிக்கிறாரென்றும் பொய்கையாழ்வார் கருதுவதாகத் தோன்றுகிறது.

சிவபெருமானுடைய செயல் முதலியவை பற்றிய சாஸனங்களை ஆகமங்கள் என்றும், திருமாலைப்பற்றிய ஆதார நூல்களை வேதங்கள் என்றும் பொய்கையார் குறிப்பிடுகிறார். வேதங்களும் சிவ பரத்வம் கூறுவதாகச் சைவர்கள் சொல்வதுண்டு. சில ஆகமங்கள் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கூறுவதாக ஸ்ரீ வைஷ்ணவர்கள் குறிப்பிடுவதும் உண்டு.

இத்தகைய சமரசப் பாட்டையும் பிற்கால விஷ்ணு பக்தர்கள் திருமாலுக்கே பெருமை கூறுவதாக வியாக்யானம் செய்திருக்கிறார்கள். ஆனால் முதலாழ்வார்கள் காலத்திலே சிவபெருமானையோ விஷ்ணுவையோ இஷ்ட தெய்வமாகக் கொண்டு பக்தர்கள் வழிபட்டு வந்தபோதிலும் சைவ வைணவச் சண்டை இல்லை என்று ஊகிக்கலாம்.

சிவபரத்வத்தை வற்புறுத்தும் கதைகளில் சிரித்துப் புரம் எரித்த சிவகதையும் ஒன்று. மூன்று அசுரர்கள் வானத்திலே பறந்து திரியும் முப்புரம் அல்லது மூன்று பட்டணங்களில் இருந்துகொண்டே தங்கள் அசுரப் படைகளோடு உலகத்தைப் பாழாக்கி வந்தார்களாம். சிவபெருமான் அந்தத் திரிபுர தகனம் செய்ய விரும்பிச் சண்டைக்குப் புறப்பட்டாராம். இந்தச் சிவகதையைப்பொய்கையார் குறிப்பிடுகிறார்.

பூமியை ரதமாகக் கொண்டார் சிவபெருமான். தேர் சக்கரமில்லாமல் ஓடுமா? சந்திர சூரியர்கள் தேர்ச்சக்கரங்களாக அமைந்தார்களாம். தேருக்குக் குதிரைகள் வேண்டுமே; நாலு வேதங்களும் நாலு தேர்க் குதிரைகள் ஆகிவிட்டன. பிரமன் சாரதியாக அமர

மகா மேருமலையை வில்லாகத் தூக்கிக் கொண்டார் சிவபெருமான். மகா விஷ்ணு அம்பாக அமைந்தாராம். என்ன கருவிகள்! என்ன போர்!

ஆனால் அந்தக் கருவிகள் இல்லாமலே போர் முடிந்துவிட்டது! போர் தொடங்கும் போதே சிவபெருமானுக்குச் சிரிப்பு வந்து விட்டது! அந்தச் சிரிப்பிலே நெருப்பு வந்து விட்டது; அந்த நெருப்பிலே எரிந்துபோனார் கள் அசுரர்கள் - தங்கள் நகரங்களோடும் அடாநெறி நாகரிகத்தோடும்!

இந்தச் சிவ பராக்கிரமத்தைப் பாராட்டி பொய்கையாழ்வார், 'மாமதின் மூன்று எய்த இறையோன்' என்று சிவபெருமானைக் குறிப்பிடுகிறார். இத்தகைய சிவபெருமா னுக்கு மகா விஷ்ணு தமது வலதுபக்கத்திலே இடம் அளிப்பதாகவும் சொல்கிறார்.

இந்த ஆழ்வார் சிவபெருமானை,

ஆலமர நிழல் அறம் நால்வர்க்(கு) அன்றுரைத்த
ஆலம் அவர் கண்டத்(து) அரன்

[ஆலம் அமர்-விஷம் அமர்ந்த, கண்டத்து-கழுத்தையுடைய]

என்று குறிப்பிடுகிறார்.

திருமால் இரணியன் முதலான அசுரர்களை நிக்கிரகம் செய்து லோகோபகாரம் செய்தார் என்றால், சிவபெருமானும் திரிபுர ஸம்ஹாரம் செய்து லோகோபகாரம் செய்தார் என்று புராணம் சொல்லுகிறது. மகா விஷ்ணு நீலரத்தினம் போன்ற குளிர்ந்த வடிவத்தோடு உலகத்திற்கு அருள் செய்து கொண்டிருக்கிறார்; சிவபெருமான் நீறுபூத்த நெருப்பைப்போல இருந்து உலகத்திற்கு உயர்ந்த வழியைக் காட்டிக்கொண்டுதான் இருக்கிறாராம்.

மகாவிஷ்ணு லக்ஷ்மீநாராயண மூர்த்தியாகக் காட்சி தருகிறாரென்றால், சிவபெருமானும் பார்வதியைப் பாகத்திலே தரித்துக் கொண்டு அம்மையப்பராகக்காட்சிதரவில்லையா? மகாவிஷ்ணு ரட்சகத் தொழிலுக்கு அறிகுறியாக நீண்டகிரீடம் அணிந்து ராஜாதி ராஜனாக விளங்குகிறார் என்றால், சிவபெருமான் நீண்ட ஜடாமகுடம் தரித்துத் துறவுக்கு அரசாக காட்சி தருகிறாரல்லவா?

இத்தகைய கருத்துக்களை யெல்லாம் பொதிந்து வெளியிட்டுளதுபோல் இருக்கிறது பின் வரும் பொய்கையார் வாக்கு:

ஏற்றான், புள் ஊர்ந்தான்; எயில் எரித்தான் மார்—விடந்தான்,
நீற்றான், நிழல்மணி வண்ணத்தான்;-கூற்(று) ஒருபால்
மங்கைமான், பூமகளான்; வார்சடையான், நீள் முடியான்
கங்கையான் நீள் கழலான் காப்பு.

(ஏற்றான்-ரிஷபத்தை வாகனமாக உடையவன். புள் ஊர்ந்தான்—பறவையாகிய கருடனை வாகனமாக உடையவன். எயில்-மதில், மார்வு-மார்பு. இடந்தான் – பிளந்தொழித்தான். நீற்றான் – நீறு பூசிக்கொண்டவன். கூற்று ஒருபால்-உடம்பின் ஒருபக்கத்தில்.]

பொய்கையாழ்வார் ஸ்ரீவைஷ்ணவம் சைவ வைஷ்ணவ சமரசத்துடன் ஸர்வ சமய சமரசத்திற்கும் இடங் கொடுப்பது போல் அவ்வளவு ஆழ்ந்தகன்ற அடிப்படையில் அமைந்திருக்கிறது.

பகவானுடைய நாமத்தை உச்சரிக்க வேண்டும். அதற்கு ஜபம் என்று பெயர். உச்சரிக்கும் நாமத்திற்கு எந்த உருவம் இருக்கிறதோ அதை உள்ளத்தில் பதிவு செய்ய வேண்டும். அதற்குத் தியானம் என்று பெயர். ஜெபிக்கும் மந்திரத்தின் உருவத்தை உள்ளத்தில் பதிவு செய்ய வேண்டும். ஜபம், தியானம் இந்த இரண்டிலுமிருந்தோமானால் மனக்குரங்கு வெளியே போவதற்கு இடந்தராது, உள்ளத்திலே அடங்கும். அந்த மனம் அடங்கிவிட்டதானால் நமக்கு எந்தவித மனக்கவலையும் இல்லை ஒடுங்குகின்ற இடத்திலேயே உள்ளபடியாகவே காணக்கூடிய அந்தப் பேரறிவு உதிக்கும்; அது பேரொளியாக முடியும். அதுதான் ஈசுவர தரிசனம் என்று சொல்வது. –ஞான இன்ப வெளி

# முருகனும் சம்பந்தரும்

கி. வா. ஜகந்நாதன்

திருஞான சம்பந்தப் பெருமான் முற்பிறவியில் இருந்த நிலை என்ன? அவர் யாருடைய திரு அவதாரம்?

இந்தக் கேள்வியை எழுப்பிச் சேக்கிழாருடைய பெரிய புராணத்தைப் பார்ப்போம். அங்கே சில குறிப்புக்கள் கிடைக்கின்றன. முன்னைப் பிறவியில் சம்பந்தப் பெருமான் சிவ பெருமானோடு தொடர்புடையவராக இருந்தார் என்பதை இரண்டிடத்தில் சேக்கிழார் குறிக்கிறார்.

சம்பந்தப் பெருமான் இளம் பருவத்தில் சில சமயங்களில் எதையோ நினைத்துக் கொண்டு அழுபவரைப்போல அழுவாராம்; அதைச் சேக்கிழார்;

''பண்டுதிரு வடிமறவாப்
பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர்
வழிபாட்டின் அளித்தருளத்
தொண்டினில் தரவருவார்
தொடர்ந்தபிரி வுணர்வொருகால்
கொண்டெழலும் வெருக்கொண்டாற்
போலழுவார் குறிப்பயலாய்''

என்று சொல்கிறார்.

முன்பிறவியில் தம்முடைய திருவடி மறவாப் பான்மையாக இருந்த இப்பெருமானை சிவபெருமான், தவம் நிறைந்த மறைக்குலத்தவராகிய சிவபாதஇருதயர் தம்மைப் பணிந்த வழிபாட்டினால், அவருக்குத் திருமகனாக அளித்தருள, சிவத்தொண்டு, இன்னதென்று உலகத்தாருக்கு வெளிப்படுத்தத் திருவவதாரஞ் செய்த இவர் முன்பு தொடர்ந்து பின்பு உண்டான பிரிவுணர்ச்சி ஒவ்வொரு சமயமும் பெற்று எழுச்சிபெறவே, அயலான குறிப்பையுடையவராய் அஞ்சினவர்போல அழுவார்' என்பது இதன்பொருள்.

இங்கே, பண்டு திருவடிமறவாப் பான்மையோர்' என்றும், 'தொடர்ந்த பிரிவு உணர்வு' என்றும்,கூறுவன சம்பந்தப் பெருமானுக்கும் சிவ பிரானுக்கும் முற்பிறவியில் இருந்த தொடர்பைக் குறிப்பவை.

பிரமதீர்த்தத்தில் சிவபாதஇருதயர் மூழ்கியபோது அவரைக் காணாமல் இப் பெருமான் தோணியப்பருடைய கோயிலை நோக்கி, ''அம்மே, அப்பா'' என்று அழுதார். இதனைச் சொல்லுகிறார்.

''மெய்ம் மேற்கண் துளிபனிப்ப
வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ
சாரும்பிள் ளைமைதானோ
செம்மேனி வெண்ணீற்றார்
திருத்தோணிச் சிகரம் பார்த்து
அம்மேஅப் பாஎன்றென்
றழைத்தருளி யழுதருள''

தோணியப்பர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிற் சிகரத்தைப் பார்த்து 'அம்மே, அப்பா' என்று இப்பெருமான் அழுதார். அதற்கு என்ன காரணம், 'தமக்கும் இறைவனுக்கும் முன்பு உள்ள சார்போ, அல்லது குழந்தையின் இயல்போ' என்கிறார் சேக்கிழார். ''தம்மேலைச் சார்பு உணர்ந்தோ'' என்பதனால் இப் பெருமானுக்கும் இறைவனுக்கும் முன் பிறவியில் தொடர்பு இருந்தது என்பது புலப்படும்.

இந்தத் தொடர்பு எத்தகையது?

திருஞான சம்பந்தர் தேவாரத்தில் திருத்துருத்திப் பதிகத்தில் உள்ள திருப்பாடல் ஒன்று வருமாறு:

துறக்குமா சொலப்படாய்,
துருத்தியாய், திருந்தடி
மறக்குமா றிலாத என்னை
மையல் செய்திம் மண்ணின் மேல்
பிறக்குமாறு காட்டினாய்,
பிணிப்படும் உடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க்கு
இழுக்குகின்ற தென்னையே''

இதில் 'திருந்தடி மறக்குமாறு இலாத என்னை மண்ணின்மேல், பிறக்குமாறு காட்டினாய்' என்ற பகுதி, சம்பந்தர் முன்பு இறைவன் திருவடியை மறவாமல் வாழ்ந்தவர் என்பதையும், பின்பு இறைவன் செயலால்

இப்போது பிறந்தார் என்பதையும் தெரிவிக்கின்றது. இந்தக் குறிப்பை எண்ணியே சேக்கிழார் மேற்சொன்ன பாடல்களைப் பாடியிருக்க வேண்டும்.

முருகனுடைய திருவருளால் அநுபூதி பெற்றவரும்; முருகனை ''பெம்மான் முருகன் பிறவான் இறவான்'' என்று சொல்பவருமாகிய அருணகிரிநாத சுவாமிகள், முருகனே ஞானசம்பந்தப் பெருமானகத் திருவவதாரம் செய்தருளியதாகப் பல இடங்களில் கூறுவார்.

''புழுகொ ழுகுகாழி கவுணியரின் ஞான
புனிதனென ஏடு தமிழாலே
புனலிலெதிர் ஏற அமரர்கழு வேற
அமர்பொருத வீர குருநாதா''
''பாலறுந்திரு வாயால் ஓதிய
ஏருநீர்க்கெதிர் போயே வாதுசெய்
பாடல் தோற்றிருநாலாம் ஆயிர
சமண் மூடர்
பாரின் மேற்கழு மீதே ஏறிட
நீறிடாத்தமிழ் நாட்டே றிடப்
பாதுகாத்தரு ளாலே கூனிமிர்
இறை யோனும்
ஞாலமேத்திய தோர்மா தேவியும்
ஆலவாய்ப்பதி வாழ்வா மாறெணும்
ஞானபாக்கிய பாலா வேலவ
மயில்வீரா''

என்பன போல வரும் திருப்புகழ்ப் பகுதிகள் இந்தக் கருத்தைத் தெரிவிக்கின்றன.

பதினைந்தாம் நூற்றுண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் இந்தக் கருத்தைச் சொன்ஞர். அவருக்கு முன் சேக்கிழார் காலத்தில் வாழ்ந்திருந்த ஒட்டக்கூத்தரும் ஞானசம்பந்தர் முருகன் அவதாரம் என்ற கருத்தைச் சொல்கிருர்.

அவர் பாடிய தக்க யாகப் பரணியில் 'கோயிலைப் பாடியது' என்ற பகுதியில், கொற்றவையின் திருமுன் கலைமகள், ஞானசம்பந்தர் சமணரை வாதில் வென்ற வரலாற்றைச் சொல்வதாக ஒரு செய்தி வருகிறது. அங்கே அந்த வரலாற்றையே ஒட்டக்கூத்தர் பாடுகிருர்.

தேவி கலைமகளைப்பார்த்து அருளிச்செய்கிருள்,

''வருகதை தெய்வமகள்என மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில் வெல்லுமினிய
தொருகதை சொல்லுதவரி ஒளிவிரி செல்விமுளரி
ஒளிதிகழ் அல்லிகமழும் ஒருமனை வல்லிஎனவே''

என மருமகளாகிய வள்ளியின் மணத்தைப் பெற்று மகிழ்ந்த பிள்ளையாகிய முருகன் மதுரையில் வெல்லும் இனிய கதையைச் சொல்வாயாக' என்று பணிக்கிருள் தேவி. இதைக் கேட்டு கலைமகள் சொல்கிருள்:

''எழுமலை சொல்லும் அசனி இளமயில் வள்ளி கணவன்
இறைமலை வில்லி புதல்வன் இகன்மகன் ஐயை களிறு
கழுமலம் உய்ய விரவு கலியுக எல்லை பொருத
கதைகளில் உள்ளது மணர்கழுமிசை கொள்வதிதுவே'

இங்கும், 'மலையைக் கொன்ற இடியை ஒப்பவன், வள்ளி கணவன், சிவபிரான் புதல்வன்; அம்பிகையின் பிள்ளை, கழுமலமாகிய சிகாழி உய்யும்படி வந்து பொருத கதை என்கிருள்.

இந்த இரண்டு பாடல்களிலும் முருகனை ஞானசம்பந்தராக அவதாரம் செய்தவன் என்ற கருத்தைத் தெளிவாகச் சொல்கிருர் ஒட்டக்கூத்தர்.

சேக்கிழார் இந்தக் கருத்தைக் குறிப்பாகக் கூடச் சொல்லவில்லை. திருஞான சம்பந்தரைப் பிள்ளையார் என்று குறிப்பார், அவர் அம்மையின் முலைப்பாலை உண்டமையால்,

''யாவருக்கும் தந்தைதாய்
எனும் இவர் இப்படியளித்தார்
ஆவதனல் ஆளுடைய
பிள்ளையாராய்''

என்று பாடுகிருர் சேக்கிழார்.

சேக்கிழார் பாடிய பெரிய புராணத்துக்கு மூலநூல் திருத்தொண்டத் தொகை, சுந்தரர் பாடிய அது முதல் நூல். அதன் வழிநூல் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திரு அந்தாதி, அதன் விரிநூல் பெரிய புராணம். ''திருத்தொண்டத்தொகை விரி'' என்று சேக்கிழாரே சொல்வார்.

நம்பியாண்டார் நம்பி சேக்கிழாருக்கு முன் வாழ்ந்தவர். முதலாம் ராஜராஜ சோழன் காலத்தில் இருந்து, அவன் திருமுறையைக் கண்டுபிடிக்கத் துணைசெய்த

தோடு, அவற்றை வகைப்படுத்தவும் உதவி செய்தவர். அவர் திருஞானசம்பந்தரைப் பற்றி ஆறுநூல்கள் பாடியிருக்கிறார். அவை ஆளுடைய பிள்ளையார், திருவந்தாதி ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பை விருத்தம், ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை, ஆளுடைய பிள்ளையார் திருவுலா மாலை, ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம், ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை என்பன. அந்த நூல்களில் ஞானசம்பந்தரைப் பற்றிய பல செய்திகளைக் காணலாம். சேக்கிழார் அவற்றையெல்லாம் பார்த்துப் பலவற்றைப் பெரிய புராணத்தில் சொல்லியிருக்கிறார். நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்கில் காணப்படும் சில செய்திகள் பெரிய புராணத்தில் இல்லை. அவற்றுள் ஒன்று சம்பந்தருடைய முன்னை நிலை.

நம்பியாண்டார் நம்பி சம்பந்தர் முருகனுடைய திருவவதாரம் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறார். அவற்றை இனிப்பார்ப்போம்.

முருகனை மலைமகள் புதல்வன் என்பது வழக்கு. ''இமையணி சிறப்பிற் பழையோள் குழவி'' என்பது திருமுருகாற்றுப்படை. முருகனுக்குரிய இந்தத் தொடரால் சம்பந்தப் பெருமானைச் சொல்லுவார் நம்பிகள்.

''காழி நாடன் கவுணியர் தலைவன்
மாமழை நோக்கி மலைமகள் புதல்வன்''
''பொற்பமர் தோள நற்றமிழ் விரச
மலைமகள் புதல்வ கலைபயில் நாவ'' (10)

என்பவை ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவையில் வருவன.

ஆளுடைய பிள்ளையார் திரு அந்தாதியில் ஒரு பாட்டு. அகத்துறையமைந்தது. பாங்கன் தலைவனை வியத்தல் என்னும் துறை அது. தலைவி இன்ன இடத்தில் இன்ன எழிலோடு இருக்கின்றாள் என்று தலைவன் சொல்ல, அது கேட்ட பாங்கன் அங்கே சென்று அவளைப் பார்க்கிறான். 'அறிவிற் சிறந்த நீ ஒரு பெண்ணிடம் மயங்கலாமா?' என்று தலைவனை இடித்து உரைத்துவிட்டு வந்தவன் அவன் இப்போது தலைவியைப் பார்த்த பிறகு, 'இந்த எழில் மங்கையைப் பார்த்து இங்கேயே மயங்கி நின்றுவிடாமல் நம்மிடம் வந்து செய்தியைச் சொன்ன அவன் மன உறுதியைப் பாராட்டத்தான் வேண்டும்' என்று வியந்து கூறுகிறான், பாங்கன் தலைவனை வியந்து சொல்வதாக அமைந்த பாட்டு அது. 'இந்தப் பெண்ணின் கண்ணாகிய அம்புக்கு இலக்காகியும் தன் இயல்பு மாறாமல் வந்த என் தலைவனுக்கு ஒப்பானவர் இவ்வுலகத்தில் யார் இருக்கிறார்கள்?' என்று வியக்கிறான்.

''மயில் ஏந் தியவள்ளல் தன்னை அளிப்ப
மதிபுணர்ந்த
எயில் ஏந் தியசண்பை நாதன் உலகத்து
எதிர்ப்பவர் யார்
குயில் ஏந் தியபொழில் சோங்கேந்
தியகொம்பின் அன்பு தழீஇ
அயில் ஏந் தியமலர் கண்டுள
ளுய்வந்த அண்ணலுக்கே'' (64)

''குயில்களைத் தன்பால் தாங்கிய சோலையில், கோங்கரும்பு போன்ற தனங்களை ஏந்திய பூங்கொம்பு போன்ற தலைவியினுடைய, அம்பின் இயல்பைப் பொருந்திக் கூர்மையைத் தாங்கிய மலரைப் போன்ற விழிகளைக் கண்டும், உயிரோடு வந்த தலைவனுக்கு, மயிலைக் கொடியாக ஏந்திய முருகனைத் தன்பால் உண்டாக்குவதற்காக, சந்திரனோடு சேர்ந்த மதில்களை உடைய சீகாழிக்குத் தலைவனாகிய சம்பந்தப் பெருமானுக்குரிய உலகத்தில் ஒப்பானவர் யார்?' என்பது இதன் பொருள்.

'சண்பைநாதன் உலகத்துக்கு அண்ணலுக்கு
ஒப்பவர் யார்?'

என்று முடியும்.

இதில் சம்பந்தப் பெருமானைப் பாட்டுடைத் தலைவராகவைத்துப் பாடுகிறார் நம்பிகள். மலைக் கொடியாக ஏந்திய வள்ளல் முருகன். அவனைச் சம்பந்தப் பெருமானாக உலகத்துக்கு அளிக்க வேண்டும் என்று சீகாழி எண்ணியதாம். சிவபெருமான் அளித்த புதல்வன் முருகன். அவனைச் சம்பந்தராகத் தர எண்ணிய சீகாழி ஓரளவு சிவபெருமானைப் போலத் தோற்றம் அளிக்க விரும்பியதாம். சிவபெருமான் தன் தலையில் மதியை வைத்திருக்கிறான். அது போல நாமும் நம் சிகரத்தில் மதியை வைக்கலாம் என்று தன் உறுப்பாகிய மதிலில் சந்திரனை அணிந்திருக்கிறதாம். இங்கே சண்பைநாதனாகிய சம்பந்தர் முருகன் திரு அவதாரம் என்ற குறிப்பை வைத்திருக்கிறார். முருகனைத் தரத்தாலும் சிவபிரானைப் போல சந்திரனைச் சூடிக் கொண்டதாகக் கற்பனை செய்கிறார்.

ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்தில் ஒரு பாட்டு; அதுவும் அகத்துறை அமைந்த பாட்டே. 'நொதுமலர் வரையுணர்த்தித் தோழி வரைவு கடாதல்' என்னும் துறை. தலைவனும் தலைவியும் களவும் காதல் செய்து வரும்போது, அவளை அவன் மணக்கும்படி செய்ய வேண்டுமென்று தோழி எண்ணுகிறாள். 'அயலார் இவளை மணக்க முயலுகிறார்கள். அதற்குள் நீ இவளை மணப்பதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டும்; என்று சொல்கிறாள். இந்தப்பாடலிலும் பாட்டுடைத் தலைவராகச் சம்பந்தர் வருகிறார்.

''சரதம் மணம்மலி பரிசம் வருவன;
தளர்வில் புகலியர் அதிபன், நதிதரு
வரதன், அணிதமிழ் விரசன், மிகுபுகழ்
மருவு சுருதிமலை மலையினை மாதரு
விரதம் உடையை நின் இடையில் மனம்மனம்
விரைசெய் குழலியை அணைவ தரிதென
இரதம் அழிதர வருதல் முனம் இனி
எளிய தொருவகை கருது மலயனே (23)

'மலைக்குத் தலைவனே, இவருடைய மணத்தின் பொருட்டு நிரம்பிய பரிசங்கள் வருகின்றன; இது நிச்சயம். தளர்ச்சியில்லாத சீகாழிப்பதியில் உள்ளார்க்குத் தலைவனும், நதிதரு வரதனும், அலங்காரம் செய்யும் தமிழ் விரசனும் ஆகிய ஞானசம்பந்தப் பெருமானுடைய, மிக்க புகழ் பொருந்திய சுருதிமலையில் தங்கும் தவமுடையாய் நீ; நின்னிடத்தில் மனமானது, 'இனிமேல் அங்குள்ள மணமுடைய குழலையுடைய தலைவியைச் சேர்வது அரிது' என்று சுவை அழியும்படியான நிலை வருவதற்குமுன், இப்போதே அவளை மணப்பதற்குரிய எளிய வழி ஒன்றை ஆராய்ந்து மேற்கொள்வாயாக' என்பது இப்பாடலின் பொருள்.

இங்கே ஞானசம்பந்தப் பெருமானை மூன்று வகையாகச் சிறப்பிக்கிறார் நம்பிகள். புகலியர் அதிபன், நதிதரு வரதன், தமிழ் விரசன் என்பன அவை. புகலியர் அதிபன் என்பது அவர் திருவவதாரம் செய்த சீகாழித் திருப்பதியை எண்ணி அமைந்த பெயர். மூன்றுவனாகச் சொல்லும் தமிழ் விரசன் என்பது சம்பந்தப் பெருமானே தம்மைத் தம் தேவாரப் பாசுரங்களில் சொல்லிக் கொள்ளும் தொடர்.

இடையில் உள்ள நதிதரு வரதன்என்பதுதான் ஆராய்வதற்குரியது. அதற்கு நதியைத்தரும் வரதன் என்றும், நதியால் தரப்பெற்ற வரதன் என்றும், இருவகையாகப் பொருள் விரிக்கலாம். ஞானசம்பந்தர் எந்த ஆற்றையும் உண்டாக்கியதாக வரலாறு இல்லை. அப்படியே நதியால் தரப்பெற்ற வரதன் என்பது ஞானசம்பந்தர் வரலாற்றில் இல்லை.

என்றாலும் நதியால் தரப்பெற்ற வரதன் என்பது பொருத்தமான பெயர் அவன் கங்கையால் தரப்பெற்றவனாதலின் காங்கேயன் என்னும் பெயர் பெற்றான். ''நதிபுத்திர'' என்று அநுபூதியிலும், ''ஆயிரமுகத்து நதி பாலனும்'' என்று திருவகுப்பிலும் அருணகிரிநாதர் முருகனை நதிதரு வரதனாகக் கூறுகிறார்.

எனவே, 'நதிதரு வரதன்' என்பது முருகனைக் குறிக்கும் தொடராகவே கொள்வதற்குரியது. சம்பந்தரைச் சொல்லும்போது முருகனுக்குரிய பெயரைச் சொல்வதற்குக் காரணம், முருகனே சம்பந்தராக அவதரித்தான் என்பதே.

எனவே நம்பியாண்டார் நம்பிகள் முருகனுக்குரிய பெயர்களாகிய ''மலைமகள் புதல்வன்'', ''மயில் ஏந்திய வள்ளல்'', ''நதிதரு வரதன்'' என்பவற்றால் சம்பந்தரைக் குறித்தலால், அவரும் முருகனே சம்பந்தப் பெருமானாக எழுந்தருளினான் என்ற கருத்துடையவர் என்பது தெளிவாகும்.

இந்தக் கருத்தை முதன் முதலாகச் சொன்னவர் நம்பியாண்டார் நம்பிகள், பிறகு கூறியவர் ஒட்டக்கூத்தர், அப்பால் பல காலும் கூறியவர் அருணகிரிநாதர் என்பதை இதுகாறும் எழுதியவற்றால் உணரலாம்.

அந்த அழிவற்ற வஸ்துவைச் சார்வது தான் ஸத்சங்கம், அதற்குத்தான் நல்லோருடன், பெரியோருடன் இணங்கல், இல்லாவிட்டால் ஏழைகுறும்பு, பணச்செருக்கு வித்யா கர்வம் இவையெல்லாம் போதாது. நிழலை வெட்டிப்போட எண்ணினாற் போல நம் காலத்தை வீணாக்கலாமா!''

—ஞான இன்பவெளி

# பண்டைத்தவம்

திருமுருக கிருபானந்தவாரியார்

ஒருவனுக்குச் செல்வம், கல்வி, புகழ், உத்தம பத்தினி, பண்புடைய பாலன், நோயற்ற வாழ்வு, சுகம் ஆகியவை முன்செய்த தவத்தினாலே அமைகின்றன.

**மேலைத் தவத்தளவே யாகுமாம்**
**தான் பெற்ற செல்வம்.**

என்கிறார் ஔவையார்.

இராவணன் காலத்து இலங்கையிலே ஆலமரம், வேலமரம், புங்கமரம், புளியமரம் என்ற மரங்கள் இல்லையாம். எங்கே பார்த்தாலும் கற்பக மரங்கள் காணப்படுகின்றனவாம். செங்கல்லால், கருங்கல்லால் அமைந்த வீடுகள் இல்லையாம். வீடுகள் யாவும் தங்கத்தால் அமைந்து ஒளி செய்கின்றனவாம். அங்கே வேலைக்காரர்களாகக் குற்றேவல் புரிகின்றவர்கள் சிறந்த தேவர்களாம். இவைகளுக்குக் காரணம் என்ன? 'அசுரர்கள் செய்த தவந்தான் காரணம்' என்கின்றார் கம்பநாடர்.

மரமடங்கலும் கற்பகம்; மனையெலாங் கனகம்
அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரமடங்கிவந் துழையராய் உழல்பவர்; ஒருவர்
தரமடங்குவ தன்றிது தவஞ்செய்த தவமால்

இலங்கையிலே ஒரு காட்சியை நேரே பார்க்கின்றார் அநுமார். அரக்கிமார்கள் பூதாகாரமாக குதிர்போல் தங்கப்பீடங்களில் அசையாமல் அமர்ந்திருக்கின்றார்களாம். உளுந்துக்கு எண்ணெய் தடவியது போல் அவர்கள் நிறம் ஒரே பளபளப்பான கருமை. இடை பருத்து மரக்கால் போல் இருக்கின்றார்கள். மிகவும் நுண்ணியதாக, இடையே யில்லையோ என எண்ணுமாறு உள்ள பொன்னிறம் படைத்த ரம்பை, மேனகை, ஊர்வசி முதலிய தேவ மாதர்கள் இந்த அரக்கியர்களைச் சுற்றிச் சுற்றி வந்து வாசனை பொருந்திய நீரால் தெய்வச் சிலையை அர்ச்சகர் அபிஷேகிப்பது போல், குளிப்பாட்டுகின்றார்களாம். இதற்குக் காரணம் யாது? அரக்கர் பூர்வத்தில் செய்த தவந்தான் என்று கூறுகின்றார் கவிச்சக்கரவர்த்தி.

சுட்டுவார் தவமலான்மற் றிட்டுரு வினையவ தின்மை
காட்டினர் விதியார் அஃதுகாண்கிற்பார்காண்மின் அம்மா!
பூட்டுவார் முலை பொருத பொய்யிடை நையப் பூநீர்
ஆட்டுவார் அமரர் மாதர்; ஆடுவார் அரக்கர் மாதர்.

இலங்கையில் உள்ள காட்சியைக் கம்பர் படம் பிடித்துக் காட்டுகின்றார். அவர் பிடித்த படக்காட்சி நூறு நாட்களா ஓடியது? இல்லை. தொள்ளாயிரம் ஆண்டுகளாக ஓடிக்கொண்டிருக்கிறது. அற்புதமான படக்காட்சி. அந்தக் காட்சியில் தவம் மாட்சி பெறுகின்றது.

ஒருவனுக்கு உத்தமமான மனைவி வாய்க்கின்றாள். துருவனைப்போல், மார்க்கண்டேயரைப்போல் மகன் இருக்கின்றான். இதற்குக் காரணம் முன்னே செய்த தவந்தான். "தொலினே ஜேஸின பூஜாபலமு" என்கிறார் தியாகப்பிரம்மம்.

இன்னும் ஓர் அரிய எடுத்துக்காட்டு: ஓதி உய்வு பெறுங்கள்.

நிடத நாட்டின் தலை நகரம் மாவிந்தபுரம். அந்த மாநகரத்தை நன்னெறியில் நின்ற நளச்சக்கரவர்த்தி அரசு புரிகின்றான்.

மற்றொருவனைப் பணியாது உலகமெலாம் ஒரு குடைக்கீழ் அரசு புரிந்த சக்கரவர்த்திகள் அறுவர். அரிச்சந்திரன்; நளன்; முசுகுந்தன்; புருகுத்தன்; புரூரவன்; கார்த்தவீரியன் என்பவர். ஆக்ஞாசக்கரத்தை உருட்டி, அவனியெல்லாம் ஒப்பாரும் மிக்காருமின்றி அரசு புரிந்த சக்கரவர்த்திகள் அறுவரில் ஒருவன் நளவேந்தன்.

சந்திர குலத்தில் வந்த இவன் இந்திரனும் வியக்குமாறு மன்னுயிர் அனைத்தும் தன்னுயிராகக்கருதி அரசு புரிந்தான். இம் மன்னன் ஒருநாள் மாலை அரண்மனையிலுள்ள நந்தவனத்தில் இனிதுஉலாவிக்கொண்டிருந்தான். காமனும் சோமனும் நாணுமாறு அவன் காட்சியளித்தான். அங்கொரு தாமரையோடையில் அரவிந்த மலரில் பொன்னிறமான அழகிய அன்னம் அமர்ந்து ஒளி செய்து கொண்டிருந்தது. அன்னத்தைக் கண்ட அரசன் அதிசயம் அடைந்து அதனைப் பற்றுதற்கு முயன்றான். அது பறந்து சென்று மற்றொரு மலரில்

அமர்ந்தது. நளன் பல முறை முயன்றும் அன்னத்தைப் பற்ற முடியாது திகைத்தான்.

"ஏ அன்னமே! இன்னமேன் தாமதம்? நான் கருணை நிறைந்தவன். என்பால் அன்பால் வருக" என்று இன்சொல்லால் அழைத்தான். அன்னம் பறந்து வந்து காவலனுடைய கர மலரில் அமர்ந்தது. அதனை மன்னன் இமையாது நோக்கி இறும்பூதுற்றான்.

அன்னம் சிரித்தது.

மனிதன் ஒருவனுக்குத்தான் சிரிக்கத்தெரியும். ஏனைய உயிர்கள் சிரிப்பதில்லை. தேசங்கள் தோறும் மொழிகள் வேறு வேறு. ஆனால் சிரிப்பு எல்லோருக்கும் பொதுவானது. மகிழ்ச்சியைத் தெரிவிப்பது புன்னகை.

மன்னன் கை அன்னம் புன்னகை செய்தது.

"அன்னமே! நீ என்னைப்பார்த்து ஏளனமாகச் சிரிக்கின்றனையே. என்ன காரணம்?" என்று நளன் கேட்டான்.

அன்னம், "வேந்தர் பெருமானே! உன்னை அறிஞன் என்று கருதினேன். இப்போது அவ்வாறு கருதியது பிழை என்று கருதுகின்றேன். நீ என்னை மாறி மாறிப் பார்த்து மகிழ்கின்றனையே! விதர்ப்ப தேசத்தில் வீமராசன் பெற்ற தமயந்தி என்ற ஓர் அன்னம் இருக்கின்றது. அதன் கால் நகத்தின் அழகுக்கும் நான் இணையாக மாட்டேன்.

தமயந்தியைக் கண்டு மகிழாமல் என்னைக் கண்டு மகிழ்வது, காமதேனுவின் பாலை விரும்பாது, காடித்தண்ணீரை விரும்புவது போலும்; கற்பக மரத்தின் நிழலை விரும்பாது கள்ளிச்செடியின் நிழலை விரும்புவதுபோலும்; குழலோசையைக் கேளாமல் கர்த்தபத்தின் ஓசையைக்கேட்பதுபோலும், சோலைவனத்தை விரும்பும்போது பாலைவனத்தை விரும்புவது போலும் ஆகும். தமயந்தி அன்னநடையும் மின்னலிடையும், மான் விழியும் தேன் மொழியும் படைத்தவள். அப்பெண்மணி கண்மணியனையவள். அவளுக்கு நிகரான ஓர் அழகியை நான்முகக் கடவுள் இதற்கு முன்னும் படைத்ததில்லை; பின்னும் படைக்கப்போவதில்லை. அவள் அழகின் சிகரம். மாற்றுயர்ந்த தங்கப்பதுமை. அவளுடன் வாழும் வாழ்க்கையே சுவர்க்கலோகம்" என்று அன்னம் கூறியது.

இந்த இன்னுரைகளைக் கேட்ட நளச்சக்கரவர்த்தியின் உடம்பில் இன்ப மின்சாரம் பாய்ந்து நாடி நரம்பெல்லாம் பரவியது. அவன் தலை சுற்றியது. நாவில் நீர் வற்றியது. உடம்பில் ஆசைக் கனல் ஏறியது.

"அன்னமே! அந்தத் தமயந்தி என்னை மணந்து கொள்ளுமாறு நீ உதவி செய்" என்று கெஞ்சிக் கேட்டான். அன்னம் அதற்கு உடன் பட்டு விதர்ப்ப நாட்டை நாடிப் பறந்து சென்றது. பார்த்திவன் பறவை போன திசையைப் பார்த்துச் சிலைபோல் நின்றான்.

விதர்ப்ப நாட்டின் தலைநகரில் நந்தவனத்தின் தாமரைக் குளத்தில் அன்னம் தாமரை மலரில் வந்து அமர்ந்தது. தன் பாங்கிமாருடன் வந்த எழிலரசியாகிய தமயந்தி அன்னத்தைக் கண்டு அதிசயித்தாள். அதன் மீது விருப்பம் கொண்டு பிடிக்க முயன்றாள். அது அவள் பிடிக்கு அகப்படவில்லை. "அன்னமே! என்னுடன் நீ விளையாடமாட்டாயா?" என்று கொஞ்சினாள், கெஞ்சினாள்.

அன்னம், "ஆரணங்கே! நான் சத்திய லோகத்தில் பிரமதேவருடைய கரத்தில் இருந்து விளையாடுவேன். அமராவதி நகரில் தேவர் கோமானுடைய கரத்திலிருந்து விளையாடுவேன். பூவுலகில் ஒப்பாருமிக்காருமில்லாத நளச் சக்கரவர்த்தியின் கர மலரில் நின்று விளையாடுவேன். வர்ணத் தங்கத் தகட்டின் மீது வைக்கும் மாணிக்க மணியை மண்ணாங்கட்டியின் மீது வைக்கலாமா? நள வேந்தன் கரத்தில் விளையாடும் நான் உன் கையில் விளையாடுவது பொருந்துமா?" என்றது.

தமயந்தி, "அன்னமே! நீ குறிப்பிட்ட நளமகா சக்கரவர்த்தி அத்துணைச் சிறந்தவரா?" என்றாள்.

"மாதரசே! எத்திசையில் சென்றாலும் அத்திசையில் நளவேந்தனைக் காண்பதற்காகவே பிரம்மதேவர் நான்கு முகங்களையுடையவராக இருக்கின்றார். நளனுக்கு உள்ள அறிவு நமக்கில்லையே என்று எண்ணி ஏங்கி அகத்தியர் குறுகிவிட்டார். வான்மீகி புற்றுக்குள் ஒளிந்தார். ஆதிசேடன் பாதாளத்தில் பதுங்கினான். காமன் எரிந்து போனான். சோமன் தேய் பிறையாய் நைந்து விட்டான். நள மன்னனுடைய தோற்றமும்

With best compliments from

**JEYA GEM TEXTILES**

No. 95, Main Street,
COLOMBO-11.

Telephone: 33771

DURCA
FOR
COOL DRINKS
BOMBAY SWEETS
SHORT EATS Ete.

CENTRAL BUS STATION

PETTAH.

With best compliments from

# SIVASAKTHY STORES

IMPORTERS, GENERAL MERCHANTS &
ESTATE SUPPLIERS.

**No. 240, Keyzer Street,
COLOMBO.**

**Telephone: 21636**

With best compliments from

\#

\#

\#

\#

\#

\#

\#

\#

******

# Ranjana Stores

52, Bankshall Street,
COLOMBO-11.

Telephone: 25851

With best compliments from

# SRI NAVALANKA TRADERS

Wholesale Dealers in Textiles.

**161 1/8, 1st Floor Main Street**

**COLOMBO - 11**

T'phone: 36832 Cable: Tradenava.

ஓம்

With best compliments from

SAREE PARADAISE

355, Galle Road,

COLOMBO-4.

With best compliments from



# UNICORN METALICS

346, Sri Sangaraja Mawatha

COLOMBO-10

Telephone: 32891

ஓம்

WITH SALUTATIONS AT THE LOTUS FEET

OF

*Sri Gurumaharaj*

FROM

# PR. PL. MEDICALS

(PROP: P. S SHANMUGAM)

**No. 59, Ragala Bazaar,**

**HALGRANOYA.**

Sri Lanka.

ஏற்றமும் அளவிடற்கரியது. அவன் கை பட்டால் பட்ட மரம் தளிர்க்கும். அவன் மனிதருள் மாணிக்கம்; வீரசிங்கம்; கருணைக்கடல்; கற்றவர் புகழும் கொற்றவர் திலகம்'' என்றது அன்னம்.

இந்த மொழிகளைக் கேட்ட தமயந்திக்குக் காதல் தீ மூண்டது. ''அன்னமே அப்பெருந்தகை என்னைப் பொருந்துமாறு செய்'' என்று வேண்டினாள்.

பின்னர் தமயந்தி நளவேந்தனைத் திருமணம் செய்து இன்புற்றாள். அன்னம் தமயந்தியின் சிறப்பினை நளனிடம் கூறியும், நளனுடைய சிறப்பினைத் தமயந்தியிடம் கூறியும் ஒருவருக்கு ஒருவர் மீது காதலை உண்டாக்கித் திருமணம் செய்வித்தது. இதற்கு என்ன காரணம்? அடியிற் காணும் வரலாறு இதற்குக் காரணம்:

இமாசலத்தின் சாரலிலே அடர்ந்த பெருங்காடு. கொடிய விலங்குகள் நிறைந்த வனம். வானளாவிய மரங்கள். இருண்ட அவ் வனத்தில் சிங்கங்கள், புலிகள், கரடிகள், மதயானைகள், காண்டாமிருகங்கள் முதலிய விலங்குகள் கர்ஜனை செய்து இரை தேடும். அவ்வனத்தில் ஆகுகன் என்ற வேடன் ஒருவன் வாழ்ந்தான். அவன் மனைவி ஆகுகி. இவர்கள் கருத்து ஒருமித்து வாழ்ந்தார்கள்.

ஆகுகன் உத்தம குணம் படைத்தவன். அங்கு வரும் யாத்திரீகர்களுக்குத் தேனும் தினைமாவும் தந்து உதவி செய்வான். அவன் வேட்டைத்தொழிலில் வல்லவன். வேட்டையில் மிகவும் முதுமையடைந்த விலங்குகளையும், இளம் குழவிகளான விலங்குகளையும், நோய்வாய்ப்பட்ட விலங்குகளையும் கொல்ல மாட்டான். பிறர்க்கு கொடுமை செய்யும் விலங்குகளை மட்டுமே கொல்லுவான். நல்லவர்களுக்கு நலமே புரிந்து பிறருக்கு நேரும் அல்லல்களை அகற்றி அந்த வேடர் பெருமான் இனிது வாழ்ந்தான்.

ஒரு நாள் மாலை நேரம், காமாதி யறுபகைகளையும் வென்ற ஒரு மாமுனிவர் அக்காட்டுக்கு வந்தார். ஆகுகன் அவரை வரவேற்று உபசரித்தான்.

''ஐயனே! இப்போது மாலை நேரம். இது கொடிய காடு, இரவில் இக்காட்டில் தங்குவது கூடாது. இனி நீர் இக்காட்டைக் கடக்க நேரம் இல்லை. நீர் சிறியேன் வாழும் குகைக்கு வாரும்.'' என்று இன்னுரை கூறி, அம்முனிவரைத் தான் வாழும் குகைக்கு அழைத்துச் சென்றான். அவன் மனைவி ஆகுகி முனிவருடைய அடிமலர் மீது வீழ்ந்து பணிந்தாள்.

தந்தையை உபசரிப்பது போல் தேனும் தினைமாவும் கனிகளும் தந்து அவரைப் பசியாறச் செய்தார்கள். முனிவர் பெருமான் அவர்களின் அன்பு வெள்ளத்தில் மூழ்கினார். 'கொலையே புரிகின்ற, கொடுமை நிறைந்த வேடர் குலத்தின் அன்பின் வடிவங்களாக இவர்கள் காட்சியளிக்கின்றார்கள். பாலைவனத்தில் பசுமையான கற்பகத் தருக்கள் தழைத்து விளங்குவது போல் இவர்கள் காட்சி தருகின்றார்கள். இத்தகைய உத்தமர்களைக் காண்பது அரிது'' என்று நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்தார். மூவரும் சிறிது நேரம் உரையாடி உவந்தார்கள். நள்ளிரவு ஆயிற்று.

ஆகுகன் அருந்தவ முனிவரை நோக்கியுரைக்கின்றான்: ''ஐயனே! இந்தச் சிறிய குகையில் இருவர் மட்டுமே படுக்க முடியும். இரவில் இரைதேடியுலாவும் விலங்குகள் அதிகம், அடியேனும் இவளும் உள்ளே படுத்து தாங்கள் வெளியே படுத்தால் விலங்குகளால் தங்களுக்கு மரணம் நேரும். அடியேனும் தாங்களும் உள்ளே படுத்து, என் மனைவி வெளியே படுத்தால் இவளுக்கு மரணம் நேரிடும். ஆதலால் தாங்களும் இவளும் உள்ளே படுத்து உறங்குங்கள். நான் ஆயுதபாணியாக வெளியே இருப்பேன். இவள் தங்கள் புதல்வி. தந்தையும் மகளும் ஒன்றாக இருக்கலாம். இதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை'' என்று கூறினான். முனிவர் இதற்கு இசைந்தார்.

முனிவரும் ஆகுகியும் கதவை மூடிக்கொண்டு உள்ளே படுத்தார்கள். ஐந்தெழுத்தை உச்சரித்த வண்ணம் முனிவர் கண்ணயர்ந்தார். கணவனுடைய திருவடியைச் சிந்தித்த வண்ணம் ஆகுகி உறங்கினாள்.

வெளியே வில்லேந்திய வண்ணம் வேடன் குன்றின்மீது சாய்ந்து நின்றான். நடுநிசி அவன் கையிலிருந்த வில் உறக்க மயக்கத்தால் நழுவிக்கீழே விழுந்தது.

பசியுடன் இரை தேடிவந்த சிங்கம் அவனைப்பற்றியறைந்து கொன்றது. அவன் உடம்பிலுள்ள சதையைத்தின்று எலும்புக் கூட்டை எறிந்து விட்டுச் சென்றது.

விடியற்காலை முனிவரும் ஆகுகியும், எழுந்து வெளியே வந்து பார்த்தார்கள். கணவன் மாண்டு கிடப்பதைக் கண்ட அப்பதிவிரதை திடுக்கிட்டாள். ''ஆ, பிராணேசா!'' என்றாள். எலும்புக்கூட்டின் மீது வீழ்ந்தாள், அல்லல் கடலில் ஆழ்ந்தாள். அவளுடைய உடம்பிலிருந்து உயிர் பிரிந்தது.

இந்த அவலக் காட்சியைக் கண்டு முனிவர்பெரிதும் வேதனையடைந்தார். ''அந்தோ! மகனும் மகளும் போல் நமக்கு இடம் தந்து, உணவு தந்து, உபசரித்த இந்த உத்தமர்கள் நம்பொருட்டு உயிர் நீத்தார்கள். பாவி நான் இருந்து என்ன பயன்? இவர்கள் வாழ்ந்தால் என்னைப் போன்று பல வழிப்போக்கர்களுக்கு ஆதரவு கிடைக்கும். கெட்டேன். என்னால் இருவர் மாய்ந்தார்கள். இந்தப்பாவத்துக்கு நான் ஆளானேன்.'' என்று கூறிக்கண்ணீர் சொரிந்து புலம்பி அழுதார். அவர் அடைந்த வேதனைக்கு அளவில்லை.

அந்த இருவருடைய உடல்களைப் புனித நீரால் கழுவினர். கட்டைகளை அடுக்கினர். ஓமத் தீ வளர்த்தார். இரு உடல்கள் வேகும் போது ''என் செல்வக்குழந்தைகளே! உங்களுடன் நானும் வருகிறேன்'' என்று கூறி ஜிதாக்கினியில் வீழ்ந்தார். மூவருடைய உடல்களும் வெந்து சாம்பராயின.

இரவில் வந்த முனிவருக்கு இருப்பிடமும் இனிய உணவும் தந்து உபசரித்த புண்ணியப் பயனால் ஆகுகன் என்ற வேடன் நளச்சக்கரவர்த்தியாகப் பிறந்தான். கணவனுடன் உயிர்விட்ட அந்தக் கற்புடைய ஆகுகி தமயந்தியாகப் பிறந்தாள். அருந்தவ முனிவர் அன்னமாகப் பிறந்தார். தம்மால் பிரிந்த அத் தம்பதிகளை மறு பிறப்பில் அன்னமாகத் தூது சென்று இணைத்து வைத்தார்.

சக்கரவர்த்தியாகப் பிறக்க நளன் முற்பிறப்பில் செய்த நல்வினையே காரணமாகும். பண்டைத் தவத்தால் பதவி கிடைக்கும் என்பது இதனால் விளங்குகின்றது.

## ஹரிதாஸின் பாடலின் சிறப்புக்கு காரணம்

அக்பருடைய காலத்திலே தான்சென் என்ற சங்கித வித்துவான் இருந்தார். இசையிலே பெரும் புலவர் அவர். ஒருநாள் அக்பர் அவரை அழைத்து உங்களைவிட சிறந்த சங்கித வித்துவான் யாரும் இருக்க முடியாது என நான் கருதுகிறேன் என்றார்.

''நான் எம்மாத்திரம்? எனக்கு ஹரிதாஸ் என்ற ஒரு குரு இருக்கிறார். அவர் அற்புதமாகப் பாடுவார். ஆனால் அவரைப் பாடச் சொல்வது கஷ்டம்; கடவுளைத் தவிர வேறு யாரையும் அவர் மதிப்பதில்லை'' என்றார் தான்சேன். அக்பரும் தான்சேனும் மாறுவேடம் தரித்து ஹரிதாஸ் விட்டுக்குச் சென்றனர். நல்ல வேளையாக அவர் அப்போது பாடிக்கொண்டிருந்தார். அக்பர் அதில் லயித்து மெய் மறந்தார். அவருடைய ஆனந்தத்துக்கு அளவில்லை. ''நீர் ஏன் இந்த மாதிரிப் பாடுவதில்லை'' என்று தான்சேனைப் பார்த்துக்கேட்டார் அவர்

''நான் உங்களை திருப்தி செய்வதற்காகப் பாடுகிறேன்.
அவர் அந்தராத்மாவைத் திருப்தி செய்வதற்காகப்பாடுகிறார்.
இதுதான் காரணம்'' என்றார் தான்சேன்.

# சேக்கிழார் கண்ட செம்பொருள்

டாக்டர் சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ. பி. எச். டி.

என்று பிறந்தது என்று இயம்ப முடியாத இயல்பினதாய, முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்த் தமிழ்மொழி விளங்குகின்ற காரணத்தால் அம்மொழி 'கன்னித் தமிழ்' என்று வழங்கப்பெறுகின்றது. ''பாலேய் தமிழர் இசைகாரர்'' 'என்பது ஆழ்வார் வாக்கு. பால்போலும் இனிமை நிறைந்த மொழி தமிழ்மொழி என்பது அப்பெரியார் கருத்தாகும். தெய்வப் புலமைச் சேக்கிழார் பெருமானே 'ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்' [2]என்பர். இதனால் தமிழ்மொழி தொன்மை துலங்கும் மொழி என்பதும், இசை இலங்கும் மொழி என்பதும், தெய்வத் தன்மை தோய்ந்த திருமொழி என்பதும், புலனாகும். 'தமிழெனும் இனிய தீஞ்சொற்றையல்' [3]என்று தமிழ் மொழியின் இனிமையைப் பாராட்டுவர் கம்ப நாடர். 'இனிமையும் நீர்மையும் தமிழெனவாகும்' என்று நிகண்டு கூறும். பாரதியாரும் 'வானமளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி[5] என்று தமிழைப் போற்றிப் பாடி மகிழ்ந்தார்.

உலகிடைத் தோன்றி எண்ணற்ற மொழிகள் வாழ்கின்றன. ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வொரு தனித்த சிறப்பியல்பு உண்டு. ''ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும் இலத்தீன் சட்டத்தின் மொழி என்றும் கிரேக்கம் இசையின் மொழி என்றும், பிரெஞ்சு தூதின் மொழி என்றும், இத்தாலியன் காதலின் மொழி என்றும் கூறுவது ஒருபுடை ஒக்குமெனின் தமிழ் இலக்கியத்தின் மொழி எனக் கூறுவது இனிது பொருந்தும், பக்தியின் மொழி எனலுமாம்'' என்று கூறி அளவிலும் சுவையிலும் தமிழிலுள்ள திருப்பாடல்கள் போல் பிற இலக்கியங்களில் இல்லை என்பர் மறைத்திரு தனிநாயக அடிகளார். இக்கூற்று முற்றிலும் உண்மை என்பதனைச் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணங் கொண்டு தெளியலாம்.

திருஞான சம்பந்தர் பெருமானைக் குறிப்பிடும் சேக்கிழார் 'திருமறையும் தீந்தமிழும் சிறக்க வரும் நாயகன்' என்றும் 'வண்டமிழ் செய்தவநிரம்ப மா தவத்தோர் செயல் வாய்ப்ப' வும், 'அசைவில் செழுந்தமிழ் வழக்கேஅயல் வழக்கின் துறைவெல்ல' வும் தோன்றியதாகக் குறிப்பிட்டுள்ளார். சேக்கிழார் பெருமானுக்கு எத்தோற்றமும் செயலும் இறைவனை - முழுமுதற் பொருளாம் சிவனை நினைவூட்டுவதாகவே அமையக் காணலாம்.

தலைவன் ஒருவன் பொருள்வயிற் பிரிய நினைக்கின்றான். தலைவி தன் பிரிவால் துயருற்று மெலிவாளே என்றும் கலங்குகின்றான். பிரிந்து சென்றால் தன்னால் துன்பமின்றி வினை வயப்பட முடியுமா என்றும் நினைந்து பார்க்கிறான். ''இம் மெல்லிய தன்மையுடையாளைப் பிரிந்து செல்வோமாயின், இவளுடைய கண் நெய்தல் நிலத்திலே கயல் மீனாய்த் தோன்றிக் கலக்கும், முல்லை நிலத்திலே கருவிளை மலராய்த் தோன்றி வருத்தும்; குறிஞ்சி நிலத்திலே மானாய்த் தோன்றி மருட்டும்; பாலை நிலத்திலே வேடுவரது கையிலுள்ள கொடிய பாணமாய்த் தோன்றி நமது செலவைத் தடுக்கும்; ஆதலால் இவளைப் பிரிந்து செல்லுதல் பெரிதும் அரிதாகும்'' என்று குறிப்பிடுகின்றான். பாடல் வருமாறு:

> **கானற் கயலாம் வயலிற் கமலமாம்**
> **ஏனற் கருவிளையா மின்புறவில் - மானும்**
> **கடத்து மேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிக்**
> **கடத்து மேன் மெல்லியலாள் கண்!**

காதலில் தோய்ந்த நெஞ்சத்தினன் ஆயினமையின் அத் தலைவனுக்கு எங்குச் சென்றாலும் தலைவியின் கண்கள் தோன்றிக் கலக்கமுறச் செய்கின்றன. நானிலப் பொருள்களும் அவனுக்குத் தலைவியையே நினைவூட்டுகின்றன.

'பாண்டியன் பரிசு' என்னும் காவியத்தில் பாவேந்தர் பாரதிதாசன், அன்னம் என்னும் தலைவி மாட்டுத் தலைவன் வேலன் கொண்ட காதலைக் கவினுற வடித்துள்ளார். தேனைப் போல் மொழியும், அன்றலர்ந்த செந்தாமரை மலர் போல் முகமும், கெண்டை மீனைப் போல் விழியும், விட்டதிர்ந்த மின்னைப் போல் நல்லிடையுங் கொண்டு விண்ணிடையே பன்னூறாயிரம் மீன்கட்கு இடையில் வெண்ணிலவு போல், வானைப்போல் உயர் வாழ்வு

வாழ்ந்த மங்கை அன்னம் என்று கூறி, அத்தகு அன்னத்தை நினைந்து நினைந்து நெக்குருகி நிற்கின்றான் வேலன். அப்போது காதல் கைமிகப் பின்வருமாறு அரற்றுகின்றான் வேலன்.

ஆடப்போம் புனலிலெலாம் அவளே! காற்றில்
அசையப்போம் பொழிலிலெலாம் அவளே! கண்ணால்
தேடப்போம் பொருளிலெலாம் அவளே! நேரில்
தின்னப்போம் சுவையிலெலாம் அவளே! வண்டு
பாடப்போம் மலரிலெலாம் அவளே! மேற்கில்
படுகதிரில் அவள் வடிவே காண்பேன் என்று
வாடக்கண் துயிலாமல் இருந்தான் வேலன்
மலர்ந்திட்ட காலையிலும் அவளைக் கண்டான்.

இது 'காண்பவை யெல்லாம் அவளே போறல்' எனும் காதல் நிலையாகும்.

நிலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலாவென்று ஒளிமுகத்தைக் காட்டும் கவின் நிலவைக் காண்கின்றார் கவிஞர். வானச் சோலையிலே பூத்த தனிப்பூ வென்றும், சொக்கவெள்ளிப் பாற்குடமென்றும், அமுத ஊற்றென்றும், காலை வந்த செம்பருதிக் கடலில் மூழ்கிக் கனல் மாறிக் குளிரடைந்த ஒளிப்பிழம்பென்றும் நிலவை வருணிக்கும் கவிஞர் நிலவுத் தோற்றத்தில் ஓர் உயரிய கருத்தையும் வைத்துப் பாடுகின்றார். ஏழை மக்கள் நாடோறும் உழைத்து நலங்காணாது போகின்றனர். உழைத்த மக்களுக்கு உணவு வயிறாரக் கிடைக்கவில்லை. பசித்த மக்கள் சிறுகூழ் தேடுகின்றனர். பானையில் நிறைந்து கொதித்துக் கனத்திருந்த வெண்சோறு காணுகின்றனர். அப்போது அவர்கள் உறும் இன்பமே, நிலவைக் காணும்போது ஏற்படும் இன்பம் எனக் கூறித் தம் புரட்சிக் கருத்தை வெளியிட்டு நிற்கின்றார் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள்.

உனைக்காணும் போதிலே என் உள்ளத்தில்
ஊறி வரும் உணர்ச்சியினை எழுதுதற்கு
நினைத்தாலும் வார்த்தை கிடைத்திடுவதில்லை
நித்திய தரித்திரராய் உழைத் துழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்த மக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானை ஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின் நிலவே உனைக்காணும் இன்பம் தானே!

இதனாற் கவிஞர் காணும் பொருள்களில் தம் கருத்தை ஏற்றிப் பாடுதல் வழக்குண்மை விளங்கும்.

சேக்கிழார் பெருமானை மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் 'பத்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவி வலவ' என்று பாராட்டிப் போந்தார். இக்கூற்றின் பொருத்தத்தினைப் பெரியபுராணங் கொண்டு நன்கு தெளியலாம்.

கயிலை மலையைக் காண்கின்றார் கவிஞர் சேக்கிழார். 'புண்ணியந் திரண்டுள்ளது போல்வது' கயிலை மலை என்றார்.

அண்ணல்பா கத்தையா ளுடைய நாயகி
உண்ணெகிழ் கருணையின் ஒழுக்கம் போன்றது.

காவிரி என்று பாடுகின்றார். வயலில் நெற்கதிர்கள் முற்றி விளைந்து சாய்ந்திருக்கும் காட்சி சேக்கிழாருக்குச் சிவனடியார்கள் பத்திமை நெறி நின்று தலையினால் வணங்குதல் போன்ற தோற்றத்தை யளிக்கின்றதாம்.

பக்தியின் பாலராகிப்
பரமனுக் காளாம் அன்பர்
தத்தமில் கூடினார்கள்
தலையினால் வணங்கு மாபோல்
மொய்த்த நீள்பத்தி யின்பால்
முதிர்தலை வணங்கி மற்றை
வித்தகர் தன்மை போல
விளைந்தன சாலி யெல்லாம்.[4]

தேவாசிரிய மண்டபத்தின் சிறப்பினைப் புகழ வந்த சேக்கிழார் துன்பந் தீர்க்கும் சிவனடியார்கள் மேனியிற் பொலியும் திருநீறு போல் தூயதாகவும், அவர்கள் 'சிவாயநம' என்று எஞ்ஞான்றும் ஓசை யெழுப்புதலினால் ஆயிரம் பாற்கடல் போல் விளங்குவதாகவும், தேவாசிரிய மண்டபத்தைக் காண்கின்றார். பாற்கடலின் வெண்மைக்கு அடியார் மேனி முழுதும் பூசிய திருநீறும், பாற்கடலில் எழும் அலை ஓசைக்குச் சிவனடியார்களின் 'சிவசிவ' ஒலியும் உவமைகளாம்.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றொளி யால்நிறை தூய்மையால்
பரந்த அஞ்செழுத் தோசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது.[5]

மாலையில் மேற்றிசையில் மாணிக்கச்சுடராம் கதிரவன் மறைவதும், இருள் வருவதும் உலகில் இயல்பாக நடக்கும் ஒன்றாகும். தயரதனிடம் வரம்பெற்ற கைகேயியின் கொடு மனச் செயலுக்கு இரவாகிய நங்கை நாணி ஓடி யொளிந்தாள் என்பர் கம்பர்.

சேனு லாவிய நாளே லாபுவி
    ரொன்று போலவன செய்துபின்
ஏனு லாவிய தோளி னுனிட
    ரெய்த வொன்று மிரங்கிலா
வானி லாநகை மாத ரான்செயல்
    கண்டு மைந்தர்முன் னிறகவும்
நாணி னுளென வேகி னுணவிர்
    கங்கு லாகிய நங்கையே.[6]

கதிரவன் ஒளி மறைந்த பின்னர் வானம் இருண்ட செயலைச் சேக்கிழார் பெருமான், சிவபெருமானின் அஞ்செழுத்தாம் பஞ்சாக்கரத்தை உணர முடியாத அறிவிலார் நெஞ்சம் எவ்வாறு இருண்டு கிடக்குமோ அது போன்று நீண்ட வானம் இருண்டது என்று குறிப்பிட்டுள்ளார்:

**பரன், அஞ்செழுத்தும் உணரா அறிவிலோர்**
நெஞ்சும் என்ன இருண்டது நீண்டவான் [7]

கங்குலாகிய நங்கை முன் கொண்ட புன் முறுவல் போன்றும், வெண்ணீற்றின் பேரொளி போன்றும் நிலா முகிழ்த்தது என்பர் சேக்கிழார்.

நறுமலர்க் கங்குல் நங்கைமுன் கொண்டபுன்
முறுவ லென்ன முகிழ்த்தது வெண்நிலா[8]
ஆற்ற அண்டமெலாம் பரந் தண்ணல்வெண்
நீற்றின் பேரொளி போன்றது நீள் நிலா.[1]

இது போன்றே, கயிலை மலையைக்காணும் சேக்கிழார் பெருமான் கண்களுக்கு அம்மலை ''பொன்னின் வெண்திருநீறு புனைந்தது போன்று நீள்பனி பூசிய மால்வரை,[2] யாகக் காட்சி தரக் காணலாம். நீற்றொளியின் வெண்மை பகல்போல் துலங்குவதாகக் குறிப்பிடுகின்றார் சேக்கிழார்.

ஊைர்ந்த திருநீற் றொளியிற் கெழுமிய நண்பகல்

இவற்றாலெல்லாம் சேக்கிழார் பெருமான் எப்பொருளைக் காணினும் அப்பொருளைச் சிவபெருமானோடும் அல்லது அவரோடு தொடர்புடைய பொருளாகவும் காண்கின்றார் என்பது புலனாகும். இவற்றால், பக்தி நெறியிற் றலைப்பட்ட அவர்தம் மனப்பண்பு விளங்கக் காணலாம்.

அடியார் பெருமை

சேக்கிழார் தம் நூலிற்கு இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும். தொண்டர் தம் பெருமையினைப் பரவிப் பாடிய காரணத்தால் இவர் 'தொண்டர்சீர் பரவுவார்' என்றும் அழைக்கப்பெற்றார். இன்ப துன்பங்களை ஒன்றாக நோக்குபவர் அடியார்கள் ஆவர். 'மெய்த்திருவந்துற்றலும் வெந்துயர்வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரவோர். அவர் நலக் கேடுகள் அவர்கட்கு ஒன்றே; ஓடும் செம்பொனும் ஒன்றே; இறைவனை வணங்கி ஏத்துதலன்றி விட்டுப்பேறும் வேண்டி நிற்காத ஆற்றல் மிக்கவர்கள் அடியார்கள்.

**கேடும் ஆக்கமும் கெட்ட திருவினர்**
**ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விறலின் விளங்கினர்.**

அடியார் போற்றப்படும் முறை.

இல்வாழ்வார்க்குரிய கடமைகளாகத் திருவள்ளுவர் துறந்தவர்க்கும், நல் கூர்ந்தார்க்கும், இறந்தார்க்கும் உதவுதலைக் குறிப்பிட்டுள்ளார்.

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல் வாழ்வான் என்பான் துணை.

இம் முறையில் வரும் அடியார்களை இளையான்குடி மாறநாயனுர் எதிர்கொண்டு அழைத்து, கைகூப்பி வணங்கி, இன்சொல் வழங்கி, வீட்டிற்கு அழைத்துவந்து திருவடிகளைத் தூய்மை செய்து, அமர ஆசனமிட்டு அருச்சித்து, நால்வகை உண்டியினை அறுவகைச் சுவைத்திறத்தில் முக மலர்ச்சியுடன் அளித்த நிலையினைச் சேக்கிழார் பின்வருமாறு பாடுவர்:

ஆர மென்பு புனைந்த ஐயர்த
    மன்ப ரென்பதொர் தன்மையால்
நேர வந்தவர் யாவ ராயினு
    நித்த மாகிய பத்திமுன்
கூர வந்தெதிர் கொண்டு கைகள்
    குவித்து நின்று செவிப்புலத
நீர மென்மது ரப்ப தம்பரி
    வெய்த முன்னுரை செய்தபின்

கொண்டு வந்து மனைப்பு குந்து
    குலவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாத னத்திடை
    வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு
    சுவைத்தி றத்தன வொப்பிலா
அண்டர் நாயகர் தொண்ட ரிச்சையி
    னமுது செய்ய வளித்துளார்.[7]

மங்கையர் மாண்பு

சேக்கிழார் தம் பெரிய புராணத்தில் மகளிர்க்குத் தனியிடம் கொடுத்துச் சிறப்பிக்கின்றார். நம்பியாரூரரின் தாயார் இசை ஞானியாரைக் குறிப்பிடும் பொழுது,

வேதியர் குலத்துள் தோன்றி
மேம்படு சடையனார்க்கு
ஏதமில் கற்பின் வாழ்க்கை
மனை இசை ஞானியார்பால்[3]

என்று கற்பு நெறியொழுகிய வாழ்வின் முறையார் எனக் குறிப்பிட்டுள்ளார். திருநீலகண்டநாயனார் தம் மனைவியாரைக் குறிப்பிடும் பொழுது 'மனைவியாரும் அருந்ததிக் கற்பில் மிக்கார்' என்று பாராட்டியுள்ளார். இயற்பகை நாயனார் மனைவியாரைக் குறிப்பிடும் பொழுது 'தேற்றம் மருவிய தெய்வக் கற்பின் மனைக் கிழத்தியார்' என்று மொழிந்துள்ளார். மானக் கஞ்சாற நாயனார் மனைவியாரைக் குறிப்பிடும் பொழுது 'மழைக்குதவும் பெருங்கற்பின் மனைக் கிழத்தி' என்று கூறுவர். திருவெண்காடு நங்கையினைப் பெண்மைப் பொலிவின் திறலாக வடித்துக் காட்டியுள்ளார்.

வேதகா ரணரடியார்
வேண்டியமெய்ப் பணிசெய்யத்
நீதில்குடிப் பிறந்ததிரு
வெண்காட்டு நங்கையெனும்
காதல்மனைக் கிழத்தியார்
கருத்தொன்ற வரும்பெருமை
நீதிமனை யறம்புரியும்
நீர்மையினை நிலை நிற்பார்.[4]

மேலும் திருவெண்காட்டு நங்கையினை 'பெருகுதிரு மனையறத்தின் வேராகி விளங்கு திருவெண்காட்டு நங்கை[5]'' என்றும், 'அன்பு மிக்க பெருங்கற்பின் அணங்கு திருவெண்காட்டம்மை,[6] என்றும், ''அரிய கற்பின் மனைவியார்''[7] என்றும் பலபடப் புகழ்ந்துரைத்துள்ளார்.

மேலும் சிவனடியார்களின் இல்லறவாழ்வும், பத்தித் தொண்டும் செம்மையுறத் துணை நின்று, மனதாலும் வாக்காலும் செயலாலும் செம்மை சிறக்க உழைத்தவர்கள் அவர்தம் மனைக்கு விளக்காகிய வாழ்க்கைத் துணைவியரே என்பதனைச் சேக்கிழார்யாண்டும் உணர்த்தக் காணலாம்.

**அரசியல் அறம்**

சேக்கிழார் அமைச்சர் தொழிலைத் திறம்பட நடாத்தியவர். எனவே அரசியல் அறம் பிறழாத நெறி முறைகளைத் தம் காப்பியத்தின் ஊடே விளக்கியிருக்கக் காணலாம். அநபாய சோழனைக் குறிப்பிடும்பொழுது,

மண்ணில் வாழ்தரு மன்னுயிர் கட்கெலாம்
கண்ணும் ஆவியு மாம்பெருங்கா வலான்[3]

என்று மண்ணில் வாழும் உயிரினங்களுக்கு அரசன் கண்ணாகவும் உயிராகவும் ஒளிர்கின்றான் என்று போற்றியுள்ளார். மேலும் அரசன் கடமை குடிகளுக்குத் தன்னாலும், தன் பரிசனத்தாலும், கள்வராலும், பகைவராலும், ஏனைய உயிர்களாலும் வரும் ஐவகைப் பயமும் வாராமற் காத்தலாகும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்கா வலனாவான்
மன்னுயிர்காக் குங்காலைத்
தானதனுக் கிடையூறு
தன்னாற்றன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தால்
கள்வரா லுயிர்தம்மால்
ஆனபய மைந்துந்தீர்த்
தறங்காப்பா னல்லனோ?

இவற்றாலும் ''அருமந்த அரசாட்சி அரிதோமற் றெளிதோதான்''[10] என்று குறிப்பிட்டிருப்பதாலும் அரசியல் அறம்பாடிய அறவோர் சேக்கிழார் என்பதனை அறியலாம்.

**காவியச் சுவை**

பத்தி நெறியினைப் பாடவந்த சேக்கிழார் தந்த காப்பியம் காவியச்சுவை நிறைந்து மிளிர்கின்றது. இயற்கைவருணனையும், சொல்லாட்சியும், உவமை அழகும், அணி நலன்களும் ஆங்காங்கே அமைவுறப் பொருந்திக் காவியச் சுவையினைக் கூட்டுவிக்கக் காணலாம். மருத வளத்தை வருணிக்கும் போது வயல் வளம் சூழ்ந்த நாடு நம் கண் முன் நிற்கக் காணலாம்.

சங்கங்கள் வயலெங்குஞ்
சாலிகளை கரும்பெங்கும்
கொங்கெங்கு நிறைகமலக்
குளிர்வாகத் தடமெங்கும்
அங்கங்கே யுழவர்குழா
மார்க்கின்ற வொலியெங்கும்
எங்கெங்கு மலர்ப்படுக
ரிவைகழிய வெழுந்தருளி,

''வங்கினைப் பற்றிப் போகாவல்லுடும் பென்ன நீங்கான்'' என்று கண்ணப்பநாயனார் புராணத்தில் இவர் கையாளும் உவமை தன்மை நவிற்சிச் சிறப்பும், வேடர்களுக்குள் நிகழும் பேச்சுத் தன்மையிலேயே அவரறி பொருளை உவமையாகக் காட்டியிருப்பதும் இவர் நுண்மான் மதிநலத்தினை நுவலா நிற்கும். ''பிள்ளைதைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்'' என்று இவர் பிறிதோரிடத்தில் கையாளும் உவமை, எடுத்த பொருளின் சிறப்பினை ஏற்றமுற வடிக்கும் திறமும் செஞ் சொற்களை வழங்கி நிற்கும் சொல்லழகும் உணர்த்துவதாகும். சோலையை வருணிக்கும் போது,

மொய்யணி சூழ்நிறைநில
முழுவலயங்களின் அலையச்
செய்யதளிர் நறுவிரலின்
செழுமுகையின் நகஞ்சிறப்ப
மெய்யொளியின் நிழற்காணும்
ஆடியென வெண்மதியை
வையமகள் கையணைத்தாற்
போலுயர்வ மலர்ச்சோலை

என்று வருணித்திருப்பது காவியச் சுவையின் உரைகல் எனக்கொள்ளலாம். ஒரு சொல்லையே இருமுறை பெய்து ஒரு தனியழகினைச் சொல்லில் புகுத்திக் காட்டல் சேக்கிழார் இயல்பு. சான்றாகத் திருவாரூர்ச் சிறப்பினைச் செப்ப வந்த சேக்கிழார் பெருமான்,

சைவநெறி ஏழுலகும்
பாலிக்குந் தன்மையினால்
தெய்வ நெறிச் சிவம் பெருக்குந்
திருவாரூர் திருவாரூர்[5]

என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பெரிய புராணமாகிய காவியக் கலைக் கோயிலின் சிறப்பினைக் கூறிக் கொண்டே போகலாம். கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார்,

கருங்கடலைக் கை நீத்துக்
கொள வெளிது; முந்நீர்க்
கடற்கரையி னெய்ர்மணலை
யெண்ணியள விடலாம்;
பெருங்கடல் மேல் வருந்திரையை
யொன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம்
பிரித்து விட லாகும்;
கருங்கடலின் மீனையள
விடலாகும்; வானத்
தாரகையை யளவிடலாஞ்;
சங்கரன்தா டமது
சிரங்கொடிருத் தொண்டர்புரா
ணத்தையள விடநஞ்
சேக்கிழார்க் கெளிதலது
தேவர்க்கும் அரிதே

என்றபடி சேக்கிழார் காட்டிய காவியக்கலைக் கோயிலின் மாண்பினை முற்றவுணர்த்த இயலாது.

பெரிய புராணச்செய்தி

சிவபிரானிடத்துப் பத்தியும் வழிபாடும், அவன் அடியவரிடத்துப் பத்தியும் வழிபாடும் ஆகிய இவையே மண்ணிற் பிறந்தார் உய்தற்கு உரிய வழிகளாக மேற்கொள்ள வேண்டுமென்று சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திற் பல விடங்களில் வற்புறுத்தியுள்ளார்.

மண்ணி னிற்பிறந் தார் பெறும்
பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை
யமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப்
பொலிவு கண் டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன்
வருகென வுரைப்பார்[6]

மேலும்,

சிந்தைசெய்வது சிவன்கழ
லல்லதொன் றில்லார்
அந்திவண்ணர்தம் மடியவர்க்
கமுதுசெய் வித்துக்
கந்தைகீளுடை கோவணங்
கருத்தறிந் துதவி
வந்தசெல்வத்தின் வளத்தினால்
வரும்பயன் கொள்வார்

என்று அமர் நீதி நாயனார் புராணத்திற் குறிப்பிட்டுள்ளார்.

# ஞானப்பிரபு - ஞானானந்தகிரி

S. S. நாகேஸ்வரன், ஸ்ரீஞானானந்த தபோவனம்-திருக்கோயிலூர்

மஹாத்மாக்களாக உயர்ந்த நிலையை அடைந்த பெரியோர்கள் எந்த ஒரு கட்டுப்பாடும், செருக்குமின்றி, எல்லோரிடமும் மனங்கலந்து எளிமையாகப் பழகுவார்கள். அவர்கள் ஆரவாரமின்றி எளிமையும் அமைதியும் நிறைந்த வாழ்க்கை வாழ்வார்கள். அத்தகைய மஹாத்மாக்களில் தென் ஆற்காடு மாவட்டம், திருக்கோவலூருக்கு அருகில் ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில், தபோதனமாய் எழுந்தருளியுள்ள ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் தலைசிறந்த ஜோதிப் பிழம்பாய் திகழ்கிறார்.

ஸ்ரீ சைதன்யர், தியாகையர் போன்ற மஹாத்மாக்களையும் பார்த்துப் பழகுகின்ற பேற்றை நாம் பெறவில்லை. எக்குறையையும் போக்குகின்ற வகையில்தான், நம்மிடையே, இன்று ஸ்ரீ ஞானகிரி தேவர் ஞான ஒளியாய் வாழ்ந்து வருகிறார்.

அவர் குழந்தை போல்கள்ளம் கபடமின்றி எளிமை யாகப் பழகுகிறார். சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்குமேல் வயது நிரம்பி (காலங் கடந்தவராக)விளங்குகின்றார். அவர்வெள்ளை மனமும், பிள்ளைக் குணமும் கொண்டவராக எப்பொழுதும் மாறாத புன்முறுவலுடன் காட்சி தருகிறார். தன்னைச் சூழ்ந்துள்ள பக்தர்களைக் '' கோவிந்தா, தேவா, என்று இறைவன் திருநாமத்தைக் கூறச் செய்து, கேட்டு மகிழும் அவருடைய பெருமையையும், செயல் தன்மைகளும், வியந்து போற்றுதலுக்குரியது. சிறிய சிறிய கதைகள், அடைமொழிகள், மணி வாக்குகளை சதா எடுத்துக்கூறி பேருண்மைகளை விளக்குகிறார். எந்த பெரிய விஷயத்தையும் (தத்துவத்தையும்) சமயப் பேருண்மைகளையும் எளிதில் புரிய வைக்கிறார். குழந்தைகளிடம் தனி அன்பு செலுத்துகிறார்.

ஸ்ரீசுவாமிகளின் அருளைப் பெற்றவர்கள் மன அமைதியை-ஞானத்தை ஆனந்தத்தை —பேரானந்தத்தைபெறுகிறார்கள். பக்தர் உள்ளங்களைக் கொள்ளை கொள்கிறார்.

ஸ்ரீ ஸத்குருநாதரைச் சரணடைந்தவர்களை விட்டுத் துன்பங்கள் விலகிப் போகும். குருதேவரை மனதில் எண்ணித் தமக்குள் வருந்தி, கசிந்துருகி, அழைப்போருக்கு குருஸ்வாமி தரிசனம் அளித்து துன்பத்தைத்துடைப்பார்.

''கடவுள் பக்தியே சாகாமருந்து''. கடவுளிடம் பக்தி செலுத்துவோர்க்கு தேவைகளோ, துன்பங்களோ கிடையா. அவனுக்கு விருப்பு-வெறுப்பு,இன்ப-துன்பம், ஏதுமில்லை. எல்லா நேரத்திலும் இதய பூர்வமாக,சிரத்தா பக்தியுடன், மனமுருக கடவுளை வழிபடுவீர். ''உண்மை, தூய்மை, அஹிம்சை, சத்தியம், ஆகியவற்றின் பிறப்பிடம் பக்தியே'' என்று நாரத சூத்திரம் உபதேசிக்கிறது.

நம்முடைய கலாசாரத்தில் கடவுளும், குருவும் ஒரு நிகராக மதிக்கப்பட்டு பக்தி செலுத்தப்படுகின்றனர். குருபக்தி கடவுள் பக்தியைவிட பெரிதென மதிக்கப்படுகிறது. பிரும்மா – விஷ்ணு – மஹேச்வரனின் மனித வடிவமே குருதேவன். மஹேச்வரனின் கோபத்துக்கு முன்னால் குருவைச் சரணடைந்து பாதுகாப்புப் பெறலாம், குருவின் கோபத்துக்கு முன்னால் நிற்பதற்கேதுமில்லை' என்பது முதுமொழி.

குருவிடம் சரணடைந்தால்—துன்பங்களிலிருந்து நம்மைக் காத்து, நாம் கடைத்தேற வழிகாட்டுவார்.

சித்தலிங்க மடத்திலும், அடுத்து ஞானானந்த தபோவனத்திலும் எழுந்தருளியுள்ள ஸ்ரீ சுவாமிகள் தன்னைச் சரணடைந்தவர்களுக்கு அருள் பாலிக்கின்றார். ஞானத்தபோவன மாதேவனான பிரபு எந்த வகையான மனக் குழப்பத்தையும், நோயையும், துன்பத்தையும் துடைக்கிறார். தீரா வினைகளையும் தீர்த்து வைக்கிறார் பசுவைப்போல் வாழுகின்ற பசுபதி அவர். ஸ்ரீ பஞ்சாம்பர நாதரவர் ஸ்ரீ சுவாமிகள் ஏனைய துறவிகளுக்கெல்லாம் சித்சுவரூபியாய் உள்ளார்.

ஆனால் மாறுபட்ட முறையினால் பிறர்மீது ஆதிக்கம் செலுத்துவதில்லை.

ஒருமுறை ஒரு பஜனை மண்டலி துவக்க விழாவிற்கு வருவதாக ஒப்புக்கொண்டார். ஆனால் வர இயலவில்லை. பக்தர்கள் ஏமாற்ற மடைந்து வருந்தினர். பிறகு ஸ்வாமிஜியை சந்தித்தபோது தம் தாபத்தை வெளிப்படுத்தினர். அதற்கு சுவாமிகள் தாம் ஒரு தவளை வடிவில் பஜனை விளக்குக்கு அருகில் வந்ததாகவும், பஜனை மண்டலியின் தலைவர் தவளை வடிவில் இருந்த தம்மை வெளியே விரட்டியதாகவும் கூறினார். மண்டலியார் இதைக் கேட்டு வியந்து போயினர். உரிய நேரத்தில் நல்லதோர் பசுவாகவும் வந்து காக்ஷி தந்து பிரசாதத்தை ஏற்று, அனுக்ரஹித்துள்ளார். மற்றோர் இடத்தில் பஜனை மஹோத்ஸவத்தில் இரவு திவ்ய நாம சங்கீர்த்தனத்தில் கோஷ்டியாரும் மஹா ஜனங்களும் திளைத்து, மனமுருகி, உணர்ச்சி வசப்பட்டு ஆனந்தாம்ருதத்தில் தோய்ந்திருக்கும் சமயம் திடீரென சந்நதி (சங்கரமடம்) விளிம்பு ஓர மேடையில் ஸ்ரீஞானக் குழந்தை-கண்ணனாக — குழந்தையாகத் தோன்றி, புன்முறுவல் தவழ, குதூகலத்துடன் கைதட்டி, நடனமாடி, கருணாமூர்த்தியாய் காக்ஷியளித்து, யாவரையும் பிரமிக்கச் செய்தது இன்றும் எப்போதும் மனக்கண் முன் தோன்றி நிற்கின்றது.

மற்றோர் சமயம் ஒரு பக்தர் ஸ்வாமிகளிடமிருந்து செல்ல விரும்பினார். ஆனால் குருதேவர் தற்போது செல்ல வேண்டாமென்றும், ஒருநாள் பொறுத்திருந்து செல்லுமாறு பணித்தும், சொற்களைக் கேளாமல், அவசர நிமித்தம் என்பதாகச் சொல்லி அந்த பக்தர் புறப்பட்டார். ஆனால் வழியில் பெருவெள்ளம் குறுக்கிட ''ஆற்றோடு போனான்'' என்பதாக முன்கூட்டியே விளக்கியதின் நிதர்சனம் அறியாதார் யாருமிலர்.

ஒரு சாயந்தரவேளை சித்தலிங்க மடத்தில், அபிவிருத்தி இலாகாவில் பணிபுரியும் ஒரு பக்தர் ஸ்ரீ சுவாமிகளை தரிசிக்க பேரவா கொண்ட நிலையில், அவர் சுவாமிகளின் அறை முகப்பில் அமர்ந்து, பகவான் ஸ்ரீ ரமண மஹரிசிகள் அருளிய ''அருணாசல சிவ'' அக்ஷரமணமாலையைத் துவக்கி மெய்யுருக, விழிநீர் பெருக, உணர்ச்சி பொங்க பாடிய வண்ணமிருக்கையில், வெளியில் வந்து ஆசனத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீஞானகிரி பிரபு, ஆனந்த ஜோதி ஸ்வரூபியாய் பிரகாசித்தவராய், அருகில்மாலைப் பிரார்த்தனைக்காக அண்டியிருந்த பக்தர்களிடை ''அதோ அருணாசலம், அண்ணாமலை'' என்று சுட்டிக்காட்டி, அருணகிரியின் திவ்விய தரிசனத்தை தத்ரூபமாய் கண்முன் நிறுத்திக் (தென்கிழக்கு பாரிசத்தில்) காட்டிய அற்புதக் கண்கொள்ளா காக்ஷி அன்றும், இன்றும், என்றும் மனக்கண்ணில் நித்திய சாக்ஷியாக விளங்குகிறது. பக்தர்கள் பரவசம் எல்லையைக் கடந்தது. அனுபவித்தவர்களே அறிவார் அற்புத காக்ஷியை:

ப்ரபு குருமூர்த்திகளின் அற்புத செயல்களை சொல்வதென்றால் எண்ணில் அடங்கா; ஏட்டில் அடங்கா; விரிந்துகொண்டே போகும் எல்லாக்காலங்களிலும், இத்தகைய மஹான்கள் தோன்றி தம் அறிவுரையினாலும், ஞான ஒளியினாலும், மக்களுக்கு வழி காட்டி, உணர்வூட்டி, உதவுகின்றனர். நம்முடைய காலத்தில் தோன்றி எளிய முறையில், விளம்பரமின்றி குருவாய் குழந்தையாய், அம்மையப்பனாய், பக்தனாய், தோழனாய், பிரமமாய், எல்லாமுமாய் இருந்ததனை இருந்தபடி எடுத்துக் காட்டி, மனித குலத்திற்கு ஈடு இணையற்ற அனுக்கிரஹம் புரிந்து, அன்னபூர்ணியாக அருள்பாலித்து. எல்லோரும் உய்விக்க கடாக்ஷித்து, கருணைகூர்ந்து, எல்லோரும் நாமசங்கீர்த்தனத்தில் திளைத்து, லயித்து, பஜிக்கும்படி செய்து வருகிறார் அவர் ஸ்ரீ பகவத் கீதையில்:

**யம் யம் வாபி[1] ஸ்மரன் பா[4]வம்**
**| த்யஜத்யந்தே[4] கலேவரம் |**
**தம் தமேவைதி கௌ[1]ந்தேய**
**ஸதா தத்பா[4]வ பா[4]வித:** —அத். 8, ஸ்லோ 6

**சரீரம் யதவாப்னோதி**
**யச்சாப் யுத்க்ராமதீஸ்வர: |**
**க்ருஹீத்வைதானி ஸம்யாதி**
**வாயுர் க[3]ந்தா[4] நிவா ஸயாத்[11]** —அத். 15. ஸ்லோ. 8

கூறியபடி நமக்காக வாழ்ந்து வருகிறார். ப்ரபோ! ஸதாஸர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம் — கோவிந்தா — கோவிந்தா

ஜெய் ஸத்குரு மூர்த்திக்கு—ஜெய் ஜெய்
ப்ரபோ! எல்லாம் ஈசன், ஞான கிரீசன்செயல்.

# கற்பூரச் சுடர்

சித்ரா வடிவேல்

ஞானக் கடலா? ஞானச் சுடரா?
ஞான மலையா? ஞான மலரா?
ஞான மழையா? ஞானப் பழமா?

—என்றெல்லாம் நினைந்து நினைந்து, வியந்து போற்றிட, கனிந்து கனிந்து அருள் பாலித்தவர் பரமஹம்ஸ சத்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள். 'ஞானம்' என்னும் சொல்லுக்கே உயிரும் உருவும் தர எழுந்த உத்தமப் பிறவியாக ஒளி வீசியவரே சுவாமிகள்.

காவியுடை தரித்துக்கொண்டே பூவுக்குப் பூ தாவிச்செல்லும் போலிச்சாமிகள் உலவும் பூமி இது; சித்து வேலைகளைச் செய்து காட்டி பாமரமக்களின் புத்தியைப் பேதலிக்கச் செய்து, மெய்யான ஆன்மீக நெறியையே சித்திரவதை செய்வோர் சிறக்கின்ற(?)காலம் இது. இந்தப் பொல்லாத பூவுலகில்—போதாத காலத்தில்—

பத்தரை மாற்றுப் பசும் பொன்னாக
பட்டை தீட்டப் பெற்ற வைரமாக
ஆசைகள் அண்டாத அனல் பிழம்பாக
பாசிகள் படராத பளிங்குச் சுனையாக

தமது புன்னகையாலேயே எண்ணற்றவரை ஆட்கொண்ட புனிதர் ஆவார் திரு. ஞானானந்தகிரி சுவாமிகள். அவ்வாறு ஆட்கொள்ளப்பட்டு, அவர்தம் கடைக்கண் பார்வையால் கடைத்தேற ஓடிவந்த கணக்கற்ற மனிதப்பிறவிகளில் அடியேனும் ஒருவன்.

ஒரு சில ஆண்டுகளே சுவாமிகளின் தண்ணார்ந்த கருணை நிழலில் இவ் வெளியவனால் ஒதுங்க முடிந்தது என்றாலும், ஒவ்வொரு சந்திப்பின்போதும் ஒரு புதிய மறுமலர்ச்சியை—பொலிவான மகிழ்ச்சி அருவியை, ஏன், கற்பனையாகச் சொல்லப்படும் சுவர்க்க சுகத்தையே இந்த ஏழை உள்ளம் சுவைத்துச் சுவைத்துத் திளைத்தது. எத்தனையோ தித்திப்பான அனுபவங்கள்-தெளிவான அறிவுக்கதிர் வீச்சுக்கள் திகட்டாத ஆன்மீக விளக்கங்கள்!

முத்தனைய அத்தனையையும் இந்தச் சிறு கட்டுரைப் பெட்டிக்குள்ளே முடக்கிவிட முடியுமா? முடியாதுதான்! ஆயினும் பக்திப் புனலாக மட்டுமன்றிப் பகுத்தறிவுக் கனலாகவும் கொழுந்துவிட்ட சுவாமிகளிடம் இந்த அடியவன் அடையக் கொடுத்துவைத்த ஓர் அறிவு விளக்கத்தை—அப்போது எனக்கிருந்த அறியாமை மனநிலையை—இங்கே எடுத்துக் காட்டுவது பொருத்தம் எனக் கருதுகிறேன்.

போலிச் சாமிகள் மீது கேலிப் போர்!

முதன் முதலில் அடியேன் சுவாமிகளைத் தரிசிக்க வந்தபொழுது இரயில்வே ஸ்டேஷன் மாஸ்டராக-நான் அறந்தாங்கி என்னும் ஊரிலே பணியாற்றிக்கொண்டிருந்தேன். அதாவது அறந்தாங்கி என்னும் மண்ணிலிருந்து 'அறம் தாங்கி' யான ஓர் ஆன்மீக மலைநோக்கி வந்தேன் என்றாலும் மிகையில்லை. அதுவரை என்னை ஒரு 'பக்தன்' என்று கூற முடியாது பக்தர்களை பழிக்கின்றவர்களின் பட்டியலிலேயே நான் இடம் பெற்றிருந்தேன்.

அவ்வாறு கேலி பண்ணுகிறவனாக நான் இருந்தமைக்கு, நான் சந்திக்க நேர்ந்த சில சாமிகளின் துறவிகளின் – போலித்தனமான நடவடிக்கைகளே காரணம் ஆகும். உண்மையான பரம்பொருள் பக்தியைப் பரப்பி மக்களிடையே விழிப்புணர்ச்சி ஊட்ட வேண்டிய பல சாமிகள் பழிப்புக்குரியவர்களாகப் பாதை மாறி நடப்பதை நான் பார்த்திருக்கிறேன்; பிழைப்புக்குரிய ஒரு கருவியாக அவர்கள் காவியுடை தரித்திருப்பதையும் நான் கண்டிருக்கிறேன்.

எனவே அந்தப் போலிச் சாமியார்கள் மீது எனக்கு அடங்காத ஆத்திரம்; அந்த ஆத்திரமே, ஆத்திகம் என்னும் சோலையினுள்ளே என்னை அண்டவிடாமல் நாத்திகம் என்னும் சாலையிலேயே என்னை நடைபோடத் தூண்டிற்று.

யாராவது காவியுடை தரித்து தானம், தருமம் என்று கையேந்தி வந்தால் போதும் அவர்கள் என்னுடைய கேள்விக் கணைகளிலிருந்து தப்பிக்கவே முடியாது. அதுவும் என்னுடைய முதல் வினாவிலேயே விழி பிதுங்கித்

திணறுவார்கள். 'தானமும் வேண்டாம்—ஒரு மண்ணாங்கட்டியும் வேண்டாம்' என்று நலை நெறிக்கவும் ஒடுவார்கள். அப்படி அவர்களை ஓட்டிவிடுவதில் எனது இளமைத் துடிப்பின் அறியாமைக்கும் ஓர் இன்பமயமான இறுமாப்பு.

எனது கேள்விகளின் கருப்பொருள் இதுதான்: 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' இந்தச் சொற்றொடருக்குரிய உண்மையான உட்பொருளை உணர்ந்து கொள்ளக் கூடிய உள்ளத் தெளிவு எனக்கு அப்போது இல்லை. அப்படி உணர்த்தக் கூடியவர்களையும் நான் காணவில்லை. சுவாமிகளைத் தரிசிக்கும் வரை ஏன், அவர்களையே நேரில் கேட்கும் வரைகூட இவ்வாறாக, சுவாமிகளின் பரந்த நோக்கு பகுத்தறிவுச் சிந்தனை, கருணைச் செயல்கள், கலகலப்பான நகைச்சுவை—அடியேனை வெகுவாகக் கவர்ந்தன.

### விளக்கம் தேடி ஒரு மனப் பறவை!

நாளுக்கு நாள், சுவாமிகளை அடிக்கடி காணவேண்டும் என்னும் அடங்காதவேட்கை என் மனம் என்னும் கேணியில் ஊற்றாகப் பீறிடத் தொடங்கியது. பொறுப்பான மத்திய அரசுப் பணியிலே புதையுண்டு கிடக்க நேர்ந்தாலும், ஒய்வு கிடைக்கும் பொழுதெல்லாம் ஞானானந்தகிரி சுவாமி என்னும் கனிமரம் நோக்கிச் சிறகடித்துப் பறந்து செல்லவே என் சிறிய மனப்பறவை துடிதுடிக்கும்.

அவ்வாறு, சுவாமிகள் தரிசனத்துக்காக ஓடிவரும் பொழுதும், நான் முன்னர் குறிப்பிட்டேனே, அந்த 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்னும் சொற்றொடர் என் உள்ளத்தை விட்டு ஓடவில்லை; குருத்துள் விழுந்த வண்டாக என் நெஞ்சக் குருத்தைக் குடைந்து கொண்டே இருந்தது.

அதற்குச் சரியான விளக்கம் கிடைக்கவில்லையே! அதனைச் சுவாமிகளிடத்தில் கேட்டுத் தெரிந்து கொண்டால் என்ன? என்கிற ஏக்கமும் என்னுள் எழுந்தது.

முன்பு, நான் மற்றச் சாமியார்களிடம் அந்தச் சொற்றொடருக்கு விளக்கம் கேட்ட பொழுது என்னிடம் ஆன்மீக நெறிக்கு வேண்டிய மரியாதையோ, அற உணர்வோ இல்லை. அகங்காரமோ 'ஓலத்தியாக' ஓங்கிக்கொழுந்து விட்டது.

இப்போது, சுவாமிகளிடமே அந்தச்சொற்றொடருக்கு விளக்கம்பெற எண்ணிய பொழுது என்னிடம் ஒருவித பணிவும் கனிவும் பாடத் தொடங்கி இருந்தன. நாத்தழும்பேறி, நாத்திகம் பேசிய நிலையைக்கடந்து, ஆத்திக நெறியிலேயும் நாம் அடிமுட்டாள்களாக இருக்கக் கூடாது என்கின்ற தெளிவைத் தேடும் பேராவல் எழுந்திருந்தது.

அந்த அடக்கமான—ஆன்மீக நெறிக்குட்பட்ட ஆவலின் அடிப்படையிலேயே சுவாமிகளிடம் விளக்கம் பெற எண்ணினேன். என்றாலும் பலர் முன்னிலையில் என் ஐயப்பாட்டை வெளிப்படுத்தும் துணிவு எனக்கு எளிதில் வரவில்லை பல நாட்கள் முயன்றும் வரவில்லை. எப்போதாவது சுவாமிகளைத்தனியாகச்சந்திக்கும் வாய்ப்புக் கிட்டாதா என்று அடியேன் ஏங்கிக் கொண்டிருந்தேன்; அறந்தாங்கியை விட்டு மங்கநல்லூர் என்னும் ஊருக்கு மாற்றலாகி வந்து பல நாட்கள் வரை அந்த வாய்ப்பு எனக்குக் கிட்டவே இல்லை.

இங்கு வந்த பிறகு, ஒரே தாயின் வயிற்றில் கூடப்பிறக்காத குறை என்று சொல்லும் படியாக—எனக்கு உடன் பிறப்பாக அரவணைப்பை அளித்து வருபவர் பெருமைக்குரிய திரு. சிவவடிவேல் உடையார் அவர்கள். 'மங்கை நல்லூர் உடையார்' என்றாலே அவரைத்தான் குறிக்கும். அவரைப்போன்ற என்மீது அன்பு மழை பொழிந்து நின்ற இன்னொர் உடன் பிறப்பு திரு. கோ. திருவேங்கடம் அவர்கள். அவரும் என்னைப்போலவே 'இரயில்வே' த் துறையில் பணியாற்றியவர். அவர் இன்று நம்மிடையே இல்லை வெள்ளை உள்ளம் படைத்த அந்தப் புன்னகை உருவம் சுவாமிகளுக்கு முன்பே மறைந்துவிட்டது.

நாங்கள் மூவரும் ஒன்றாகவே சுவாமிகளைத் தரிசிக்க வருவது என்பது நாளாவட்டத்தில் ஒரு முறையான வழக்கமாகிவிட்டது. சுவாமிகளே எங்களை 'மூவர்' என்று ஒருசேர் அழைக்கும் அளவுக்கு எங்களது அன்புப் பிணைப்பிலே நெருக்கம் நிரந்தரமாகிவிட்டது. என்றாலும் மிகையில்லை.

### துணிவுடன் அணுகினேன்

ஒரு வியாழக்கிழமை. குருவாரத்தில் ஞானிகளைத் தரிசிப்பதில் தனிச்சிறப்பு உண்டு என்கிற அடிப்படையில் அன்று நாங்கள் மூவரும் தபோவனம் நோக்கி வந்தோம்.

பிற்பகல் மூன்று மணி இருக்கலாம். சோதனை மேகங்கள் சூழும் மனித மனம் போலவே வானமும் முகில் திட்டுக்கள்மலிந்து மந்தாரமாக இருந்தது. சுவாமிகள் அப்போது அங்கே புதிதாக எழும்பிக் கொண்டிருந்த ஒரு கட்டிட வேலையைக் கவனிப்பதற்காகச் சாலையிலேயே நின்றுகொண்டிருந்தார்கள். அவருக்கு அருகே சற்று அப்பால் தள்ளி பணியாட்கள் தாம் இருந்தார்கள்; பக்தகோடிகள் இல்லை. அவரது அந்தத் தனிமையான நிலை இந்த எளியவனுக்கு ஒரு புதிய துணிவைக் கொடுத்தது. 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதற்கு விளக்கம் கேட்பதற்கு அதுவே சரியான வேளை என்று என்மனதிற்குட்பட்டது. உடன் வந்த கூடப்பிறக்காத உடன் பிறப்புக்களாம் திரு. உடையார் அவர்களிடமும் திருவேங்கடம் அவர்களிடமும் என் எண்ணத்தைக் கூறினேன். அதற்கு அவர்கள் 'இதைப்போய் சுவாமியிடம் கேட்டால் சரியானபடி மூக்கு அறுபட்டுத்தான் வரப் போகிறீர்கள்'' என்று வேடிக்கையாகச் சிரித்துக்கொண்டு பின்தங்கிவிட்டார்கள். அவர்களிருவரும் சற்றுத் தொலைவிலேயே நிற்க நான் மட்டும் கட்டிடத்தை ஒட்டி நிற்கும் குருநாதரிடம் தனியாகச் சென்றேன்.

அருகே செல்லச் செல்லவோ ஐயப்பாட்டை வெளிப்படுத்திக் கொள்ளும் துணிவு ஆட்டங் காணும்போல் தோன்றியது; எனினும்என்னை நானே தேற்றிக்கொண்டே நெருங்கினேன்.

## அறிவார்ந்த அருள் விளக்கம்

குருநாதரின் அருள் ஒழுகும் பார்வை வழக்கமான முறையிலேயே இந்த எளியவனை வரவேற்றது. சில நொடிகள் ஆழ்ந்த அமைதி. எப்படித் தொடங்குவது என்கிற புரியாத் திகைப்பு நிலை எனக்கு. சுவாமிகளோ கட்டிட வேலைகளைப் பற்றித் தாமாகச் சில செய்திகளைச் சொல்லுகிறார்கள். சிறிது நேரத்தில் எனக்குத் துணிச்சல் வந்து விடுகிறது. மெல்லத் தொண்டையைச் சரி செய்து கொண்டு ....''நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம் என்னைக் குழப்பிக்கொண்டிருக்கிறது சுவாமி! அதை குருநாதர் தாம் நிவர்த்தி பண்ணித் தரவேணும்'' என்று அச்சத்தோடு அசடு வழிந்துகொண்டே சொன்னேன்.

குருநாதர் புன்னகை பூக்கிறார் – அவரே தொடர்கிறார்: சந்தேகமா.... நமக்கா? வரக் கூடாதே! ஏற்பட்டவரைக்கும் அது வெளியே வந்து விடட்டுமே!

அடியேன்: ''அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது'' என்று பெரியவர்கள் எல்லாம் சொல்லுகிறார்களே சுவாமி! அதைப் பற்றித் தான்.......

குருநாதர்: ஆம்! தாயுமானவர் சொன்னதைத்தான் எல்லாரும் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். அதிலே நமக்கென்ன சந்தேகமும் குழப்பமும் வந்து விட்டது?

அடியேன்: இந்த உலகத்தில் நடக்கும் அனைத்துமே ஆண்டவனால்தான் இயக்கப்படுகிறது என்று தானே சுவாமி அதற்குப் பொருள்?

குருநாதர்: நிச்சயமாக சந்தேகத்துக்கு இடமே இல்லை.

அடியேன்: அப்படியானால் நான்செய்யும் அனைத்துமே ஆண்டவனால் தூண்டப்பட்டவை என்றுதானே சுவாமி நான் கொள்ள வேண்டும்?

குருநாதர்: ஆமாம்!

அடியேன்: மன்னிக்கவேண்டும் சுவாமி! இங்கேதான் எனக்குக் குழப்பமே ஏற்படுகிறது. எல்லாமே அவனால்தான் என்று கருதும் போது நான் செய்த பாவச் செயல்களும் அவனால்தானே சுவாமி தூண்டப்பட்டிருக்க வேண்டும்?

குருநாதர்: (ஒரு வெடிச் சிரிப்பை வெடித்துவிட்டு) நல்ல கேள்வி–நன்றாகவேதெரிந்து கொள்ளவேண்டிய கேள்விதான். அதிருக்கட்டும் 'பாவச்செயல்' என்றால் என்ன? சுவாமிக்குப் புரியவே இல்லையே?

அடியேன்: ஒருவன், தன்னுடைய தேவைக்காகவும், மகிழ்ச்சிக்காகவும், பிறருடைய உடலுக்கும் உள்ளத்திற்கும் துன்பத்தை உண்டாக்குவது போன்ற செயல்களைச் செய்வது சுவாமி!

குருநாதர்: அப்படிப்பட்ட பாவச்செயலை நாம் என்ன செய்துவிட்டோம், அதற்காக நாம் இப்பொழுது குழம்பித் தவிக்க!

(இப்படிக் கேட்டுவிட்டு அடியேனைக் கூர்ந்து நோக்குகிறார். அந்தப் பார்வையின் தீட்சண்யத்தில் உண்மைகளை ஒளிக்காமல் ஒப்புக்

கொண்டு விடவேண்டும் என்கிற அற உணர் வின் ஆவேசம் என்னுள்ளே பீரிடுகிறது.)

அடியேன்: ஒன்று இரண்டல்ல சுவாமி! கொலை, களவு நீங்கலாக பஞ்சமா பாதகத் தின் பெரும் பகுதி வாலிபத்தில் என்னோடு நெருங்கியதொடர்புகொண்டிருந்ததுசுவாமி!

குருநாதர்: உதாரணமாக ஏதேனும்...?

அடியேன்: பசிக்கு உணவு தேடி வந்த ஒரு பரதேசியை வீண் வம்புக்கு இழுத்து, என் கையிலிருந்த கொம்பு முறிய அவருடைய ஒரு கால் எலும்பை நொருக்கி இருக்கிறேன். கல்லூரியில் படித்து வந்த ஒரு கன்னிப் பெண் ணிடம் தரக்குறைவாக நடந்து கொண்டதன் விளைவாக அவள் தன்னுடைய கல்லூரிப் படிப்பையே முறித்துக் கொள்ள நேரிட்டது. இன்னும்.......

குருநாதர்: பரதேசியின் காலை ஒடித்த தும், கன்னிப் பெண்ணின் கல்வியை முறித்த தும் எப்படிப் பாவச் செயலாகும்? யார் சொன்னது? சுத்தப் பைத்தியக்காரத்தனம். இப்படிப்பட்ட புண்ணியத்தைச் செய்ய யாருக்கு வாய்ப்புக் கிடைக்கும்?--குழப்பம் வேண்டாம்-சுவாமி சொல்கிறேன் — செய்த செயல்கள் எல்லாமே புண்ணியமே—அமைதி கொள்ளுவோம். (சிரிக்கிறார்)

(இதைக் கேட்டதும் எனக்கு ஒரே திகைப்பு— இருந்தாலும் ஒருவாறு அதை சமாளித்துக் கொண்டு)

அடியேன்: எப்படி சுவாமி அவை புண் ணியமாகக்கூடும்? நிச்சயமாக பாவங்களே தான் சுவாமி!

குருநாதர்: சும்மா சொல்லிவிட்டால் மட்டும் போதுமா? ஆதாரம்?

அடியேன்: பழம்பெரும் நூல்களும் புரா ணங்களும் அப்படித்தானே சுவாமி திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கின்றன!

குருநாதர்: புராணமா? அது கிடக்குது குப்பை—அதிலேதான் நமக்கு நம்பிக்கையே இல்லையே—அது நமக்குப் பயன்படாது. வேறு?

அடியேன்: மன்னிக்க வேண்டும் சுவாமி! சத்தியமாக அவையெல்லாம் பாவந்தான். என் மனச்சாட்சியே அதைச் சொல்லுதே சுவாமி!

குருநாதர்: அப்படி வருவோம் வழிக்கு! மனச்சாட்சியே சொல்லுதோ? அதைக் கெட்டி. அதன் உட்பொருளை அறிந்தவர்களை நான் சந்திக்கவே இல்லை.

எனவே, பக்தியைப் பழிக்க-பக்தர்களைக் கிண்டல் செய்ய—பரம் பொருளை ஏளனம் புரிய ஒரு வகையான கருவியாகவே இந்தச் சொற்றொடரைப் பயன் படுத்தினேன்.

யாராவது காவி வேட்டியோடு என் எதிரே வந்தாலும்சரி, காவியணியாமல் பக் திக்கோலத்தில் என்னிடம் தெய்வங்களின் திருவிளையாடல்களை அளக்க வந்தாலும் சரி, நான் இப்படிக் குதர்க்கமாக அவர்களை மடக் குவதற்கு முயல்வேன்.

''ஆமாம்! 'அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது' என்கிறீர்களே ஐயா! அதற்குச் சரியான பொருள் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை, கொஞ்சம் விளக்கம் தரமுடி யுமா?'' என்று கேட்பேன்.

''புரியாமல் போவதற்கு இதில் என்ன இருக்கிறது? ஆண்டவன் இல்லாமல் இந்த உலகத்தில் எதுதான் அசையும்? அவனுக்குத் தெரியாமல் நாம் எதையுமே செய்ய முடி யாது-அவர்தான் நாம் செய்யும் அனைத்துக் குமே காரணகர்த்தா?'' என்றெல்லாம் அடுக் கிக்கொண்டே போவார்கள், பக்த சிகாமணி கள். ஆனால் நான் அவர்களை அதோடு விடுவ தில்லை.

''அப்படியானால், நாம் செய்யும் அயோக் கியத்தனத்துக்கும் அவன்தான் காரணம் என்று சொல்லுங்கள்'' என்பேன். இதைக் கேட்டதும் அவர்களின் முகத்தைப் பார்க்க வேண்டுமே! முகம் சிவக்கும்-பேச்சு படப டக்கும்.

''நான் நல்லது செய்யும் பொழுது மட் டும் அதற்கான பெருமை முழுதும் ஆண்டவ னையே சேரும்போது-நான் பொல்லாங்கு புரி யும் பொழுதும் அதற்குரிய சிறுமை முழுவதும் அதே ஆண்டவனைத்தானே சேரவேண்டும்?'' என்று அழுத்தம் திருத்தமாக வாதங்களை அடுக்கும் போது அவர்களால் அதை எப்படி மறுக்க முடியும்? திணறிப்போய் அமைதியில்

ஆழ்ந்து விடுவார்கள். அல்லது, அசடுவழியும் முகத்தோடு எழுந்துவிடுவார்கள். அந்த நிலையில் அவர்களைக் காணும்போது எனக்கு ஓர் அலட்சியச் சிரிப்பே உண்டாகும். அவர்களை மடக்கிவிட்டோம் என்கிற ஆணவக் கொழுப்பு என்மண்டை எங்கும் அடைத்துக் கொண்டு கனக்கும், இனிக்கும்! அந்த அகங்கார மகிழ்ச்சியிலேயே எத்தனையோ நல்ல துறவிகளை மட்டுமின்றி இல்லற பக்தர்களையும் வாயடைக்கச் செய்துவிட்டு, வாய் விட்டுச் சிரித்திருக்கிறேன். அந்தக் குதர்க்கமான களிப்பு அருள்மிகு ஞானானந்தகிரி சுவாமிகளிடம் வரும் வரையில் தலை கால் புரியாமல் தான் தலை விரித்தாடியது.

## ஞானப் பெருங்கடல்

சுவாமிகளின் தரிசனங்கள் கிட்டிய பிறகு எனது ஆணவக் கொழுப்பு படிப்படியாகக் கரைந்துருகத் தொடங்கியது. பக்தியென்னும் வெள்ளம் மனித மனம் என்னும் வயலில் பாய்வதற்கு அவ்வப்போது எத்தனையோ கால்வாய்களை நம் முன்னோர்கள் வெட்டியிருக்கின்றனர். எனினும் மூட நம்பிக்கைகள் — அர்த்தமற்ற சடங்குகள் முதலான கழிவு நீர் வந்து கலப்பதற்கும் இடம் கொடுத்ததால் அறிவின் அரவணைப்போடு இந்து சமயம் தழைக்கவில்லை என்று சிலர் குறைப்பட்டுக் கொள்ளுவதுண்டு.

அருள்மிகு ஞானானந்தகிரி சுவாமிகள் என்னும் நம் குருநாதரோ உணர்ச்சிக்கு மட்டுமே மதிப்பளித்து ஆன்மீக நெறியை உணர்த்த வந்தவர் அல்ல ; பக்திக் கோலத்திலும் பகுத்தறிவுக் கருத்துக்களைப் பரப்பிய பகலவன் ஆவார் அவர். அறிவுக்கு ஒவ்வாத புறக் கோலங்களையும் புறச் செயல்களையும் புறக்கணித்து, அகத்தூய்மைக்கே ஆக்கம் அளித்தவர். அவரது திருக்கோலம் சிவப்பழம் போல் காட்சி தரும். ஆனால் அவர் தம் இதயப் பூங்காவிலோ எத்தகைய சமயப் பாகுபாடும் புதிராக மண்டியதில்லை. அவர்தம் திருமுன்னர் எல்லாச் சமயத்தவரும் தங்கள் சுமைகளை இறக்கி வைக்கவே வந்தனர். இளைப் பாறியும் சென்றிருக்கின்றனர்.

சுவாமிகளின் பிறந்த நாள் எது, மதம் எது, இனம் எது மொழி எது, என்பது பற்றி இன்றுவரை யாருக்குமே தெரியாது. அதை சுவாமிகளின் திருவாயாலேயே சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆசையில் ஆன்றோரும், சான்றோரும், அணுகிப் பழகும் வாய்ப்பைப் பெற்றோரும் எவ்வளவோ முயன்றும் பலனளிக்கவில்லை. ஆகவே, அவரவர்களின் விருப்பத்திற்கேற்ப, வயது, மதம் இனம் மொழி இவைகளுக்கு அவரைச் சொந்தக்காரராக்கிவைத்து மகிழ்ச்சியடைவதைக் காண்கின்றோம்.

வடக்கே ஒரு இராமகிருட்டின பரமஹம்ஸர் என்றால் தெற்கே ஓர் இராமலிங்க அடிகள் என்பார்கள். அவர் வடலூரில் பசிப்பிணி நீக்குவதற்காக தருமசாலை நிறுவியவர். அவ்வாறே தமது தபோவனம் திருமடத்தைத் தருமச்சாலையாகவே ஆக்கி, வருகின்றவர்களுக்கெல்லாம் அன்னம் வழங்கிய "ஆபுத்திர பாத்திரம்" அருள்மிகு ஞானானந்தகிரி சுவாமிகள். பணக்காரர் ஏழை என்கிற பாகுபாடு இல்லாமல் எல்லா நஞ்செய்க்கும் புஞ்செய்க்கும் ஒரு சேர அருள் செய்த கருணை மழையே அவர்.

'கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக' – நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவாக' - வள்ளலார் இராமலிங்க அடிகள் விழைந்த உண்மையான 'சன்மார்க்கா' ஆக உயர்ந்து நின்றவர் அவர்.

அந்த ஞானப் பெருங்கடலின் ஓரத்தில் நகைச்சுவை அலைகளும் சிரிப்பைச் சிந்துவது உண்டு, உறுதியாய்ப் பிடித்துக்கொள்ளுவோம். அதுதான் அந்த அவன். அந்த அவனுக்குத் தெரியாமல் நாம் எதையுமே செய்ய முடியாது நாம் எதைச்செய்யத் தொடங்கினாலும் அந்த அவன்' என்னும் மனச்சாட்சி 'இது நல்லது' 'அது கெட்டது' என்று தன்னுடைய மெல்லிய குரலில் சுட்டிக் காட்டத் தவறுவதில்லை. 'நல்லது என்று சொல்லும் போது அதைச்செய்வோம். 'தீயது' என்று உணர்த்தும்போது அதை விட்டுவிடுவோம். 'அவன்' என்னும் ஆண்டவன் இரண்டையுமே நம் முன் எடுத்து வைக்கிறான். அதைப்பகுத்தறிவால் பாகுபாடு செய்து பயன்பெற வேண்டியது நாம். எனவே 'அவன்' என்றவுடனே, எங்கோ ஒருவன் நான்கு கரங்களுடன் நடுக்கடலிலோ, அல்லது நச்சுக் கழுத்துடனோ இருக்கிறான் என்று கற்பனை செய்து கொண்டு தேடியலைய வேண்டாம். 'அவன்' நம்முள்ளேயே எப்பொழுதும் வீற்றிருக்கிறான் என்பதை உணர்ந்து நடப்பதே சிறப்பு.

(குருநாதரின் இந்த விளக்கம் என் கண்களைத் திறக்கின்றன—உடம்பெல்லாம் புல்லரிக்கிறது. உள்ளத்தினுள்ளே திரைகளையெல்லாம் விலக்கிவிட்டு ஒரு ஞானச்சுடரைக் காணுகின்ற உவகைத்தெளிவு உண்டாகிறது.)

கற்பூரச் சுடர்

'அவன்' என்றால் ஆண்டவன் என்றும், அந்த ஆண்டவன்தான் சிவன், திருமால், முருகன், மாரி, காளி என்று நாம் வணங்குவதாக மற்றவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நம் குருநாதரோ, அந்த 'அவன்'என்னும் ஆண்டவன் உனது'மனம்' என்னும் கோவிலிலே மனச்சாட்சியாகக் கொலுவிருக்கிறான். என்று வினயமாக உணர்த்திவிட்டார்கள். அந்தப் பரம்பொருளின் பேராற்றலை வேறெங்கும் தேடி அலையவேண்டாம் என்றும் கூறாமல் கூறிவிட்டார்கள்.

இத்தனை காலமும் எத்தனையோ விளக்கத்திற்காக அடியேன் ஏங்கிக்கிடந்தேனே—இறு மாப்பாடு நடந்தேனே—அந்த விளக்கம், சுவாமிகளின் வாயிலாக, மிகத் தெளிவாகவே இந்த எளியவனுக்குக் கிடைத்துவிட்டது. என் இறு மாப்பும் அழிந்துவிட்டது.

தூசு தும்படைகளையெல்லாம் துடைத்து எறிந்துவிட்டு வீடு முழுக்கக் கழுவிவிட்டது போலவே, மாசுகள் மலிந்துகிடந்த என் மன வீட்டையும் சுவாமிகளின் புன்னகை கொஞ்சும் அருட் பார்வை துப்பரவு செய்கின்ற உணர்வினை நான் பெற்றேன்.

பரமஹம்ஸ சற்குரு ஸ்ரீ ஞானானந்தகிரி சுவாமிகள் ஒரு ஞானப்புதையல். அதில் ஒரு சிறு தூளையே இங்கே சுட்டிக்காண்பித்திருக்கிறேன். சுவாமிகள் துல்லியமாக தூய வெளிச்சம் பொழியும் ஒரு கற்பூரச்சுடர். அது என்றென்றும் மனிதப்பிறவிக்கு ஒளியூட்டுவதாகுக! வழி காட்டுவதாகுக! ''வாழ்க ஞானானந்தம்!''

பசுவின் காம்பிலிருந்துதான் பால் கிடைக்கும். அதன் காலிலிருந்து பால் பெற முடியாது. ஒரு இடத்தில் கிணறு தோண்டி அங்கிருந்துதான் தண்ணீர் எடுக்க முடியும். கிணறு இல்லாத இடத்தில் தண்ணீர் கிடைக்காது அது போலவே ஈசுவரனை ஒரு முறையில்தான் அடையமுடியும். சத்குரு மூர்த்தியின் 'பாதுகையிலிருந்து தான் அந்த ஓங்கார வடிவை அடையலாம். நீ நேரிடையாக அடைய முடியாது. பாதசேவைதான் முக்கியம். ராமர்தான் முடிசூடிய கிரீடத்தை பரதனுக்குக் கொடுக்கவில்லை. தன்னைவிட தன் பாதுகைதான் முக்கியம் என்று பாதுகைகளைக் கொடுத்தார். நடராஜரும் ''என்னை அடைய வேண்டாமா? என்னிடம் என்ன இருக்கிறது? என் பாதத்தைத் தான் அடையவேண்டும்'' என்று ஒரு காலைத் தூக்கி கையினால் அதை இப்படிக் காட்டுகிறார்.

அதனால்தான் நடராஜர் நடன முத்திரையில் இருக்கிறார். சாதாரணமாக எல்லா தேவதைகளின் மூர்த்திகளும் ''பாதம் இதோ இருக்கிறது'' என்று இடது கரத்தினாலும், அதைச் சரணமடைந்தவர்களுக்கு ''அபயம் அளிக்கிறேன்'' என்று வலது கரத்தினால் அபய முத்திரையும் காட்டுகின்றன.''

— ஞான இன்ப வெளி

# அன்னை பராசக்தியே அருட் குருவாய் அமர்ந்துள்ளார்

குரோம்பேட்டை-வெங்கட்ராம சாஸ்திரிகள்

**1974** டிசம்பரில் தபோவனத்திலிருந்து சிவராம கிருஷ்ணய்யரும் திரு. கிருஷ்ண மூர்த்தி (பங்களூர்) அவர்களும் வந்தார்கள். ''ஸ்வாமிகளின் முதல் வருஷ ஆராதனை வரப்போகிறது, அதற்கு அங்கமாக சதசண்டி மஹாயாகம் நடத்த விரும்புகிறோம். அதற்கு நீங்கள்தான் பொறுப்பேற்று நடத்தி தர வேண்டும் என்றார்கள்.

முதலில் எனக்கு இஷ்டமில்லை, மறுபடி அவர்கள் கேட்டதின்பேரில் ஏற்பாடு செய்வதாக ஒப்புக்கொண்டு அதற்குத் தேவையான சாமான்களின் பட்டியலைக் கொடுத்தனுப்பினேன். எனக்கு அதில் கலந்து கொள்ள விருப்பமில்லாததால் மற்றைய உபாஸகர்களையும், தலைமை ஆசாரியரையும் சொல்லி ஏற்பாடு செய்துவிட்டேன்.

நான் இருப்பது குரோம்பேட்டை. அன்று இரவு கனவில் கும்பகோணம் மங்களாம்பிகா சன்னிதியில் நின்று கொண்டிருக்கின்றேன். அர்ச்சகர் தீபாராதனை செய்து பிரஸாதம் தந்து ''உங்களை தேவி தபோவனம் போகச் சொல்லுகிறாள்'' என்று கூறுகிறார். நான் சிரித்துக்கொண்டே ''எனக்கு அங்கு என்ன வேலை? அம்பாளை விட்டு நான் எப்படிப் போக முடியும்?'' என்றேன்.

எனக்குப் பின்னால், அதட்டும் குரலில் திடீரென' ''போடா என்றால் போகவேண்டியது தானே, போ, நான் தான் அங்கேயும் இருக்கிறேன்'' என்று சத்தம் வந்தது. நான் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். 45–50 வயதுள்ள ஓர் சுமங்கலி நின்றிருந்தாள். அவருக்கு உடம்பு நடுங்குகிறது. மூச்சு வாங்குகிறது. குருக்கள் உள்ளேபோய் தீபாராதனை செய்து பிரசாதம் தந்தார். பிறகு அந்த அம்மாள் நடுக்கம் நீங்கி சாந்தமானாள்.

அந்த அம்மாளைப் பற்றி குருக்களிடம் விசாரித்தேன். ''எனக்குத் தெரியவில்லை. வெளியூரிலிருந்து வந்திருக்கலாம்'' என்றார். 'அம்மா உன் உத்தரவு' என்று திரும்பிவிட்டேன். குறிப்பிட்ட தினத்திற்கு முன்பே நானும் மற்றைய உபாஸகர்களும் மாலை 5 மணி சுமாருக்கு தபோவனம் அடைந்தோம். ஸ்ரீமத் பாகவத ப்ரவசனம் நடந்து கொண்டிருந்தது. சொல்ல முடியாத ஓர் தெய்விக சூழ்நிலை இருப்பதை உணர்ந்தேன்.

ஸ்வாமிகளின் அதிஷ்டானத்துக்கு அருகிலேயே சண்டி பூஜைக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்திருந்தார்கள். முக்கிய பூஜைக்கு வேறு ஒருவரை ஏற்பாடு செய்து விட்டதால் நான் அடிக்கடி அதிஷ்டானத்திற்கு முன்பு வந்து நின்று கொண்டிருப்பேன். அப்போது என்மனம் என் வசத்தில் இராது. ஒருவகை சித்ஸ்புரணம் (தெய்வீக உள்ளுணர்வு) ஏற்படும். ஏதோ ஒருவித சக்தி என்னை ஆட்கொள்வதுபோல் தோன்றியது. தன் நிலைமை மறந்து நிற்பேன். மற்றவர்கள் தொட்டு கூப்பிட்ட பிறகுதான் சுய உணர்வு பெற்று அவர்களுடன் பாராயணத்தில் கலந்துகொள்வேன். தன்னை மறந்து இன்புற்று இருக்கும் நிலை அதிஷ்டான மகிமையில் எனக்கு கிடைத்தது.

ஸ்ரீ ஞானானந்த ஸ்வாமிகளை நான் பார்த்தது கிடையாது. அதிஷ்டானத்தின் தரிசனத்தினாலேயே எனக்கு இந்த பாக்கியம் கிடைத்தது என்றால் அவர்களை நேரில் கண்டு பேசி அவர்களுடன் இருந்து வாழ்ந்தவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகளாக இருப்பார்கள். தங்கத்தைக் காட்டிலும் தங்க பஸ்பத்தின் மதிப்பு அதிகம் என்பார்கள். அதுபோல் அதிஷ்டானத்தில் மறைந்திருக்கும் ஞானானந்தரின் அருட்பெரும் கருணைவடிவான சைதன்ய சக்தியானது ஒரே இடத்தில் இல்லாமல் எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கிறதும், உண்மையான பக்திசிரத்தை நம்பிக்கையுடன் அவரை சரண் அடைந்தால் தன்னை மறந்து இன்புற்று இருக்கும் நிலையை அடையலாம்.

With best compliments from

★

●

★

# ESWARI JEWELLERS

No. 168, Sea Street,
COLOMBO-11.

Telephone: 28271

With best compliments from

# Manick Automobiles

*Dealers in Genuine Spares and*
*Pistons For Popular Model Vehicles.*

**25, Jayantha Weerasekera Mawatha,**
**COLOMBO-10.**

Telephone: 26313

With best compliments from




JAYA LALITHA

Jawellery Mart

65, Sea Street.
COLOMBO-11.

**With best compliments from**



# MANIAM STORES

75 & 77, Prince Street,

**COLOMBO -II**

**Telephone: 25493**

With best compliments from

STANDARD AUTOMOBILES

331, Sri Sangaraja Mawatha,

Colombo-11

Telephone: 35920

With best compliments from

A WELL WISHER

**With best compliments from**



# YOGA TRADING COMPANY


**68 A, Fourth Cross Street,**

**COLOMBO-11**

Dealers in Local Produce.

**Telephone: 26065**

With best compliments from



AMBIGA JEWELLERS
Quality Jewellers.
No. 77, Sea Street,
COLOMBO-11.

Telephone: 22839

ஸ்வாமிகள் வெகுநாட்களுக்கு முன்பே இவ்விடத்தில் சண்டி ஹோமம் செய்ய வேண்டும் என்று விருப்பமுள்ளவராய் ஹோமத்திற்கு வேண்டிய பெரிய யக்ஞகுண்டமும் அதற்கு தென்புறம் துர்க்காதேவியையும்வடபுறம் வடுகு பைரவரையும் பிரதிஷ்டை செய்து வைத்துள்ளார்கள். யக்ஞகுண்டத்தை மட்டும் மணலினால் மூடி இருந்தார்கள். ஸ்வாமிகள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் ஏதேனும் உட்பொருள் இருக்கவேண்டும் என அவருக்குப் பிறகு தான் தெரிந்து கொள்ள முடிகிறது. சண்டியின் 700 மந்திரங்களினால் ஹோமம் செய்து முடிந்த உடன் பூர்ணாஹுதி நடைபெற்றது. அப்பொழுது உபனிஷத்முறைப்படி அக்கினியைதேவியாக பாவித்து உபசாரங்கள் செய்யும் போது சிதக்னி ஸ்வரூப பரமானந்த சக்தி ஸ்புரணம் வஸ்திரம் (மூலக்கனல் வடிவான பரமானந்த உணர்ச்சியே வஸ்தரம்) என்று கூறி புடவையை அக்னிவடிவமான தேவியிடம் அர்ப்பணம் செய்தோம். அப்போது தேஜோமயமான தேவியானவள் தனது ஜ்வாலையாகிற கைகளை நீட்டி புடவையை பெற்றுக்கொண்ட காக்ஷி இப்பொழுது நினைத்தாலும் பரமானந்த உணர்ச்சி ஏற்படுகிறது.

நான் முதலில் மணிமண்டபத்தில் தேவியைக் கண்டேன். நன்கு அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. முதலில் அது தேவியின் பிம்பம் என்றே கருதியிருந்தேன். மறுநாள் தான் அது நம் ஸ்வாமிகளின் பிம்பம் என அறிந்தேன். இதைப் பற்றி விசாரித்ததில் ஸ்வாமிகள் ''யார் யாருக்கு எது தேவையோ அவைகளை இங்கேயே கேட்டு அடையலாம்'' என்று கூறினாராம். கீதையில் பகவான் 'யார் யார் எந்தெந்த உருவில் வழிபட்டாலும் அவர் அவருக்கு அந்தந்த உருவா இருந்து அருள் பாலிப்பேன்'' என்று கூறினார். ஆனால், நம் ஸ்வாமிகள் என்றும் எங்கும் இல்லாத வகையில் தமது சிலையை தாமே பிரதிஷ்டை செய்து அதன் பின்னால் வெகுநேரம் அமர்ந்திருந்து ''நானே இதில் இருப்பேன்! என்னை எந்தெந்த உருவில் வழிபட்டாலும் அந்தந்த உருவாக இருந்து அருள் செய்வேன்'' என்று கூறினாராம். அதன் பலனாக இன்றும் மணிமண்டபத்தில் பல வகையான உருவங்களில் ஸ்வாமிகளை அலங்காரம் செய்து வழிபட்டு அருள்பெறுகிறார்கள். நம் ஸ்வாமிகள் கீதையில் கண்ணன் கூறியதை செயலில் காட்டுகிறார்.

1978. ''இவ்வருஷம் சிவராத்திரியன்று விதிப்படி சங்காபிஷேகம் நடக்கப் போகிறது. நீங்கள் அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டும்'' என்று நித்யானந்தகிரி ஸ்வாமிகள் கடிதம் எழுதி இருந்தார். நான் ஏதோ தெய்வீக உணர்ச்சியால் உந்தப்பட்டு சிவராத்திரிக்கு முன் தினமே வந்து சேர்ந்தேன். சிவராத்திரி அன்று காலையில் க்ஷீராபிஷேகம் நடந்தது. பகல் 2 மணிக்கு சங்க ஸ்தாபனம் தொடங்கி இரவு 8-30 வரை பூஜைகள் நடந்தன. அபிஷேகம் வெகு விமரிசையாக நடந்தன. இரவு வெகு நேரம் ஆகிவிட்டது. அதிகமான களைப்பினால் தனிமையில் சென்று உட்கார்ந்து விட்டேன். அப்பொழுதுநான் எனது தீக்ஷாதினம் ஞாபகம் வந்தது.

எனக்கு தீக்ஷை சிவராத்திரியன்று தான் நடைபெற்றது. அது முதல் தீக்ஷா தினத்தில் தேவியை ஆராதிப்பது வழக்கம். சங்காபிஷேகதர்சன மகிழ்ச்சியில் பூஜையை கூட எடுத்துவர மறந்துவிட்டேன். உடனே அசதி, மனதில் வருத்தம், ஏக்கம் இவைகளால் ஒன்றும் தோன்றாதவனாய், ''ஞானானந்தா என், கடமையைச் செய்ய மறந்து விட்டேனே!'' என்று ஏக்கத்தில் படுத்து விட்டேன். (கனவில்) நான் அலங்கரித்த மண்டபத்தில் அமர்ந்து தேவியை பூஜித்து கொண்டிருக்கிறேன். என்றுமில்லாத மனநிறைவு. பூஜை முடித்து கற்பூர ஆரத்தி எடுக்கும் போது தேவியைப் பார்க்கிறேன். தேவி ஞானானந்தரின் உருவில் புன் சிரிப்புடன் அபயஹஸ்தத்தை அசைக்கிறாள். ஒன்றும் தோன்றாதவனாய் ''அம்மா நீயா?'' என்று கத்துகிறேன். பக்கத்தில் இருந்தவர் நான் ஏதோ பயந்து விட்டதாக எண்ணி தட்டி எழுப்பி விடுகிறார். ஏதேதோ கேள்விகள் கேட்கிறார். பித்துப் பிடித்தவன் போல் அதிஷ்டானத்தின் முன் சென்று உட்கார்ந்தேன். 'நானும் தேவியும் ஒன்றே' என்று காட்டுவதற்காகவே என்னை வலிய ஆட்கொண்டு அருள் புரிந்தாயோ'' என்று அவரது கருணையை எண்ணி எண்ணிப் பெரும் ஆனந்தத்தில் மூழ்கி இருந்தேன். இதற்குள் 4வது கால அபிஷேகத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளுடன் ஜனங்கள் வந்து விட்டார்கள்.

இதன் மூலம் தேவியும் ஞானானந்தரும் ஒன்றே என்ற எண்ணம் உறுதியாயிற்று. அன்றிலிருந்து எனக்குத் தபோவனத்தில் கொஞ்சக்காலம் தங்கி மந்த்ரசாதனை செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்து வந்தது. ஸத்குருவின் அருளால் அதுவும் நிறைவேறி விட்டது.

# சத்குரு பாத மகிமை

N. கோபாலகிருஷ்ணன் M.A., B.Ed.

முக்தரைப் பகைவரென்றும் மூர்க்கரை உறவரென்றும்
பெத்தனை அநேக ஜன்மம் பிறந்திறந்து உழலுவோர்க்கு
பத்தியால் யோகங்காட்டி யோகத்தால் ஞானம்காட்டும்
ஸத்திய ஞானானந்த ஸத்குரு பாதம் போற்றி

நம் ஸத்குருநாதர் பக்தர்களை உய்விக்க மிக எளிதாகக் காட்டியுள்ள வழிகளிலும் உபதேசங்களிலும் அடியேன் தெரிந்து கொண்டவை மிக முக்கியமானவை, குருபாதத்தில் பூரண நம்பிக்கை வைத்து குரு பாதுகையை வழிபடுவதேயாகும். எளிதில் உயர்ந்த, மிக அரிதான பயனைப் பெற இதுவே ஏற்றசாதனம். இதுபற்றி குருதேவர் குறிப்பிட்டவைகளில் சிலவற்றை நினைவுபடுத்திகொள்வது நலமென எண்ணி, கட்டுரையை தொடங்குகிறேன்.

எண்சாண் உடம்பில் தலையே பிரதானம் என்றாலும் பாதமே பெருமைக்குரியது. பாதம் தியாகத்தின் சின்னம். இன்பத்தைப் பிறருக்கு நல்கித் துன்பத்தைத் தான் ஏற்றுக்கொள்ளுவது தியாகம், துன்பத்திற்கு ஏதுவான செயலை பாதம் மேற்கொண்டு, இன்பத்தை மற்ற உறுப்புகளுக்கு நல்குகிறது. நடப்பதால் உண்டாகும் சிரமத்தை பாதம் ஏற்றுக்கொள்ளுகிறது. ஆலயத்தினுட் சென்றதும் வாயால் துதித்தும் கைகளால் வணங்கியும் கண்ணால் பார்த்தும் மகிழ்கிறோம். கிடைக்கும் பிரசாதத்தை நா சுவைத்துப் பார்க்கிறது.

இந்த இன்பங்களில் பாதம் பங்கு பெறுவதில்லை. மூர்த்தியைத் தரிசிக்கும் வரையில் செல்லும் துன்பத்தைப் பாதம் ஏற்கிறது. கிடைக்கும் இன்பத்தை மற்ற உறுப்புக்கள் அனுபவிக்கின்றன. தியாகத்தைப் புரியும் பாதம் சிறப்புடையது என்பதில் ஐயமுண்டோ?

சாதாரணபாதமே இத்தகையபெருமைக் குரியது என்றால் சத்குரு நாதரின் பாதப் பெருமையைக் கூறவும் வேண்டுமா?

குருபாத மகிமையைப் புற்றி குருநாதரின் அருள்வாக்குகள் சில.

1. ''சத்குரு மூர்த்தியின் பாதுகைகளிலிருந்துதான் ஓம்கார மூர்த்தியினை அடையலாம். நீ நேரிடையாக அடைய முடியாது'' ''பாத சேவைதான் முக்கியம்''.

அருள் வாக்கு பக்கம் 40.

2. இகத்துக்கு உள்ளவைகளையும் பரத்துக்கு உள்ளவைகளையும். தருவது சத்குரு பாதம்.

—அருள்வாக்கு பக்கம் 3.

மேலே கூறிய இரண்டு அருள் வாக்குகளும் நமக்கு மிகவும் இன்றியமையாதவை. பிறவியின் லட்சியமான பிறவாப்பேற்றை அடைய சத்குரு திருவடி அவசியம். குருநாதரது திருவடியை மனது பற்றினால்குருநாதனை உள்ளத்தில் எழுந்தருளச்செய்ததுஆகிறது. அவரது திருவடி நினைவாகவே இருந்தால் அவரும் நம் உள்ளத்தைவிட்டு அகலாது இருப்பர். குருவின் திருவடியை மனமுருகிக் கதறி கண்களில் நீர் மல்க இரு கைகளையும் மேலே உயர்த்தி ''உன் திருவடிகளேசரணம்'' என்று நிர்க்கதியாய் அடைக்கலம் புகவேண்டும்.

என்பெலாம் நெக்குருக, ரோமம் சிலிர்ப்ப
உடல் இளக, மனது அழலின் மெழுகாய்
இடையறாது உருக, வரும் மழைபோல் இரங்கியே
இருவிழிகள் நீர் இறைப்ப
அன்பினால் மூர்ச்சித்த அன்பருக்கு அங்ஙனே
அமிர்த சஞ்சீவி போல வந்து
ஆனந்த மழை பொழிவையே! —தாயுமானார்

மெத்தைப்படி ஏறமுடியாமல் தவிக்கும் குழந்தை அழுதவுடன் தாய் வந்து அதைத் தூக்கிக்கொண்டு படி ஏறுவது போல பக்தர்களது சரணாகதியைக்கேட்டதும் பரமன், குருநாதராக வந்து, நம்மை ஏற்று உடனிருந்து வழிகாட்டி, வாழ்வாங்கு வாழவும் பிறவியின் லட்சியத்தை அடையவும் உதவுவார்.

ஸத்குருவிடம் தீவிர சரணுகதியே பக்த னின் உயர்ந்த கடமை. அதனுல் எதையும் சாதிக்கலாம். இதுபற்றி குருநாதரின் அருள் வாக்குகள்.

குருதரிசனம் தான் நமக்கு எல்லாவற்றி லும் சிறந்தது. பூஜாபலன், க்ஷேத்திர பலன் எல்லாம் நமக்குக் குருதரிசனத்திலேயே கிடைக்கிறது. உடல் திடம் இருக்கும் வரைக் கும் அவரைச் சிந்தனை செய்வோம்: கலக்கம் வேண்டாம்: பாக்கி ஆகவேண்டியவைகளை அவர் பார்த்துக் கொள்வார். அதே உறுதி யாக இருப்போம்.

—அருள் வாக்கு பக்கம் 72

யாதுக்கும் கலங்காமல், உறுதியாக, திட மான நம்பிக்கையுடன் எல்லாம் செயலாற்றி வரவும். பருவத்தில் பழுக்கும் என்ற பழ மொழியின்படி பயன் தரும் என்று நம்பவும், பொறுப்புடன் கலக்கமற்று உன் கடமையைச் செய்து வருவாயாக: பக்தி வழியில் உன் மனதை ஈடுபடுத்துவாயாக: உலகில் அனை வரும் இன்புறும்படிக்கு வேண்டி ஆண்டவனி டம் தோத்திரம் செய்வாயாக.

அருள் வாக்கு பக்கம் 19.

## திருவடி பூசை:

''ஆசார்யாள் திருவடிக்கு பூசை செய் வோம்: அருள் பெறுவோம்: பயபக்தியுடன் பூசிப்போம். இதுதான் குருதேவர் அடிக்கடி கூறியது. அடிக்கடி தரிசித்த பக்தர்களது செவியில் அது இன்றும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. இங்கு ஆதி சங்கர பகவத்பாதாள் நினைவாகவும் அருட்குரு மூர்த்தியின் நினை வாகவும் இரண்டு பாதுகைகள் உள்ளன. இவைகளைப் பூசிப்பதன் மூலம் விரும்பியதைப் பெற்று வாழ்வாங்கு வாழவும் உடம்பினுள் உறையும் உத்தமனைக்கண்டு பிறவியின் இலட் சியம் ஈடேறவும் முடியும்.

மனிதனுடைய சரீரத்திற்குள் மூலாதா ரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனுக தம், விசுத்தி, ஆக்ஞா என்ற ஆறு சக்கரங் கள் சுஷும்ன நாடிக்குள் விளங்கி வருகின்றன. கடும் தவமிருந்து எதிர்ப்படும் சித்திகளைப் புறக்கணித்து முன்னேறிச் சென்ருல் உள் ளொளியாகிய பேரொளியைக் கண்டு பர மாத்மாவோடு ஐக்கியமடையலாம். ஒவ்வொ ருவரும் அடைய வேண்டிய ஒன்று இது.

சதா புறஉலகில் உழன்று கொண்டிருக்கும் நம் போன்றவர்களுக்கு இம் மார்க்கம் அரி தாக இருந்தாலும் எளிய மார்க்கமான திரு வடியில் பக்தியும் பக்தியின் மூலம் யோகத் தையும் யோகத்தால் ஞானமும் புகட்டி அவரவர்களின் பக்குவ நிலைக்கேற்பசோபான நெறியில் சொல்லாமல் சொல்லி ஊக்குவிக் கிருர்.

## தத்துவ நுட்பம்:

திருவடி பூசையின் பொழுது செய்யும் கிரியைகளைக் கவனித்தால் தத்துவ நுட்பம் ஓரளவு புரிந்துகொள்ளலாம். தொடக்கத்தில் ஒரு விளக்கிலிருந்து மூன்று பிரிவுகளாகப் பிரிந்துள்ள விளக்கு ஏற்றப்பட்டிருக்கும். அதிலிருந்து குருதேவர் உட்காரும் இடம் வரை கவனித்தால் ஆறு நிலைகள் (Steps) நன்கு தெரியும். மும்மலங்களை நீக்கி மூலா நாரத்திலிருந்து சக்தியை எழுப்பி ஒரு முக நாட்டத்தோடு குருநாதர் திருவடியையே நினைத்துவந்தால் இருதயகமலத்தில் உறையும் பேரொளியைக் காணலாம் என்பதைக் காட் டவே குருநாதரது இடத்திற்கு அருகில் (ஐந்தாவதுநிலை) தாமரை போன்ற ஒரு உரு வம் வைக்கப்பட்டுள்ளது. குருதேவர்ஆசனத் தில் அமர்ந்துள்ளபோது அவ்வுருவத்தின் மீது பூமாலையிட்டு எலுமிச்சம்பழம் (அ) முழுத் தேங்காய் வைத்திருப்பார். அகத்தே காணும் பேரொளியை புறத்தே பாவனையாக அறிமு கப்படுத்தினுர் என்றே கூறவேண்டும்.

அரிய தத்துவத்தை எளிய சொற்களால் விளக்கவும் புரிந்துகொள்ளவும் இயலாது.

## தோத்திரப் பாடல்கள்:

''தீப ஜோதியாய் வருவாய்'' என்று தொடங்கி எல்லோரும் நன்ருய் இருக்க வேண்டும்: ஒன்ருய் இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையோடு முடியும் பாடல்களை அனை வரும் உள்ளுணர்வோடு பக்தியுடன் பாடு வார்கள்: அப்படி பாடுபவர்களுக்கே உணர்வு ஏற்படும்.

## அருள்மொழி (உபதேசம்):

திருவடிபூசை முடிந்ததும் அனைவர்க்கும் தீர்த்தப் பிரசாதம் வழங்கப்படும். இறுதியில் எப்பொழுதும் கோவிந்தன் நினைவாக இருக்க வேண்டும் என்ற பொருளில் ''ஸதா சர்வத்ர கோவிந்த நாம சங்கீர்த்தனம்'' என்று குரு தேவர் கூறியதும் அனைவரும் கோவிந்தன் நினைவோடு விடை பெறுவார்கள். எப்பொழு தும் கோவிந்தன் நினைவும் எல்லோரும் ஒன் ருய் இருக்க வேண்டும் என்ற எண்ணமும்

இருந்தால்போதுமானது குருவருள் தானகவே கிட்டும்.

**திருவடி பூசை எதற்காக:**

சத்குரு நாதர் கருணமூர்த்தி: தானகவே அருள் புரியக்கூடாதா: பூசை செய்ய வேண்டுமா? என நினைக்கத்தோன்றும். ஒரு குழந்தை தாய் தந்தையர் கொடுக்கின்ற பொருள்களை தாய்தந்தையர் கேட்ட போதும் கேளாதிருக்கும் போதும் மனமகிழ்வோடு பெற்றோர்களுக்குக் கொடுக்குமேயானல் பெற்றோர் அகமகிழ்வர் என்பதை அனைவரும் அறிவர்.

இக் குழந்தை கொடுப்பது பெற்றோர்களுக்குத் தேவையில்லாத ஒன்று. இருந்த போதிலும் அக்குழந்தையின் அன்பையும் பண்பையும் தியாக உணர்வையும் வளர்ப்பதற்காகவே அன்போடு அதனை ஏற்கின்றனர். குசேலர்கொண்டுவந்த அவலால் கண்ணன் பயன்பெற்ருரா? கண்ணப்பரின் ஊனைத்தான் காளத்தியர் எதிர்பார்த்தாரா? நம்முடைய பண்புகளை வளர்க்கவே பூசைகளும் ஆராதனைகளும்: குருநாதர் வளர்வதற்காக அல்ல: திருவடி பூசையில் பெரும்பகுதி அன்னதானமே. பசித்தோர் முகம் பார்க்க ஒரு நாளும் விரும்பாத குருநாதர் பக்தர்களைக் கேட்கும் முதற் கேள்வியே: ஆகாரம் (ஆச்சா) எடுத்தீர்களா? என்பதுதான். குருநாதரது திருவுள்ளப்படி திருவடி பூஜையும் அன்னதானமும் இன்னும் நடந்து வருகிறது.

தாய்க்குக் கொடுப்பதைவிட அவள் குழந்தையிடம் ஒரு பொருளைக் கொடுத்தால் இருவருக்கும் மகிழ்ச்சி. கொடுப்பது சிறியதாக இருந்தாலும் குழந்தை, தாய் இருவரின் மகிழ்ச்சியைப் பெறலாம். ஆண்டவரின் பிரதிநிதியான பிரமஞானி தங்கியுள்ள இடத்தில் அவரது கருத்துப்படி திருவடி பூசை செய்து ஆண்டவன், குரு இருவரது அருளையும் எளிதில் பெற வாய்ப்பளிக்கிறது இத்திருவடி பூசை.

ஸத்குருநாதரின் (சுவாமி ஞானனந்தகிரி) பாதஅணி மகிமையையும் பாதுகைகளின் பயனையும் சிறப்பித்து அடியார்க்கு அடியவன் என்ற பக்தர் பாடிய பாட்டு இங்கு குறிப்பிடத்தக்கது.

நின்பாத தூளியின் ஒரு நுளியை வழிபடும்
அடியவரு மிவ் வுலகினில்
குன்ருத செல்வமும் குறையாத சக்தியும்
உயர்பக்தி யோக நிறைவாம்,
இன்பமும் ஞானமும் பெற்றுளார் உன்நாமம்
பக்தியுடன் ஓது மவர்பால்
முன்பிறவி ஒன்றினில் அடியுண்ட
மறலியும் செல அஞ்சினன்
நின் பாதுகைமி லொளிர் பூரணக் கல்களில்
ஒன்றில் அணுவளவு பெற்ருர்
முன் வாணி மலர்மகள் அம்பிகையும் தானக
வந்தருள் மொழிந்திடுவரே!
இன்னும் பல நின் மகிமை கண்டுமுனை அடையாத
தவமிலிகட் கிரங்கு வாயோ
அருள் தவ வனத்தமர்ந்துறு மவரை உய்விக்கும்
கருணை புருவான குருவே.

நெற்குத்தி உண்ணுது உமிகுத்தி
கை வருந்தல் போல
கண்ட இடங்களில் அலைந்து மனம்சிதறி,
காலத்தையும் பொருளையும்
வீணே கழிக்காது பரிபூர்ணத்வம் பெற்ற
ஜீவன்முக்தரது சன்னதி
சரணடைந்து திருவடியைப் போற்றிப்
பயன் பெறுவோம்.

மேலே விவரிக்கப்பட்ட திருவடிகள் பூசை ஆண்டு முழுவதும், நாளெல்லாம் நடைபெற தபோவன நிர்வாகத்தினர் தக்கதொரு சிறந்த ஏற்பாடு செய்துள்ளனர், ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம்) டிப்பாசிட் நன்கொடையாக அளிக்கும்பக்தர்கள் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்புகிற தினத்தில் ஆண்டுக்கொருமுறை பாதபூஜை செய்துகொள்கிருர்கள். வாழையடி வாழையென அவர்தம் நியமிக்கப்பட்ட சந்ததியினருக்கும் இந்த பாக்கியம் உண்டு. இளந்தலைமுறையினர்க்குச் சேர்த்து வைக்கும் தவநிலையில் தலையாயது இந்த டிபாசிட்முறை பாதபூஜை.

**தீபஜோதி:**

தபோவனத்தில் திருவடிபூசை தொடங்குவதற்குமுன் தீபஜோதி வழிபாடு என ஒன்று நடைபெறுகின்றது. இது தபோவனத்தின் ஒரு தனிச்சிறப்பு, எல்லையற்ற, எங்கும் பரவியுள்ள அருட்சக்தியை ஜோதி உருவிலே வழிபடுவது சிறப்பானது. புற இருளையும் அக இருளையும் நீக்கப் பெரிதும் உதவுகிறது.

''விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாறும்
விளக்கை விளக்கும் விளக்குடை யார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கு அவர்தாமே''
— திருமந்திரம்

வெட்ட வெளியாகவும் ஜோதி ஸ்வரூபமாக வும் உள்ள அருட் சக்தியை அறிவென்னும் விளக்கால் காணலாம். இதற்குத் தன்னை யறிந்த தத்துவ ஞானிகளே விளக்காகவும் விளக்குபவர்களாகவும் இருந்து உதவ வேண் டும். இவர்களது முன்னே நமது துன்பம் ஒழியும்.

இக் கருத்தை அடிப்படையாக வைத்தே தீபஜோதி வழிபாடு நடத்திக் காட்டினர் நமது குருநாதர். திருவடி பூஜை தொடங்கு வதற்கு முன் விடியற்காலத்தில் குத்து விளக்கை அலங்கரித்து விளக்கேற்றி, கற்பூர ஆரத்தி எடுப்பார்கள். மணிமண்டபத்து மணி நாதம் எழுப்ப சுவாமிகள் குறிப்பிடும் பெண் குழந்தையிடம் குத்துவிளக்கை எடுத்துக் கொடுப்பார் குருக்கள்.

" தீப ஜோதியாய் வருவாய் " என்று பாடிக்கொண்டு சுவாமிகள் ஆலயத்தினின் றும் புறப்படுவார். குத்துவிளக்குடன் பக்தர் கள் பாடிக்கொண்டே சுவாமிகளின் பின் தொடருவார்கள். வலம் வரும்போது ஆங் காங்கே பெண்கள் கற்பூர ஆரத்தி எடுத்து வணங்குவர். வணங்கியவர் அனைவரும் பூ, பழம் பெறுவர்: அப்பொழுதுள்ள தெய்வீக சூழ்நிலை, சாந்தி, மகிழ்ச்சி ஆகியவைகளை எழுத்துக்களால் விவரிக்க முடியாது. அனுப வித்தவர்களுக்கே தெரியும்.

பாடுகின்ற பாடலின் பொருள் இம்மை யில் வாழ்வாங்கு வாழ பிரார்த்திப்பதுபோல இருந்தாலும் அனவரதம் அகத்தே உறையும் பேரொளியாகிய உள்ளொளி காணப்பெரிதும் உதவுகிறது. பயபக்தியுடன் உணர்ந்து தீப ஜோதி வழிபாட்டில் ஈடுபட்டுவரவேண்டும். புறத்தே வழிபட வழிபட அகத்தேயும் நானு கவே தெரியும்.

**மகர விளக்கு :**

தீப ஜோதி வழிபாடு அன்றி மணிமண்ட பத்தில் 7 பிரிவுகளையும் 79 முகங்களையும் கொண்ட மகர விளக்கு அமைக்கப்பட்டு விசேட தினங்களில் குறிப்பாக பௌர்ணமி யின் போது முறைப்படி அலங்கரித்து பூஜை செய்து ஜோதி வழிபாடு நடைபெறும். ஆறு ஆதாரங்களைக் கடந்து அப்பாற்காணும் ஜோதியை அனைவரும் கண்டு ஆனந்திக்க வேண்டும் என்ற தத்துவ அடிப்படையில் விளக்கு அமைக்கப்பட்டு வழிபாடு நடை பெற்றாலும் வாழ்க்கையில் விரும்பும் நலன் களைப் பெறவும் (79 முகங்கள் 7+9=16: பதி னாறு பேறுகள்) வழிபாடு துணைபுரிகிறது.

விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்ந் நெறி ஞானமாகும். —அப்பர்

எதிர் பாராத நிலையில் விளக்கு எரிய உதவிய அவர்களுக்கே இப்பதவி என்னால் அள்ளி அருள் வளங்கும் கருணாமூர்த்தியான சத்குரு ஞானானந்தர் நடத்திக்காட்டிய ஜோதி வழிபாட்டில் உளமார பங்கேற்பவர் பெறும் பலனைக் கூறவும் வேண்டுமோ?

1. தீப ஜோதியாய் வருவாய் நீ தீபஜோதியாய் வருவாய்
   திருமகளே பொருள் தருமகளே நீ தீப ஜோதியாய் வருவாய்
2. உனதருள் உளதேல் உலகாம் — இன்றேல்
   உலக வாழ்வு கொடும் நரகாம்
   தன தானிய சௌபாக்கியம் தருவாய் — (தீப ஜோதி)
3. பாற்கடல் உதித்த பொற்கொடியே — உந்தன்
   பார்வை பெற்றவர்க்கெதும் எளிதாம்
   சேர்த்தபின் பயனுறும் செல்வமும் தருவாய் — (தீப ஜோதி)
4. வீரத் திருமகளின் நோக்கம் — எல்லா
   வெற்றி அளிக்கும் மன ஊக்கம்
   சீரும் சிறப்பும் மனத் திறமையும் தருவாய் — (தீப ஜோதி)
5. செந்தாமரை வளர் ஒளியே — ஐயன்
   திருமார்பினுள மணியே
   எந்தாய் நினதருள் வாழ்க வாழ்க நீ — (தீப ஜோதி)
6. கமல நயன மிகும் கருணை — எந்தன்
   கவிகள் பாடுமிடம் பொழிவாய்
   வமிச முழுது மெனக்கருள் வரம் தருவாய் — (தீப ஜோதி)
7. தோகை நினதருளின் துணையால் — நான்
   தொட்டதனைத்தும் பயனளிக்கும்
   யோக போக சுக வாழ்க்கையும் தருவாய் — (தீப ஜோதி)

# ஸ்ரீ ஞானகுரு

டாக்டர்
ஞானசுந்தரி நடனம் M.B.B.S

ஸ்ரீலஸ்ரீ சற்குருநாதர் ஞானானந்த கிரீஸ்வரர் தரிசனம் முதன் முதலில் 1961ம் வருடம் ஆகஸ்ட் மாதம் எனக்குக்கிட்டியது. 'குடமுருட்டி' என்று அழைக்கப்படும் கிராம எல்லையில் ஸ்ரீ ஞானானந்த தபோவனத்தில் நான் இந்த மகரிஷியை முதன் முதலில் தரிசித்தேன். விழல் வேய்ந்த குடிலில், மாமரங்களின் நிழலில், வேத காலத்துப் பர்ணசாலையின் சூழ்நிலையில் ஒரு பிரம்பு நாற்காலியில் அண்ணல் ஒற்றைத் துவராடை உடுத்தி அதையே கொண்டு சிரஸையும் மூடி திருநீறு அணிந்து சிவப் பழமாகக் காட்சி அளித்தார்கள். அந்தக் குடிலில் எனது மனத்துயரச் சுமையை அண்ணலின் திருவடிகளில் சமர்ப்பித்தேன். 'வேண்டுவோம்; அருள் கிடைக்கட்டும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார்கள். மன நிறைவு பெற்று நான் பணி புரிந்து வந்த விழுப்புரத்திற்குத் திரும்பினேன்.

அப்போது ஸ்ரீ ஸ்வாமிஜி சித்தலிங்க மடத்திலும், தபோவனத்திலும் இருப்பதுண்டு. ஆகவே, பேருந்தில் வரும்போதே ''சுவாமி வனத்திலா, மடத்திலா?'' என்று கேட்டே வருவது வழக்கம். சித்தலிங்க மடத்தில் சேவார்த்திகள் 10, 15 பேர்களே இருப்பார்கள். எனக்கு மனக்குழப்பமோ உளைச்சலோ ஏற்பட்டு சலிப்பு ஏற்படும் போது எல்லாம் ''பசுவை நோக்கி ஓடிவரும் கன்று போல்' விழுப்புரத்திலிருந்து ஞாயிறு விடுமுறையன்று ஸ்வாமிஜியிடம் வந்து ஒரு நாளை மடத்திலோ வனத்திலோ கழித்து விட்டுச் செல்வது வழக்கம். மடத்தில் எம்பெருமான் ஆசியுடன் எலுமிச்சம்பழம் பெறும் பேறு பெற்றிருக்கின்றேன்.

ஒருமுறை ''லிகித ஜபம்'' அஷ்டாக்ஷரம் எழுதிய நோட்டும் தாமரை மணியும் ஸ்வாமிஜியின் திருவடிகளில் வைத்து வணங்கிய போது, 'யார் மந்திரோபதேசம்?'' என்று கேட்டார்கள். ''தந்தையார்தான்'' என்றேன். 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்று சொல்லி ''அஷ்டாக்ஷரம்தானே?'' என்றார்கள். ''ஆம்'' என்றேன். ''லிகித ஜபத்தில் சிந்தை ஒன்று எண்ண, கரம் எதையோ எழுத ஏகாக்ர சிந்தைஇருக்காது'' என்று அறிவுறுத்தி எனக்கு துளசி மணிமாலை அளித்தார்கள். அத்துடன் ஜபம் செய்யும் போது நான் செய்து வந்த தவறையும் சுட்டிக்காட்டி எவ்வாறு முறையாக ஜபம் செய்யவேண்டும் என்று உபதேசித்து அருளினார்கள். அன்றிலிருந்து இன்றுவரையும் நான் அந்த ஜப மாலையை வைத்திருக்கின்றேன். ஜபமும் செய்து வருகிறேன். தபோவனத்துடன் தொடர்பு ஏற்பட்ட பின்னர்தான் இடைவிடாது இறைவனைப் பிரார்த்திக்க ஆரம்பித்தேன். ஆன்மிகப் பாதையில் ஸ்ரீ சற்குருதேவர் வழிகாட்ட, அண்ணலின் கருணை கலந்த ஆசியாலும், அருளாலும் முன்னேற ஆரம்பித்தேன்.

வெகுதூரத்திலிருந்து எண்ணப்படும் எண்ணங்களை அறியும் ஆற்றல் ஸ்வாமிஜிக்கு உண்டு. ஒருமுறை திருவரங்கத்தில் நான் பணி புரிந்தபோது எம்பெருமானுக்கு நைவேத்தியமாக ஒரு பொருள் கொண்டுவந்தேன். 5மணியிலிருந்து 11 மணிக்கு வனம் வந்து சேரும் வரை அண்ணல் எனது காணிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று, இடைவிடாது வேறு சிந்தையின்றிப் பிரார்த்தித்துவந்தேன். என்ன ஆச்சர்யம்! என்றைக்கும் 9 மணி அளவில் பிக்ஷை எடுத்துக்கொள்ளும் சற்குருதேவர், அன்று மட்டும் 11 மணிவரை பிக்ஷை ஏற்கவே இல்லை. எனது பிரார்த்தனை நிறைவேறியது' என்ற மனநிறைவடைந்தேன்.

மன உளைச்சல் ஏற்படும் போதெல்லாம் எம்பெருமான் கடிதங்கள் மூலம் ஊக்குவிப்பதுண்டு. '' எப்போது எனக்கு விமோசனம் ஏற்படும்,''இறையருள் எப்போது சித்திக்கும் என்று யாராலும் கூற முடியாது. வானத்திலிருந்து விழும் கனி போல் திடீரென்று ஒரு நாள் சித்திக்கும். அதுவரை பொறுமையாக, ஆன்மிக சாதனைகளைச் செய்து முழு மனதுடன் இறைவனை வழிபட்டு வருவது நமது கடமை'' என்று எழுதியிருக்கிறார்கள். அவர்

களது திருமுகங்களை எல்லாம் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். சற்குருவின் பாதங்களுக்கு அணிவிக்கப்பட்ட துவராடையையும் எனக்குப் பிரசாதமாக அளித்துள்ளார்கள். மஞ்சள் குங்குமத்தில் பதித்த திருவடிகளையும் எம்பெருமானின் பல படங்களையும் அருட்பிரசாதமாக வழங்கியுள்ளார்கள். அதிகபாத பூஜை நடக்காத காலத்திலேயே 1962-63ல் எங்கள் செல்வன் என் கருவிலிருக்கும் போது பாத பூஜை செய்ய வேண்டும் என்ற எனது கோரிக்கையை நிறைவேற்றி வைத்தார்கள். பிரசவிக்க எழும்பூர் ஆஸ்பத்திரி செல்லு முன்பு ஆசி பெற தபோவனம் வந்திருந்தேன்.

''நிறை கர்ப்பிணி ஆதலால் ஒரு முறைக்கு மேல் நமஸ்கரிக்க வேண்டாம். ஓய்வாக ஒரு இடத்தில் அமர்ந்து இருப்போம். பஜனை ஹாலுக்கு வரவேண்டாம்'' என்று கூறிவிட்டார்கள்.

ஆசீர்வதித்து பிரசாதம் அளித்து அனுப்பி வைத்தார்கள். எழும்பூர் ஆஸ்பத்திரியில் பிரசவம் ஆன பிறகு வயிற்றில் கோளாறு ஏற்பட்டு உயிருக்கே ஊறு விளைவிக்கக் கூடிய நிலை உருவாகியது. பொறுக்க முடியாத வயிற்று வலி ஸ்வாமிஜியைப்போலவே உள்ள ஒரு கத்தோலிக்கப்பாதிரியார் அருகில் உள்ள நோயாளியைப் பார்க்க வந்தார். அவரிடம், ''ஸ்வாமி என்னை மறந்து விட்டார், என்னால் வலி பொறுக்க முடியவில்லையே'' என அரற்றினேன். அவர் எனது கையைப் பற்றி, ''உனக்காகப் பிரார்த்திக்கிறேன். ஆண்டவர் கருணை மிக்கவர். உனக்கு அவர் அருள் கிடைக்கும்'' என்று கூறி ஆசீர்வதித்துச் சென்றார். எனக்குஸ்வாமிஜியே நேரில் வந்தது போல் நிம்மதி கிடைத்தது.

1963-ல் எங்கள் செல்விக்கு ஒரு விபத்து ஏற்பட்டு சென்னை ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்ற போது, உடனே கடிதம் எழுதி, ''தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று'' என்று கூறிப் பிரசாதம் அனுப்பி வைத்தார்கள். 'கவலை வேண்டாம்' எனத் தேறுதலும் கூறி இருந்தார்கள். அவர்களது ஆசியால்தான் எங்கள் செல்வி பிழைத்து எழுந்து தேறினாள்.

எங்கள் செல்வன்தான் ஸ்வாமிஜியின் அருளால் பிறந்தவன். ஸ்வாமிஜியின் அருளாணையின்படியே அவனுக்கு 'குருச்சரண்' என்ற பெயரையே வைத்தோம்,

45-ஆம் நாளிலேயே ஸ்வாமிஜியின் திருக்கரத்தால் திராகைஷப்பழச் சாறு குழந்தைக்கு அளிக்கப்பட்டது. அவனுக்கு ஓராண்டு முடிந்தபோது ஸ்வாமிஜியின் சன்னிதானத்தில் ஆயுள் ஹோமம் நடத்தி அன்னப் பிராசனமும் எம்பெருமான் திருக்கரத்தால் நடந்தேறியது. அதேபோல் விஜய தசமியன்று ஸ்ரீலஸ்ரீ சற்குருதேவர் தனது அருட்கரத்தால் பால் ஒரு கிண்ணத்தில் எடுத்து அவனது கையில் அளித்து ''இது க்ஷீரம், இதை உட்கொண்டால் எல்லாக் கலைகளும் வரும்'' என்று சொல்லி அளித்தார்கள்.

திருச்சியில் 1966-ஆம் வருடம் என்று நினைக்கிறேன். ஸ்வாமிஜியிடமிருந்து மாவட்ட மருத்துவ மனைக்கு தொலைபேசி மூலம் செய்தி வந்தது. எங்கள் இல்லத்திற்கு விஜயம் செய்தார்கள். அண்ணாவுக்கு பூரண கும்பம் கொடுத்து உள்ளே அழைத்துச் சென்று திரு விளக்கேற்றி வைத்து ஸ்வாமிஜியை ஹாலில் ஓர் ஆசனத்தில் அமரச் செய்து விட்டு. ''சாஸ்திரோக்தமாக எல்லாம் செய்வதற்கு எனக்குத் தெரியவில்லை'' என்றேன்.

''வரவேற்பு முதலிய ஆடம்பரங்களை எண்ணி இவ்விடம் வரவில்லை. அன்பு நிறைந்திருந்ததால்தான் ஸ்வாமி வந்தது'' என்றார்கள். அவர்கள் திருவுருவப்படம் முகப்பில் மாட்டி இருந்தேன். அதைப் பார்த்துவிட்டு ''பொம்மை வைத்திருக்கிறாயா?'' என்று கேட்டார்கள்.

எப்போது தபோவனம் வந்தாலும், டாக்டரம்மா வந்தாயிற்றா?''என அன்புடன் விசாரிப்பார்கள் உணவு ஓய்வு விஷயத்தில் அவர்களைப் போல் அன்புடன் பேச எந்த இல்லறத்தாருக்கும் தெரியாது எவ்வளவு டாக்டர்களுக்குத் தபோவனத்தில் தொடர்பு இருந்தாலும் டாக்டரம்மா என்ற அளவில் என்னை சேவார்த்திகள் நினைவு கூரும்படி ஸ்வாமிஜி எனக்குப் பெரும்பேறு அளித்திருந்தார்கள். வனம் செல்லும் போதெல்லாம் அங்குள்ள சேவார்த்திகளுக்கு ஸ்வாமிஜியின் உத்தரவு பெற்று வைத்தியம் பார்ப்பதுண்டு. அண்ணாவுக்கே வைத்தியம் செய்யும் பேறும் சிலமுறை வாய்த்திருக்கிறது. ஆகவே தபோவனம் எனது தாய் வீடு என்று எண்ணியே விடுமுறைகளில் சென்று வந்தேன். அந்த லோகமாதா இப்பூத உடலிலிருந்து மறைந்தபோது அளவிலாத் துயர் அடைந்தேன். பிறகு ஸ்தூல உடல் மறைந்தாலும்

அன்னாரின் அன்பும் ஆசியும் அருளும் மறையாது எனத் தேறி மானசீக வழிபாட்டைத் தொடர்ந்து நடத்தி வருகிறேன். மிகவும் மனக்கவலை ஏற்படும்போது கனவில் அமர்ந்த நிலையில், காக்ஷி கொடுத்து இன்றும் அருள் பாலித்து வருகிறார்கள்.

சமீபத்தில் எம்பெருமான் அருளால் உயிர் பிழைத்த எங்கள் செல்விக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. அண்ணலின் சன்னிதிக்கு வந்து அண்ணலின் திருவடிகளில் திருமணப் பத்திரிகைகளை வைத்து ஆசிபெற்றுச் சென்றோம். எவ்வித இடையூறுமின்றித் திருமணம் நடந்தேறியதுமன்றி அவள் தன் கணவனுடைய இல்லத்திற்கும் சென்றுவிட்டாள்.

இக்கட்டுரை எழுதுவதன் நோக்கமே ''நான் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்'' என்ற கோட்பாடுதான். எண்ணங்கள்தான் மனிதனை உருவாக்குகின்றன. எண்ணிய எண்ணங்களே சூழ்நிலையாக உருவெடுக்கின்றன. இப்படிப்பட்ட மகரிஷிகளின் அதிஷ்டானத்திற்குச் சென்று 5 நிமிடங்களை மனப்பூர்வமாகக் கழித்தால் மனக்கவலைகள் நீங்கி நிம்மதி பெறலாம். அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கும் நாம் சிறிது நிதானித்துச் சிந்தித்து எங்கு செல்கிறோம் என்றுயோசித்து இறைவனை வழிபட்டு நேரான பாதையில் பீடுநடைபோடுவோம்.

''ஆழ்க தீயதெல்லாம். அரன்நாமமே
சூழ்க. வையகமும் துயர்தீர்கவே.''
திருச்சிற்றம்பலம்.

''துயரத்தை தரும் அசுர சம்பத்தான துர்வாசனையில் பிராணவாயு அதிக வேகத்தில் செல்லுகிறது. தெய்வ சம்பத்தான அமைதி நிலையில் பிராணவாயு வேகம் குறைந்து செல்கின்றது. ஆகவே இதற்கிசைய சாது சங்கம், நல்லாரிணக்கம், தெய்வசிந்தனை, ஜபம், தபம் இத்தகைய மேம்பாடுள்ள செயல்களில் வாழ்க்கையை நடத்துவோர்களுக்கு ஆயுளும், ஆரோக்கியமும் நிறைவுற்ற வாழ்க்கையும் அமையும் என்பது உறுதி.''

—ஞான இன்பவெளி

ஸாகார வழிபாடு இன்றி நிராகாரத்தைச் சேர இயலாது. பள்ளியின் இறுதி வகுப்பே (ஸ்கூல் பைனல்) பள்ளியில் சேரும் மாணவனின் லக்ஷியம். இருப்பினும், பள்ளியின் முதல் வகுப்பில்தான் அவன் சேரவேண்டும். படிப்படியாக இறுதி வகுப்பை அடைவது சாத்தியமே. ஸாகாரத்துள் (உருவத்துள்) நிராகாரம் (அருவம்) அடங்கியுள்ளது. இதை உணர்த்தவே இந்நாட்டில் ஊர்தோறும் கோயில்கள் ஏற்பட்டன. இந்து மதத்தின் சிறந்த கிளைகளான சைவ, வைணவ மதங்களுக்கு இயற்கையிலேயே பகவான் உருவத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறார். சைவர்களுக்கு சிவலிங்கமும், வைணவர்களுக்கு சாலிக்கிராமமும் பகவானால் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வியற்கை உருவங்கள் எல்லோருக்கும் கிடைப்பது அரிதாகையால், அன்பர்களின் இஷ்டபூர்த்திக்காக பற்பல வடிவங்கள் தோன்றியுள்ளன. சாகார பக்தியிலிருந்து நிராகார பக்தி ஏற்படும்.

—ஞான இன்ப வெளி

# Swami Gnanananda
# As Seen by a Western Disciple

by: *K. N. Subramanian*

## I INTRODUCTION

Sadguru Sri Gnanananda is the theme of the interesting account in the section. "A Sage from the East" contained in the book published under the title "Guru and Disciple", by Society for Promoting Christian Knowledge (SPCK), London. It is a matter for genuine satisfaction that Sri Gnanananda, who remains unknown even in a large part of India has been introduced to the West as a Hindu Sage of authentic stature. Sri Abhishikthananda, the French author whose Original name is Henri Le Saux, O.S.B. has not only been a Paul Brunton to Sri Gnanananda but also, by virtue of his deep spiritual instincts, invested the work with a perspective and charm that one rarely comes across. The description of the saint is lively and the assessment of his teaching, though incomplete, is not incorrect and so, it would be an ennobling experience to make one's acquaintance with the Sage and the Thapovanam through the author's mind- which is awake to every event and alive to every detail.

After discussing, in the Preface, the parallel nature of Christian and Vedantic experience about which we are not concerned at present the author reveals that his intention is to present the spiritual message of Sri Gnanananda. His opening remarks themselves are very significant and have unmistakable import.

"His message seems in fact particularly opportune at the present moment precisely bacause of its truth and transparency".

"There is nothing of particular note in the life of Sri Gnanananda as was also true of Sri Ramana Maharishi... He refused all cheap spirituality. His teaching is fundamentally the way of total renunciation, so that finally there is no ego left to manifest itself.

"*His communication with the disciples is never through the intermediary of things. It is direct, in depth at the source of his being.* It is true that nothing is felt except a peace which reveals and illumines —and which transforms the one who can receive it.

"His teaching is pure Vedanta"

Let us, from now, see the sage and the Tapovanam through the mind of the author himself whose assumed name in the narrative is "*Vanya*".

## II Call

Vanya, as was his custom, attended the morning worship at the Samadhi of the Maharishi one day. His mind had drunk deep the Presence which enveloped and hung over everything. He paid final obeisance to the Samadhi and returned when another Western acquaintance, whom he had met some years earlier, accosted him. Harold, the new visitor, asked Vanya, "Do you know the Holy man of Tirukoyilur? Vanya confessed that he did not, and yet, when Herold asked him to accompany him, he readily agreed. The name Gnanananda which meant Wisdom and Joy or Bliss of Knowledge, attracted him. He had himself wanted to go to Tirukoyilur because of the Siva temples there 'bound up with the memories' of Sri Ramana.

Two days later, Vanya and Harold travelled in a transport Bus towards Tirukoyilur and the driver, who was himself a devotee of Sri Gnanananda, assured them that he would enable them to alight just in front of the ashram of the holy man. While travelling, Vanya felt that particular day was going to mark a turning point in his life.

At about 7 O' Clock in the morning, both of them were in Tapovanam, in which there were some mango trees a well and in the centre, a characterless little house. An young Brahmin led them into the house. "The Guru Sri Gnanananda was sitting in a corner, on the far side, on a rickety old couch. He had short legs and his body was half-shrouded in an orange dhothi, which left one shoulder bare, while one end was draped over his head. He was unshaven. On his smooth forehead there was no trace of his hundred and twenty years — only the three lines of ash worn by the devotee of Shiva and the vermilion mark in the centre. *But from this deeply peaceful face shone eyes filled with immense tenderness.*

4416

After paying formal repects to the Swami, they both sat down in a carpet. Harold began to put some questions on the spiritual life. An young man tried to do the translation as well as he could and when it became too difficult for him, Vanya himself chose to help. He soon found that "there developed an understanding in depth between him and the master which was beyond the words being uttered or heard".

The question was asked: "What is Swamiji's position concerning supreme reality. Is it dvaita or advaita? When all is said and done, does any difference remain between God and Creatures? For instance is it possible for man to enjoy God and eternally partake of this joy—or is there finally, beyond everything, only being non-dual (advaita) and indivisible, in unlimited fulness?

Quick came the reply from the Saint. "What is the use of such questions? The answer is within you. Seek it in the depths of your being. Devote yourself to dhyana, meditation, beyond all forms and the solution will be given you".

Another question was put, "does the Swamiji perform rites of initiation?

Vanya was very eager to know Swamiji's reply to the question. The reply was:

"What is the use of initiation? Either the disciple is not ready, in which case the so-called initiation is no more than empty words or else the disciple is ready and then neither words nor signs are necessary. The initiation then happens spontaneously".

"As long as the world is perceived, there is ignorance, non-wisdom, ajnana. When nothing in the world is any longer perceived, there is wisdom, jnana, the only true knowledge".

Now, devotees arrived in large numbers and Vanya and Harold thought that they should retire from his presence for some time and Swamiji allowed them to leave after giving them a cup of milk,

Everything stood in a different way now, for Vanya. "He had come there out of curiosity and yet the few words the old man had spoken to him had gone right to his heart. Those words had uncovered depths which he had never suspected. They had enabled to bubble up like a spring, living water of incomparable sweetness. Yet he already knew everything that had been said to him here. He had read about it, heard tell of it and meditated deeply upon it. He had learned nothing new on the level of words or concepts. Yet it had all been repeated in such a way that an ineffable communication had been established between the master and himself in the depths of the one as of the other. It seemed to Vanya that everything the Guru was saying to him was welling up directly from the most intimate recesses of his own heart".

Vanya had travelled widely and met many persons and yet *it was only this time he had clearly come "face to face with the actual experience of realisation"* He realised that the Sage had taken possession "of his very being" and "the allegiance which he had never freely yielded to anyone in his life was now given automatically to Gnanananda. A sense of total surrender to the Guru overpowered his heart and he would not now hesitate to carry out whatever was the behest of this little man with his short legs and bushy beard, scantily clad in a dhoti, who had so suddenly burst in upon his life".

Vanya and Harold laid themselves at the feet of the Master and caressed his feet fervently.

Vanya had sensed in the Presence of Sri Ramana "something of the call to the within but then the Maharishi was out of reach for him. Further, he had not penetrated sufficiently within to be capable of tuning in directly to the mysterious language of silence"

Leaving the ashram, Vanya and Harold visited the temples in Tirukovilur. The Shiva temple attracted Vanya more and he lingered 'near the central shrine where the silence, the stark simplicity and the semi-darkness never failed to fascinate him.' They nad a glimpse of Arunachala from the river -bed of Pennar and after having their meal in the town reached the ashram in the afternoon, when they learnt, to their regret, that Swamiji had waited for them, to take meal with them.

The Saint was now in the central room and Vanya had the opportunity of observing the way in which the devotees paid their respects to the sage and the manner in which he listened to them and advised them. Vanya noticed that as devotees took leave, Swamiji gave as prasad a fruit or flower which was received respectfully. One peasant woman sought his advice regarding the marriage of her daughter and Swamiji asked her to come alter the

full moon with her daughter. Two peasants who looked ill were advised to seek remedy for their ailments from a nearby doctor. The saint further added, "If you are seeking a remedy for spiritual ignorance, then come here, .. we deal only with sickness of the spirit."

When requested by a visitor to explain what was meant by the word 'Tapovanam', the Sage replied that the name was formed out of the two words 'Tapas' meaning austerity and 'Vana' meaning wood. Explaining further, he said in olden days, there were huge Jungles and forests in india where heamits would retire far from other men, living off fruit and wild roots and spending their time contemplating the things of God... This ashram was founded for those who wish to devote even a fraction of their time to the pursuit of spiritual wisdom far from crowds and from the turmoil of the daily round. Here they can receive proper instruction and give hemselves upto meditation."

Vanya noticed that almost every issue brought before the Saint was utilised by him to drive home a spiritual truth and that everyone was struck by his great kindness.

Swamiji was arranging to supply milk to Vanya and his friend, when Vanya pleaded with Swamiji "We are thirsting for the milk of knowledge. Please teach us. Truly we need nothing else."

The Saint, scarcely opening his eyes. replied in a gentle way:

"there is a time for spiritual food and another for food for the body. *The little calf cannot always have as much of his mother's milk as he wants. She knows when to give it to him and how much he should have at one time. It is the same with the milk of knowledge*".

The visiting Swami Shivaprakasananda was constantly interrupting the remarks of the Saint and speaking at the top of his voice. This was not to the liking of Vanya. He said to the Sadhu, "Maharaj, we come here to drink in Guruji's words. He will teach us as he alone can. Any commentary is sure to water down what he says. We wish to hear him alone and him in silence". This only provoked th Sadhu to speak more. The Sadhu wanted to know from the Visitors their names, nationality etc. Vanya remembered that during the morning talks, the Sage had evinced no interest in knowing such details about the visitors. Vanya politely told the Sadhu how it was wrong of him to make such enquiries about their past. The sage pleased with Vanya's reply, told the Sadhu, Why do you ask such questions? He should not even remember the things you are asking him!"

Sweetmeats and drinks were then served to Vanya and Harold while Swamiji dictated replies to the letters received by the mail, The letters contained tales of distress and prayers for help and Swamiji gave a word of encouragement to every devotee.

Vanya moved to the garden, where the visitors from the neighbouring town gathered around him. They spoke to him about the Swamiji and the manner in which he blessed them and lifted them out of hardships. The periods of is stay in Siddhalingamadam and Salem were discussed. The saint himself, Vanya noticed, was always very reserved when speaking of his former life. He listened to all they said about his birth in Karnataka and penance in Kashmir and the travels all over India, Burma and Ceylon. They gave varying versions about his age but it struck Vanya that the question was really unimportant from the point of truth, as the atman was the sole reality. Vanya, finaly, told them, ' Why should we bother to know what he was yesterday, what he will be tomorrow and where he was sixty years ago or where he will be in a hundred years time? Even if we speak in human terms, is it not true to say that he appears before us at this time and on this day first and foremost as the one through whom the liberating word and call of the Lord to out inmost depth reaches us? Surely most important of all are the things he says to us and the way he looks into our heards. This very mystery which he allows to shroud all that is other than the present moment, seems to me be to his way of impressing upon us his most important lesson, that the only moment that really matters is the one when a man 'becomes aware of the Self.'

Swamiji was again in the central room and after the recitation of the Thousand names of Vishnu concluded, Vanya approached him and said "Swamiji, I come this morning, more or less out of curiosity and look, what has happened. Four years I have been coming to Tiruvannamalai and staying four months on end, so near to you and pet until this week I had not even heard of your name. How can what has happened today happen so quickly."

"The time was ripe for it to happen to you" he replied in ail simplicity and added.

The Centre for the Latest Style
in

BORELLA

with the following new arrivals:-

- Sarees, Blouse Materials
- Dress Materials
- Shirtings, Suitings
- Childrens Garments & etc. etc.

NEW SAREE ENTERPRISE
No. 1191, Maradana Road,
Borella,
COLOMBO-8.

With best compliments from

Design Textiles

Stockists of Blouse Materials, Gilwear
And Mayura Garments.

**118 C, Galle Road, Wellawatte,**
**COLOMBO-6.**

**Telephone: 86644**

# ஸ்ரீ சத்குரு ஞானனந்த நவரத்னமாலை

1. பெண்ணை நதியின் வடகரையில்
கண்ணை கவரும் சோலைதனில்
தன்னை அடைந்தோர் உயர்ந்திடவே
தனித்தே அமர்ந்தார் ஞானனிவர்.

2. அன்பே உருவாய் கொண்டவராம்
ஆலின் கீழே அமர்ந்தவராம்
அபயமென்றே வந்தவர்க்கு
அல்லல் தீர்க்கவே வந்தவராம்.

3. அங்கும் இங்கும் ஒரு நிலையாய்
எங்கும் நிறைந்தே இருப்பவராம்
ஓடி ஓடியே அலைந்திடுவார்
உள்ளம் அசைவற்றிருந்திடுவார்.

4. அல்லல்பட்டு அழுவோர்க்கு
அன்னை தந்தையும் இவராவார்
எடுப்போர்க்கெல்லாம் குழந்தை இவர்
ஏத்திதொழுதால் தெய்வம் இவர்

5. அண்ணாமலையின் அருளொளியாம்
விண்ணும் மண்ணும் அளந்தவராம்
எண்ணும் ஏகாக்ஷர போதகராம்
எங்களை காத்திட வந்தவராம்

6. நாமகள் வீணையின் நாதமிவர்
நான்மறை ஓதிடும் வேதமிவர்
நான் என்னும் அகந்தை அற்றோர்க்கு
நாயகனும் விஸ்வநாதனிவர்.

7. கோதை போற்றிய சீலரிவர்
கீதாசார்ய மூர்த்தி இவர்
போதி அடியில் புத்தரிவர்
ஆதிசங்கர குருநாதரிவர்.

8. உலக மாயை நீங்கிடவே
உள்ளம் தானாய் தெளிந்திடவே
எல்லாம் இவராய் கண்டிடவே
எளிதாய் நமக்கே உரைப்பவராம்.

9. எல்லா கலைகளின் எல்லை யிவர்
நில்லா நடமிடும் நாதரிவர்
சொல்லே அறியா சிறுவனிவன்
சொல்வதை கேட்டும் மகிழ்வாராம்.

**பயன்**

சித்தம் ஒன்றில் நிறுத்திவிட்டு
சிந்தனை அடக்கி ஒருமனதாய்
சீருடன் இதனை பாடிடுவார்
சிவரத்தினமாய் வாழ்ந்திடுவார்.

# தீப ஜோதியாய் வருவாய்

தீபஜோதியாய் வருவாய் நீ தீபஜோதியாய் வருவாய்
திருமகளே பொருள் தருமகளே நீ தீபஜோதியாய்
வருவாய்

உனதருள் உளதேல் உலகம்—இன்றேல்
உலக வாழ்வு கொடும் நரகாம்
தனதானிய சௌபாக்கியம் தருவாய் —திருமகளே

பாற்கடல் உதித்த பொற்கொடியே — உத்தன்
பார்வை பெற்றவர்க்கெதும் எளிதாம்
சேர்ந்தபின் பயனுறும் செல்வமும் தருவாய்
— திருமகளே

வீரத்திருமகளின் நோக்கம் - எல்லா
வெற்றி அளிக்கும் மன ஊக்கம்
சீரும் சிறப்புமனைத்திறமையும் தருவாய் —திருமகளே

செந்தாமரை வளர் ஒளியே - ஐயன்
திருமார்பினுளமணியே
எந்தாய் நினதருள் வாழ்கவாழ்க நீ —திருமகளே

கமல நயனமிகும் கருணை—எந்தன்
கவிகள் பாடுமிடம் பொழிவாய்
வமிசமுழுது மெனக்கருள் வரம்தருவாய் —திருமகளே

தோகை நினதருளின் துணையால்—நான்
தொட்டதனைத்தும் பயனளிக்கும்
யோகபோக சுகவாழ்க்கையும் தருவாய் -திருமகளே

---

பாஹி பாஹி நாராயணி
ஸ்ரீ சக்ர வாஸினி நாராயணி
ஓம்கார ரூபிணி நாராயணி
அம்ப பவானி நாராயணி
தீனதயாபரி நாராயணி
பாஹி பாஹி நாராயணி

ஸ்ரீ பரமேஸ்வரி நாராயணி
சக்தி ஸ்வரூபிணி நாராயணி
விஸ்வ விமோஹினி நாராயணி
ஜெகதம்ப பவானி நாராயணி
ஹே ஜகதீஸ்வரி நாராயணி
ஸ்ரீ பரமேஸ்வரி நாராயணி

# ஸ்ரீ ஸத்குரு ஞானனந்தகிரி ஸ்வாமி அஷ்டோத்ரம்

ஓம் ஸ்ரீ ஸத்குரு ஞானனந்காய நம :
,, கர்நாடக தேஸாவதாராப்த்ரே :
,, மங்கள புரி ப்ரகாஸிகாய :
,, விரக்திநார் ப்ரியபதயே :
,, விப்ரகுல ஸ்ரேஷ்டாய :
,, விப்ரகுல ஜன ஆராதித ஸாக்ஷாத்
பரமேஸ்வராய :
,, வித்யா ரஹஸ்யார்த்த ப்ரபாவாய :
,, விராட்ஸ்வரூப விஸால ஹ்ருதயாய :
,, பாண்டுரங்க நாமஸங்கீர்த்தன ஆனந்தாய :
,, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யாய : 10

,, பஸ்மோத்தூளித மூர்த்தயே :
,, ஜடாமகுடதராய :
,, உக்ர தபஸ்விநே :
,, பவரோக ஸித்தவைத்யநாதாய :
,, ப்ரம்மசர்யவ்ரத பாலகாய :
,, வேத ஸாஸ்த்ர புராண ரஹஸ்யார்த்த
நித்யே :
,, ஸப்தரிஷி தேவாம்ஸாய :
,, ரமண மஹரிஷி ஸித்திகாலவீதே :
,, ஸ்ர்வ கார்ய நிர்வஹன ஸமர்த்தாய :
,, பக்த தாரித்ரய த்வம்ஸகாய : 20

,, பாப நாஸகாய :
,, கர்மேந்த்ரிய ஸேவ்யாய :
,, ஞான கம்யாய :
,, ஆத்மானந்த ரூபாய :
,, ஸிஷ்ய மானஸ ஹம்ஸாய :
,, சிதானந்த ரூபாய :
,, ஸர்வதுக்க ஸம்ஹாரகாய :
,, த்ரிகாலக்ஞாய :
,, ஞானனந்த தபோவன வாஸிநே :
,, புண்யஸீலாய : 30

,, த்ரிவிக்ரம க்ஷேத்திர வாஸிநே :
,, தக்ஷிண பிஞகினி திரவாஸிநே :
,, பரமஸாந்தாய :
,, விஜயதாரக நாம பக்த அநுக்ரஹ
மூர்த்தயே :
,, நிஷ்களங்காய :
,, நிர் நித்ராய :
,, நிர்மலானந்த ஹ்ருதயாய :
,, நிரஞ்ஜனாய :
,, துரீயாய :
,, துரீயாதீதாய : 40

ஓம் மங்கள புருஷாய நம:
,, ஜிதேந்த்ரியாய :
,, ஸர்வ வ்யாதி ப்ரஸமனாய :
,, காம க்ரோத விவர்ஜிதாய :
,, ஸத்வகுண ஸௌந்தராய :
,, ஸஞ்சித ப்ராப்த ஆகாமி கர்ம ரஹிதாய :
,, ஸன்மார்க்க உபதேஸகாய :
,, தத்வ உபதேஸகாய :
,, ஸதா ஸ்மிதாய :
,, ஸங்கட ஹரணாய : 50

,, ஞான தண்டதாரிணே :
,, நிஸ் சேஷ்டாய :
,, நிர்விகல்பாய :
,, ஸர்வஸங்க பரித்யாக ஸீலாய :
,, சித்ஆகாஸாய :
,, அக்ஞான கல்பித ப்ரபஞ்சதூராய :
,, ஞானனந்த ரூபாய :
,, சின்முத்ர அபயவரத ஹஸ்தாய :
,, ஸ்வயம் ப்ரகாஸாய :
,, பாப புண்ய விவர்ஜிதாய : 60

,, மோஹன ஸ்வரூபாய :
,, பக்த வத்சலாய :
,, ஸிஷ்ட பூஜ்யாய :
,, ஸாமகான ப்ரியாய :
,, ஞான ஸௌர்யாய :
,, புவனேஸ்வராய :
,, மோக்ஷ வைராக்ய பாக்ய ப்ரதாயகாய :
,, ஞான ஐஸ்வர்ய ப்ரதாய :
,, ஸர்வ ஸ்வரூபாய :
,, நராகார தேவாய : 70

,, ப்ரம்ம வித்யா விலாசாய :
,, மஹா உத்ஸாஹாய :
,, ப்ரணவ ஸ்வரூபாய :
,, மோக்ஷ தாயகாய :
,, தீராய :
,, மனோதீதாய :
,, ஸ்ரீமத் சங்கராசார்யாவிச்சின்ன
குருபரம்பரா ப்ராப்த மூர்த்தயே :
,, ஜாத வேதஸே :
,, வாகதீதாய :
,, ஸர்வலோக ஸரண்யாய : 80

ஓம் த்ருட வ்ரதாய நம :
,, ஸர்வலோக பூஜ்யாய :
,, ஸர்வாசார்யாய :
,, ஞான ஸூர்யாய :
,, காஞ்சன வர்ணாய :
,, முக்தி நாரீப்ரிய காந்தாய :
,, ஸிஷ்ய ஜன பரிபாலகாய :
,, ப்ரம்மவித்யா ப்ரதாத்ரே :
,, கமண்டலு ஹஸ்தாய :
,, ஸித்தாரூடாய : 90

ஓம் ஸித்த வந்திதாய :
,, தம்ப ரஹிதாய :
,, ஏகாம்பராய :
,, ஸூதபல வர்ணாய :
,, அபரோக்ஷ அநுபவ ரூபாய :
,, காஷாய வஸ்த்திர தாரிணே :
,, தர்ம ப்ரவர்த்தகாய :
,, மாயாதீதாய :
,, அத்வைதபோதகாய :
,, ஷடக்ஷர மந்த்ர உபதேஸகாய : 100

ஓம் தக்ஷிணாமூர்த்தி பகவத்ஸ்வரூபாய நம :
,, ஸிஷ்யஜன ஹ்ருதயாபஹாரகாய :
,, க்ரஹாதி பதயே :
,, காமிதபல ப்ரதாயகாய :
,, கல்பத்ருமாய :
,, கல்பனாதீதாய :
,, பரப்ரம்மணே :
,, ஸத்குரு ஸ்ரீ ஞானானந்தஸ்வாமினே நம: 108

மங்களம்.

## ஆனந்தம் பெறவழி

கட்டுக்கடங்காமல் இச்சித்த பொருள் மீதெல்லாம் தாவி அலையும் மனத்தை அடக்கி ஆளுவது நல்லது. அவ்வாறு மனத்தை அடக்கி ஆளுவது ஆனந்தம் பெறச் சாதகமாகும். இந்த மனம் எளிதில் ஆய்ந்தறியக் கூடாதது. அதி சூட்சுமமானது. விரும்பிய பொருள் மேலெல்லாம் தாவி அலைவது. ஆகவே அறிவுடையோன் தன் சிந்தைக்கு நல்ல காவலிட வேண்டும். அவ்வாறு காவலிடுவது ஆனந்தம் பெறச் சாதகமாகும்.

## தமக்குத்தாமே பகைவன்

பாவசிந்தையும் அறியாமையும் கொண்டவர்களுக்கு வாழ்க்கையில் வேறு மாற்றார் தேவை இல்லை. தீவினை செய்து அதன் மூலம் பாவச்சுமையைக் கட்டிக் கொள்வதால் அவர்கள் தமக்குத்தாமே பகைவர்களாவார்கள்.

—புத்தபெருமான்

## அகத்தூய்மை

அகத் தூய்மை உடையோர்க்கு எல்லாமே தூய்மை. கெட்டழிந்தவர்களுக்கும் நம்பாதவர்களுக்குமோ எதுவுமே தூய்மை இல்லை. அவர்களுடைய அறிவும் மனச்சாட்சியும் கறைபடிந்திருக்கின்றன.

## நாக்கு

நாக்கு ஒரு சிறிய உறுப்பாய் இருந்தாலும் எவ்வளவு பெரிய விஷயங்களையும் பிரமாதப் படுத்தும். ஒரு சிறு நெருப்புப் பொறியே பெரிதாகக் கிளர்ந்து எரிவதைப் பார்.

— இயேசு

The Centre for the Latest Style
in

BORELLA

with the following new arrivals:-

- Sarees, Blouse Materials
- Dress Materials
- Shirtings, Suitings
- Childrens Garments & etc. etc.

**NEW SAREE ENTERPRISE**
No. 1191, Maradana Road,
Borella,
**COLOMBO-8.**

With best compliments from

*Design Textiles*

Stockists of Blouse Materials, Gilwear
And Mayura Garments.

**118 C, Galle Road, Wellawatte,**
**COLOMBO-6.**

**Telephone: 86644**

# மங்களம்

## மங்களம் (1)

ஓம் மங்களம் ஓங்கார மங்களம்
ஓம் நம: சிவாய குரவே மங்களம்

ந மங்களம் நகார மங்களம்
நாமரூப நீனே யாதே குரவே மங்களம் (ஓம்)

ம மங்களம் மகார மங்களம்
மஹாதேவ நீனே யாதே குரவே மங்களம் (ஓம்)

சி மங்களம் சிகார மங்களம்
சித்த புத்த நீனேயாதே குரவே மங்களம் (ஓம்)

வா மங்களம் வகார மங்களம்
வாமரூப நீனேயாதே குரவே மங்களம் (ஓம்)

ய மங்களம் யகார மங்களம்
எல்லா ரூப நீனேயாதே குரவே மங்களம் (ஓம்)

## மங்களம் (2)

அன்னை அன்னை அன்னை அன்னை அன்பினுக்கு மங்களம்
ஆதிசக்தி அம்பிகைக்கனந்தகோடி மங்களம்
என்னுளே விளங்கும் எங்கள் ஈச்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சிற்சிலைக்கு மங்களம்

உருகாதநெஞ்சம் உன்பால் உருகிற்றெவ்வுருக்கத்
தாலும்
பெருகாத கண்ணீர் ஆறாய்ப் பெருகிற்றப் பெருக்கால்
முன்னம்
கருகாத ஞானம் பூத்துத் தழைத்து இன்பக்
கனியாய்க் காணப்
பருகாத மதுரத்தேனைப் பருகினேன் – பயன்
பெற்றேனே (அன்னை)

எப்பிறப்பும் எய்தொணா இயற்கையான சித்தியை
இப்பிறப்பில் என் கரத்திசைந்தளிக்கும் சக்தியாம்
பஞ்சபூதபேதமாய் பிரபஞ்சமாய் ப்ரசண்டமாய்
விஞ்சினுள் எனக்கு யோக விறளித்த தன்மையால்

தாழ்வில்லாத தன்மையும் தளர்ச்சியற்ற வன்மையும்
வாழ்வினுல் பயன்களும் என்வாக்கிலே வரங்களும்
பக்தியிற் கசிந்தலைந்து பாடுகின்ற பான்மையும்
பாடுவோர்க்கனேக போக பாக்கியங்கள்
மேன்மையும்
என்றும் ஓங்க என் கரத்தியற்கையான சித்தியைத்
தந்து ஞான மூர்த்தியாய்த் தனித்துவைத்த
சக்தியாம் (அன்னை)

நாமகீர்த்தனம் பரந்து நாடெல்லாம் செழிக்கவும்
வேறிடாத இன்பம் பொங்கி வீடெலாம் விளங்கவும்
ஞான தீபமேற்றி யென்றும் நாமகீதம் பாடுவோம்
தர்மசக்தி வாழ்கவென்று சந்ததம் கொண்
டாடுவோம். (அன்னை)

## மங்களம் (3)

சத்குரு ஜெய சத்குரு ஜெய சத்குரு ஜெய மங்களம்!
சத்குரு ஸ்ரீ ஞானனந்த ஞானதேவா மங்களம்!!
சத்குரு ஜெய சத்குரு ஜெய சத்குரு ஜெய மங்களம்!
சத்குரு ஸ்ரீசிவரத்னகிரி ராஜனுக்கு மங்களம்!!
சங்கராய சங்கராய சங்கராய மங்களம்!!
சங்கரி மனோகராய சாஸ்வதாய மங்களம்!!
கஜானனாய மங்களம் ஷடானனாய மங்களம்!!
ஸ்ரீ வித்யாயை மங்களம் ஸ்ரீ துர்க்காயை மங்களம்!!
ரகுவராய மங்களம் வேணுகிருஷ்ணாய மங்களம்!!
ஸீதாராம மங்களம் ராதகிருஷ்ண மங்களம்!!
மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம்
,, ,,
சத்குரு ஜெய சத்குரு ஜெய சத்குரு ஜெய மங்களம்
சத்குரு ஸ்ரீ தத்தாத்ரேய ராஜனுக்கு மங்களம்
சத்குரு ஜெய மங்களம்......

## மங்களம் (4)

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

ஸுரகண நாதருக்கும் சரவண பவனுக்கும்
உரகாபரணனுக்கும் கிரிஜா ரமணனுக்கும்
மங்களம் மங்களம் மங்களம்

ஜெய ஜெய ,, ,, ,,

வாணிக்கும் சாம்பவிக்கும் வைகுண்ட வாஸினிக்கும்
வேங்கடரமணனுக்கும் விட்டலராயனுக்கும்
மங்களம் மங்களம் மங்களம்

ராதா விலோலனுக்கும் ராஜகோபாலனுக்கும்
ரமணீ யநாமனுக்கும் ராமாபிராமனுக்கும்
மங்களம் மங்களம் மங்களம்

ஸத்குரு நாதருக்கும் ஸதாசிவேந்திரர்க்கும்
ஸத்குரு நாதருக்கும் ஞானனந்தருக்கும்
ஸன்மார்க்க போதருக்கும் ஸதாராம தாதருக்கும்
மங்களம் மங்களம் மங்களம்

## மங்களம் (5)

வாழ்க சுயம்பிரகாசம் வாழ்க வாழ்கவே
சூழ்க சுத்தாத்ம சக்தி சூழ்க சூழ்கவே
1. எழு லோகம் ஜீவன்முக்தி இன்பம் பொங்கவே
இதயமாகும் இறைவனுகி எல்லாம் ஓங்கவே

2. பாழ்மன அகந்தை வாழ்வு பாழ்பட்டொழியவே
பரம ஸச்சிதானந்தாத்ம பால் பொழிகவே

3. தட்டில்லாத நித்யஜீவ தத்வமோங்கவே
தன்மயத்தில் சின்மயம் தழைத்திலங்கவே

4. எட்டுதிக்கும் ஹம்ஸஸோஹம் எதிரொலிக்கவே
எல்லாம் ப்ரும்மம் என்னும் உண்மை
இறைவகிக்கவே

வாழ்க சுயம்பிரகாசம் வாழ்க வாழ்கவே
சூழ்க சுத்தாத்ம சக்தி சூழ்க சூழ்கவே.

## மங்களம் (6)

எல்லோரும் நன்ருயிருக்க வேண்டும்—இதற்கு
ஈசன் கணேசன் அருளல் வேண்டும்
மந்தஸ்மித முகாம்போஜம் மஹனீய குணர்ணவம்
மதுரா பாஷிணம் சாந்தம் ஸர்வபூத தயாபரம்
பக்த வாத்ஸல்ய ஜலதிம் பரமானந்ப ருக்ரஹம்
ஞானனந்தம் ப்ரன்னேஸ்மிநிர்மலக் ஞானஸித்தியே

## மங்கள கீதம் (7)

நம; பார்வதி பதயே—ஹரஹர மஹாதேவ
ஜெய்! ஜானகீகாந்தஸ்மரணே ஜெய் ஜெய் ராம் ராம்
... கோபிகா ஜீவனஸ்மரண கோவிந்தா கோவிந்தா
... வல்லீ தேவசேனு காந்தஸ்மரணே
சுப்ரமண்யா ஓம்

... புண்டரீகவரதா—ஹரிவிட்டலே
... ஆஞ்சனேய ஸ்வாமிகி ஜெய்
... பக்ஷிராஜனுகி ...
... ஸர்வக்ஞ மூர்த்திகி ...
... சங்கராசாரிய ஸ்வாமிகி ...
... ராமானுஜ ஸ்வாமிகி ...
... மத்வஸ்வாமிகி ...
... ஸமஸ்த ஸாதுமண்டலிகி ...
... ... பாகவதலுகு ...
... ... கோடி சந்துனுகி ...
... **ஸ்ரீ ஞானனந்த சத்குரு மஹராஜ்கீ—ஜே!**
... **ப்ரம்மைவ ஸத்யம்** **ஓம்**
... ஞான விநாயக மூர்த்திகி ஜெய்
... ஞான ஸ்கந்த மூர்த்திகி ...
... ஞான சரஸ்வதி தேவிகி ...
... ஞான புரீச ஸ்வாமிகி ...
... ஞானம்பிகை தேவிகி ...
... ஞான வேணு கோபால மூர்த்திகி ...
... ஞான ராமச்சந்த்ர மூர்த்திகி ...
... ஞான துர்க்கா மாதாகி ...
... ஞான சத்குரு மூர்த்திகி ...
... ஞானனந்த சத்குருநாத் மஹராஜ்கி ...
... ஞான ஆஞ்சனேய மூர்த்திகி ...

**With best compliments from**

**LALITHA**
Sovereign House

*Quality Jewellers*
**No. 1209, Maradana Road,**
**Colombo.8**

*Guaranteed Gold Jewellery by Orders Promptly executed.*

With best compliments from

**UDHAYAS JEWELLERS**

Quality Jewellery

No. 1213, Maradana Road, BORELLA.

COLOMBO-8.

---

With best compliments from

**IMPERIAL GROCERIES**

NO. 1211 MARADANA ROAD,

BORELLA.

*DEALERS IN:*

*Groceries, Frozen Foods, Oilman Goods and Stationeries.*

**GRUNDIG**
TOP QUALITY IN
SOUND
and
VISION
*RADIOS, TAPERECORDERS, HIFI EQUIPMENT*
*TELEVISION*

## St. Anthony's Hardware Stores Ltd.,
516, Skinners Road South, Colombo-10.

and

## GRUNDIG SHOWROOMS

## Y.M.B.A. Building, Fort & 152, Galle Road, Colombo-3.

# HOME SCIENCE CENTRE

**Diploma Course and Certified Course in:**

**Cake making and Modern Cake Decoration, including Moulding, Modelling, gum paste etc.**

(a) General Cookery including short-eats, Puddings, Courses Savoury rice, Salads, Wines etc.

(b) Floristry - Making - Garlands - Hair- Sprays - Bouquets - Brides F lowers etc.

(c) Scientific Dressmaking

(d) Painting: Fabric, Silk, Glass, Canvas, Pen painting etc.

(e) Flower Making: Cloth, Wax & Paper.

(f) Flower Arrangement: Western and Japanese.

(g) Handicrafts - Crochet, Tatting, Knitting, Mock Smocking etc.

(h) Batik Printing and Tie and Dye.

(i) Hair Styles.

(j) Machine & Hand Embroidery.

*FURTHER PARTICULARS CAN BE HAD FROM:*

**Mrs. HAIMA SOMASEKARAM**
*PRINCIPAL*
DIPLOMA HOLDER
TRAINED IN LONDON - MALASIA - INDIA.

**"KRIPA"**
**34, Pamankade Lane,**
**COLOMBO-6**
**Telephone: 82744**

With best Compliments from

# SUJATHA JEWELLERS

1197, Maradana Road,

**BORELLA.**

Telephone: 92009

With best compliments from

# RADIO & T. V. TRADE

Dealers in Radios, Radio Cassette, T. V., Watches Etc.

**Don Carolis Building, Keyzer Street,**

**COLOMBO-11.**

இச்சிறப்பு மலர் ஞானானந்த சேவா சமாஜம் சார்பாக அதன் செயற்குழுவினால் தொகுக்கப்பட்டு,
நாவலப்பிட்டி ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.